Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

දිනමුරසු වාරමලර්

ஏப்.03-09,1994 ரூபா 8/50

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 45



## விஜிதமுனியின் அரசியல் முதிர்ச்சி!

அரசியல் அலசல்

மகாபாரதம்

வாவ்—வாவ் அதிசயப் படங்களோடு தகவல் பெட்டி

## ஆளும் கட்சியின் அடுத்த முடிவு என்ன?

எக்ஸ்ரே ரிப்போர்ட்

ரசிகன் தரும் இலக்கிய நயம்

சூடான சினி விசிட்

## பூகம்பத்தில் பிறந்த குழந்தை- ஆச்சரிய அனுபவம்!

# வாயினால் அறிக்கையிடுதல் இருதயத்தில் விசுவாசித்தல்

"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். ரோமர்-10:9

நான் வாயினாலே அறிக்கையிட வேண்டும். நான் அவ்விதம் அறிக்கையிட்டிருக்கிறேனோ? கடவுள் மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பின இரட்சகர் இயேசுவை என்று அவரில் நம்பிக்கையை வெளிப் படையாக ஒப்புக்கொண்டிருக்கிறேனா? கடவுள் எதிர்பார்க்கும் விதத்தில் ஒப்புக்கொண்டிருக்கிறேனா? இவ்வினாக்களுக்கும் உண்மையாக விடை அளிப்பேனாக!

இருதயத்தில் விசுவாசித்தலும் அவசியம் என்று மேலே கூறப்பட்டுள்ளது. உயிர்த் தெழுந்த இயேசு கிறிஸ்துவில் நான் மனமார நம்பிக்கை வைத்துள்ளேனா? நான் இரட்சிக்கப்படுவதற்கு அவர் ஒருவரே நம்பிக்கை என்று அவரில் நம்பிக்கை வைத்திருக்கிறேனா? இது என் உள்ளத்திலிருந்து தோன்றும் விசுவாசமா? கடவுளுக்கு முன்பாக விடையளிப்பதாக எண்ணி உண்மையாக விடையளிப்பேனாக.

நான் கிறிஸ்துவை அறிக்கையிட்டு அவரில் விசுவாசித்திருக்கிறேன் என்று ஒப்புக்கொண்டால் நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன். தலைப்பில் கூறப்பட்டுள்ள வாக்கியம் நான் இரட்சிக்கப்படலாம் என்று சொல்லவில்லை. வானத்தில் சூரியன் எவ்வளவு தெளிவாகக் காணப்படுகிறதோ அதைப் போல் மிகத் தெளிவாக "இரட்சிக்கப்படுவாய்" என்று கூறுகிறது. நான் விசுவாசியாகவும், அறிக்கையிடுகிறவனாகவும் இந்த வாக்குறுதியை எனக்குரியதாக ஏற்று, இப்பொழுது, வாழ்க்கை முழுவதும், மரணமடையும்போதும், நியாயத்தீர்ப்பு நாளிலும் கடவுளின் சமூகத்தில் நின்று மன்றாடலாம். பாவத்தின் பழியிலிருந்தும், ஆற்றலிலிருந்தும் தண்டனையிலிருந்தும், இறுதியாகப் பாவத்திலுமேயிருந்து நான் இரட்சிக்கப்பட வேண்டும். "நீ இரட்சிக்கப்படுவாய்" என்று கடவுள் கூறியிருக்கிறார். நான் அதை நம்புகிறேன். நான் இரட்சிக்கப்படுவேன். நான் இரட்சிக்கப்பட்டிருக்கிறேன். சதாகாலங்களிலும் கடவுளுக்கு மகிமை உண்டாவதாக.

குணத்தி பிரபா-கனடா.

# ஆன்மீகம்



# அதிகமாகச் சிந்தனை செய்யுங்கள்

"எனது உம்மத்தோர்களே! உங்களுக்கு ஐந்து விஷயங்களை உபதேசிக்கின்றேன். அவைகளை அதிகமாகச் சிந்தனை செய்து கொள்வீர்களானால், உங்களுக்கு இறைவனின் அன்பும் அருளும் உண்டாகும்" என நபிகள் பெருமானார்(ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

1. ஜனங்கள் உங்களுக்கு செய்த உபகாரங்களை அதிகமாகச் சிந்தனை செய்வதைவிட, அல்லாஹ் உங்களுக்குச் செய்திருக்கும் உபகாரங்களை அதிகமாகச் சிந்தனை செய்யுங்கள்.
2. இம்மையை அதிகமாகச் சிந்தனை செய்வதைவிட அதாவது இவ்வுலகின் இன்பங்களை நினைப்பதைவிட மறுமையின் இன்பங்களை அதிகமாக நினையுங்கள்.
3. நீங்கள் செய்திருக்கும் நற்கிரியைகளை அதிகமாகச் சிந்தனை செய்வதைவிட, உங்களின் நிகழ்ந்துள்ள துர்க்கிரியைகளை அதிகமாகச் சிந்தனை செய்யுங்கள்.
4. நீங்கள் உங்களின் ஜீவியத்தை அதிகமாகச் சிந்திப்பதை விட, உங்களுக்கு நிகழப்போகும் மரணத்தை அதிகமாகச் சிந்தனை செய்யுங்கள்.
5. பிறருடைய குற்றங் குறைகளை அதிகமாகச் சிந்திப்பதைவிட, உங்களின் குற்றங்குறைகளை அதிகமாகச் சிந்தித்துத் திருத்திக் கொள்ளுங்கள்.

(மிர்க்காத்துல் குலூப்)

தொகுப்பு: எஸ்.ஸரீனா காமில்-புத்தளம்.

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
சிங்கள-தமிழ் புத்தாண்டும்
வழக்கம்போலவே
வருமா சமாதானம் என்கின்ற
எதிர்பார்ப்போடு உதிக்கப் போகிறது.

இப்படி எத்தனை புத்தாண்டுகள்?
எதிர்பார்ப்புக்கள் மட்டுமே
நிரந்தரமாய் நிலைத்து நிற்கின்றன.

தேர்தல் வெற்றிகளை பற்றி மட்டுமே
சிந்தித்துக் கொண்டிருந்தால்
தேசத்தின் விமோசனத்திற்கான
தீர்வுகளைத் தேடிப் பெற முடியாது.

வாக்குகளை வசப்படுத்துவதற்காக
ஏட்டிக்குப் போட்டியான நிலைப்பாடுகள்தான்
இதுவரை காலமும்
இன ஒற்றுமைக்கும்
இனப் பிரச்சனையின் தீர்வுக்கும்
வேட்டுவைத்துக் கொண்டிருக்கின்றன.

தொட்டுவிடும் தூரத்தில் தீர்வுகள் வரும்போது
அவற்றைத் துரத்திவிடும் வகையிலே
கட்சி மோதல்களும், அரசியல் பூசல்களும்
தங்களை அடையாளம் காட்டி வந்திருக்கின்றன.

அரசியல் இலாப சுயநல நோக்கம்
மனங்களில் படிந்துவிடும் போது
அரசியல் தலைவர்களால்
மனம் திறந்து பொது முடிவு காண
முடிவதில்லை.

இத்தனை தூரம்-
இனப்பிரச்சனை விசுவரூபமெடுத்த பின்னும்
அரசியல் தலைவர்களின்
மனக்கதவுகள் இதுவரை திறக்கவில்லை.

ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுகிறார்கள்.
ஆனால் ஒருத்தர்கூட
உருப்படியான தீர்வு என்னவென்று
ஒரு போதும் சொல்லியதில்லை.

தமிழ் அமைப்புக்களும்
திசைக்கொன்றாய் நின்று
ஒருவரை ஒருவர் திட்டித்
தீர்த்துக்கொள்கின்றன.

பேச்சுக்கள்கூட ஆரம்பிக்கவில்லை.
ஏனைய தமிழ் அமைப்புக்களுக்கு
பேச்சு மேசையில் இடமில்லை என்று
புலிகள் உரத்துச் சொல்கிறார்கள்.
அந்தளவுக்கு வேற்றுமையும் விரோதமும்
வேர்விட்டு வளர்ந்துகொண்டிருக்கின்றன.
தாமே தமிழ் மக்களது
தனிப்பிரதிநிதிகள் என்று நிரூபிக்க
தீர்வுக்கு பின்னர் புலிகளுக்கு
எத்தனையோ வழிகள் உண்டு.
அதைவிடுத்து-அவசர அவசரமாக
ஏனைய தமிழ் அமைப்புக்களுக்கு
இடமில்லை என்று உரத்துச் சொல்வது
பொதுவான கருத்தை ஏற்படுத்த
தோதான வழிவகையை உருவாக்காது.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர்
தனது பதவியை துறந்திருக்கிறார்.
வடக்கு-கிழக்குப் பிரிப்புக்கு
வகையான திட்டம் சொன்னவர்.
பின்னர்-
மனநிலை பாதிக்கப்பட்டதாகப்
பலராலும் பேசப்பட்ட பிரதிநிதி அவர்.

எப்போதோ பிறநாடு சென்று
பேசாமல் இருந்துவிட்டு
தன் சொந்த உடல், உளக் காரணங்களால்
இனி பதவிக் கதிரையில் இருக்க முடியாது
என்பது உறுதியான பின்னர்
தியாகியாக வேசம் புனைந்துகொண்டு
அனைவரையும் ஏமாற்ற ஆவல்பட்டிருக்கிறார்.

அவர் பதவி ஏற்றது பற்றியும்
மக்கள் ஆர்வம் காட்டியதில்லை.
அவர் இன்று பதவி துறந்தது பற்றியும்
எவரும் கவலைப்படவில்லை.

தரம் தாழ்ந்த அரசியலின்
ஒரு சின்னமாக இருந்தவர்
தானாகவே விலகிப் போனமை
வரவேற்கப்பட வேண்டியதல்லவா?
வரவேற்போம்.
ஆனால் அதற்காக அவர் சொன்ன
காரணங்கள்
அழகான பொய்கள்.
பாராளுமன்றப் பதவிகளை ராஜினாமாச்
செய்பவர்கள் எல்லாம்
தந்தை செல்வாவாக முடியாது.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

தினமுரசு போன்: 820265

## கவிதைப்போட்டி இல-42

களம் காண வந்த கவிதைகளில் வெற்றிக்குரியதுவும்-வியக்கப்பட்டவையும்.

### பரிசுக்குரிய கவிதை

**சுமை யுத்தம்**

அன்னைக்குப் பிள்ளை தான்
ஒரு சுமையல்லப் பார்
இன்றைக்கும் பிண யுத்தம் தான்
ஜெக வாழ்வுக்குச் சுமை கேள்.

யாழ்-ஜன்ஸி கபூர்
ஹரிஸ்சந்திர மாவத்த
அநுராதபுரம்.

### வியக்க வைத்தவை

**தேடல்**

தாயும்
சேயும்
தேடுவது!
சந்தோஷமா?...
நம்தேஷமா?...

ஏ.எம்.அப்துல் றகுமான்
சிறாஜ் நகர்.

**சிரிப்பு**

விதியை நொந்துகொண்டு
வீதி வலம் வரும்
காயம்பட்ட நெஞ்சங்களின்
கானல் சிரிப்பு!

செல்வன்.இளங்கோவன் தமிழ்வண்ணன்
இறக்குவானை.

**முள் வளையம்**

குட்டிக் குனியவைக்க
குறி வைத்து காத்திருந்து
தட்டிப் பறிக்கும் கூட்டம்
தலை தடவ பார்த்திருக்கும்
எட்டிக் கடக்க வழி
என் மகனே...நான் சொல்வேன்.

எஸ்.விக்னேஸ்வரன்
கல்முனை-01.

**தாயன்பு**

மலைபோல வந்தாலும் வறுமை,
மலையாது இந்த தாயுள்ளம்.
தறி கெட்டு வந்தாலும் யுத்தம்
தணியாது இந்தத் தாயன்பு.

மூதூர் கமல்ராஜ்.

கண்ணே கண்ணே சிரித்திடு
கவலை மறப்போம் சிரித்திடு
அகதி நிலை மாறவும்
அவல வாழ்வு தீரவும்
அமைதி அன்பு ஓங்கவும்
கண்ணே கண்ணே சிரித்திடு
கவலை மறப்போம் சிரித்திடு.

அன்பு தா.வடிவேல்
செங்கலடி.

**இல்லை சோகம்**

வருமானம் தொழிலிற் சோரம்.
வாழ்வினிலே வசதி சோரம்
உணவோடு ஊட்டம் சோரம்
மதுவோடு கணவன் சேரும்
மலையகத்தின் லயத்தில் சோகம்
தாயோடு தனயன் சேரும்
தருணத்தில் இல்லை சோகம்.

தர்ஷிக்கா கனகசிங்கம்
மட்டக்களப்பு.

**புன்னகை**

வரண்ட நிலத்தில்
சிறு பூவின்
புன்னகை!

பி.சி.அன்ரன்-மட்/கூளாவடி.

**என்ன பயன்?**

பாசத்தை
நானூட்டி(ப்)
பயன் என்ன?
தேசத்தில்...
நீ வாழ
நேசக்கரத்தை
நீட்டிடுவோர்
இல்லாதவரை.

என்.கே.சலீம்
இக்கிரிகொல்லாவ.

சேயின் பசியை
தாயறிவாள்!
இத்தாயின் பசியை
யாரறிவார்?

ஆர். பாலகிருஷ்ணன்
மாத்தளை.



**ஆகார மொழி**

உண்ணுடா
ஒரு வேளைச் சோறுதான்
மறுவேளைக் குணவு
மறுபடியும்
"கோமாரி" கப்பல்
கொண்டு வந்தால்தான்!

வை.சித்திக்கிருஷ்ணா
பாண்டிருப்பு-01.

**சுமைதாங்கி**

பாரில் முளைத்த செடி
போரின் சீற்றத்தால்
ஒரு பிஞ்சைத் தாங்கி
சுமையில் வாடுதுபார்

யூ.கிருஷ்னவி
திருகோணமலை.

**எச்சரிக்கை**

இணைப்பில் மகிழ்ந்திருக்கும்
உங்களைப் பிரிக்கவும்
சர்வஜன வாக்கெடுப்பு
வந்து விடும்-ஜாக்கிரதை!

எஸ்.ரி.எம்.பஸ்வாக்
கல்முனை-05.

**நிர்வாண வாழ்க்கை**

புன்னகை புரியும்
பிஞ்சு இதயத்துக்கு
எதிர்கால
நிர்வாண வாழ்க்கை
தெரிகிறதா?

ஏ.பீ.மன்சூர்-கெகுணகொல்ல.

**வரந்தர வேண்டுமம்மா**

வெட்டிக் குவித்த நெற்கதிர் போல்-போரில்
கூட்டுக்குவித்த உயிர்கள் போதுமம்மா!
நமது புன்னகை நிரந்தரமாகிட
வரந்தர வேண்டுமம்மா!

மொனறாகலை-ஜெகதீஸ்.

**அம்மணம்**

அம்மணப் போர் தொடருமட்டும்
அம்மணமே மிச்ச மய்யா.

ச.மகாலிங்கம்-வெளிமடை.

## கவிதைப் போட்டி இல-45



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.

அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 09.04.1994.

—முகவரி—

கவிதைப் போட்டி இல: 45
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

# வாசகர் சாலை

நேசக்கரம் நீட்டிவரும் இனிய முரசே! நீ தரும் மகாபாரதம், ரசிகனின் இலக்கிய நயம், சினி விசிட், தேன்கிண்ணம், லேடிஸ் ஸ்பெஷல், தொடர்கதை அனைத்தும் என் நெஞ்சை கொள்ளை கொண்டு விட்டன. உனக்கு நன்றி சொல்லத் தெரியாமல் தவிக்கின்றேன். முரசே உன் சேவை நிலைபெற்று வளர என் வந்தனங்கள்.

மொகமட். நிலாப்டீன்-மரக்கலகட்டுகெலியாவ.

•

வாரந்தோறும் வாசித்தேன் தினமுரசை, வாழ்த்துச் சொல்ல வார்த்தைகள் இங்கு இல்லை. வானிலே மிதந்து வரும் மங்கையைப்போல், வாரமொரு முறை வந்து நீ என் கரங்களில் அமர்வாயே... நானுன்னை சுவைத்து ரசிப்பேனா? ருசிப்பேனா? புசிப்பேனா? என்னவென்று நானுரைப்பேன்.

ஜெகப்பிரியா தங்கத்துரை
சவளக்கடை-07.

•

அன்பின் முரசே!

அழகான வண்ணப்படங்களை மட்டுமல்ல. செய்திகளையும் வெகு நுட்பமாக வெளியிட்டு கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கிறாய். உன் சேவைக்கும் உன் வளர்ச்சிக்கும் என் இனிய வாழ்த்துக்கள்.

செல்வி.எம்.விஜி-சப்புமாள்கந்தை.

இனித்திடும் தினமுரசே!

நீ என் கரங்களில் வாரம்தோறும் தவழ்ந்து பக்குவமாய் பல அம்சங்களை இதய நிறைவோடு தந்துவருகிறாய். உன் அத்தனை அம்சங்களும் பல்லாண்டு காலம் வாழ எனது பல்லாண்டு வாழ்த்துக்கள்.

கே.சத்தியசீலன்-சித்தாண்டி.

•

என் இனிய தினமுரசே,

வாரம் ஒரு முறை நீ மலரும்போது என் உள்ளத்திலும் மகிழ்ச்சி மலர்கள் மலர்கின்றன. உனக்கு எனது உள்ளத்தின் ஆழத்தால் வாழ்த்துக்கள். வாழ்க தமிழ்! வளர்க உன் பணி!!

தமிழன்பன்-ஜே.எஸ்.ரெஜினோல்ட்-வவுனியா.

•

தித்திக்கும் தேன் முரசே!

உன் வரவால் நான் சிந்தை



குளிர்ந்தேன். முரசே நீ தாங்கி வரும் அத்தனை உள்ளீடுகளும் தேனிலும் இனிய சுவையே! எங்கள் ஆர்வத்தை தூண்டும் குறுக்கெழுத்துப் போட்டியும் எங்கள் சிந்தனா சக்திக்கு வேலை கொடுக்கிறது. அதுபோல் சினிமாப் பகுதியும் எமக்கு சுடச்சுட தகவல்களை தருகிறது.

செல்வி.நஸீராஜ் சம்சுதீன்-கந்தளாய்.

•

தினமுரசு தரும் சூப்பரான தகவல் பெட்டி செய்திகள் பாதுகாக்கப்பட வேண்டியவை. எப்படி நீங்கள் மட்டும் புதுசு புதுசாய் முந்திக்கொள்கிறீர்கள்?

எம்.மகேந்திரன்
இந்தகல எஸ்டேட் மேற்பிரிவு.

•

அறியாதவையை அறியத்தரும் முரசே!

நீ வாரம்... வாரம் வழங்கும் பல அதிசயங்களை நாள்தோறும் வழங்க மாட்டாயா என்று கேட்கும் இரசிகர்களின் கேள்விக்கு சீக்கிரமாக பதில்கூறு. உன் பணி என்றும் உயர என் வாழ்த்துக்கள்.

செல்வி.எஸ்.மஞ்சுளா-நமுனுகுல பஜார்.

•

எத்தனை மலர்கள் இப் புவியில் மலர்ந்தாலும் எம் இனிய முரசாகிய உனக்கு ஈடாகுமா? நீ வாராவாரம் தாங்கி வரும் ரசிகன் எழுதும் கொலை விழும் நேரம், இலக்கிய நயம், சிறுகதைஎள், கவிதைகள் இன்னும் பல சுவை அம்சங்கள் என் இதயத்தை கொள்ளை கொள்கின்றன. வளரட்டும் உனது சேவை.

சர்மிளா எம்.சுல்தான்-மூதூர்-01.

•

அன்பு முரசே
அறுசுவை அமுதே!
கொட்டும் முரசே!
தொட்டு விடு முரசே.
எட்டு திக்கையும்-உன்
இனிய ஆக்கங்களால்
தொட்டு விடு முரசே.

செல்வி.மஞ்சுளா சத்திவேல்
இங்கிரிய.

•

உங்கள் பத்திரிகை வாரம்தோறும் படிக்கின்றோம். எல்லாம் நல்ல செய்திகள். சிந்தனைக்கு ஏற்ற பத்திரிகை என வாழ்த்துகின்றேன்.

கே.ஜெகதீசன்
MOTOREN STR-21, 8005.ZURKH
SWITZERLAND.

•

என்றும் என் மனதில் மட்டுமல்லாமல் ஆயிரக்கணக்கான வாசகர்கள் மனதில் நிறைந்து இன்ப மூட்டும் வாரமலரே!

நீ வாரா வாரம் அள்ளித் தந்து தித்திக்க வைக்கும் அத்தனை அம்சங்களும் பிரமாதம். முக்கியமாக ரசிகன் எங்கள் மனதை கொள்ளை கொண்டு விட்டார். சுவை மிக்க பல அம்சங்களை சுமந்து வந்து எங்களை இன்பக் கடலில் தத்தளிக்க வைக்கும் தின முரசே! நீ வாழ்க நீடூழி! வளர்க உன் சேவை!

ஜெ.ஜீவலோஜனி-மட்டக்களப்பு.

•

தேன்கிண்ணம் எனக்கு தேன் சுவைபோல் என் மனதை நெகிழவைக்கிறது.

பஜ்ரியா உமர்லெப்பை-புதிய காத்தான்குடி-06.

•

அன்பின் அன்பு தினமுரசே!

நீ அன்பாக தரும் செய்திகளை வாசித்து வாசித்து என் மனதை உன்னிடம் கொடுத்து விட்டேன். நீ தரும் மகாபாரதம் மிகவும் சிறப்பாக உள்ளது. இதுபோல் இன்னும் பலசுவையான செய்திகளை தந்து என்னையும் என்னைப்போல நண்பர்களையும் மகிழ வை முரசே.

செல்வநாயகன் சந்தனம்-நுரைச்சோலை.

# பாராளுமன்ற—ஜனாதிபதித் தேர்தல்களில் புதிய கூட்டு?

## சுதந்திரக் கட்சிக்கு ஆதரவளிக்கத் திட்டம்!

# ஜனாதிபதி தேர்தலில் பொதுவான தமிழ் வேட்பாளர்!!

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலிலும், ஜனாதிபதித் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான நிலைப்பாட்டை மேற்கொள்ள தமிழ் அரசியல் கட்சிகள் சில முடிவெடுத்துள்ளதாக தெரிகிறது.

இனப்பிரச்சனையே இல்லை என்றும், வடக்கு-கிழக்கு பிரிப்பில் உறுதி தெரிவித்தும் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா தொடர்ந்து கருத்துத் தெரிவித்து வருவதால் தமிழ் கட்சி வட்டாரங்களில் அவர் மீதான நம்பிக்கை யீனங்கள் அதிகரித்து வருகின்றன.

சமீபகாலமாக ஜனாதிபதி தெரிவித்து வரும் கருத்துக்கள் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே ஐக்கிய தேசியக் கட்சி மீது அதிருப்திகளை தோற்றுவித்து வருகின்றன.

முன் எப்போதும் இல்லாதவகையில் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தியை சம்பாதிக்கத் தொடங்கியுள்ளது.

கடந்த காலத்தில் சிறி லங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வரும்போது தமிழரசுக் கட்சியும், பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமது போராட்டங்களை தீவிரமாக்குவதுண்டு.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கங்கள் பதவியில் இருந்த போது தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ் போன்றவை தமது போராட்டங்களை தளர்த்தியதுடன், அரசாங்கத்திலும் அங்கம் வகித்தனர். ஆதரவளித்தனர்.

1977ம் ஆண்டுக்கு முன்னர் சிறி லங்கா சுதந்திரக் கட்சி பதவியில் இருந்தபோது தமிழர் விடுதலைக் கூட்டணி தீவிரமான அரசியல் போராட்டங்களை நடத்தியது.

பின்னர் 77 பொதுத் தேர்தல் முடிந்து ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வந்தது. பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி 77க்கு முன்னர் செய்தது போல் தனது போராட்டங்களைத் தீவிரமாக முன்னெடுக்கவில்லை.

ஜே.ஆர். நல்லவர், வல்லவர் என்று எதிர்க்கட்சி தலைவராக இருந்த அமரர் அமிர்தலிங்கம் பாராட்டுகிற அளவுக்கு எதிர்ப்பு வேகம் குறைந்து போனது.

பின்னர் பிரேமதாசா ஜனாதிபதியான பின்னர் புலிகள் அவரோடு பேசினார்கள். பிரேமதாசாவை நம்புகிறோம். அவர்மீது நம்பிக்கையுண்டு என்று புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அப்போது யாழ்ப்பாணத்தில் பேட்டி ஒன்றில் கூறியிருந்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியோடு மட்டுமே தொடர்ந்து நல்லுறவுகளைப் பேணி வந்தது.

ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளில் பெரும்பாலானவையும், முஸ்லிம் காங்கிரசும் ஜனாதிபதியாக பிரேமதாசா இருந்த வரைக்கும் சுமுகமான உறவையே கொண்டிருந்தன.

அரசாங்கத்தில் அமைச்சராக உள்ளவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் மிக நீண்டகால நண்பராக இருப்பவருமான திரு.தொண்டமான் தென் மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் பற்றி மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார்.

இனவாதத்துக்கு விழுந்த அடி என்று கருத்துச் சொல்லியிருக்கிறார்.

மலையகத்தில் அரசியல் பலம் வாய்ந்த தனது நீண்டகால நண்பனைக்கூட ஐக்கிய தேசியக் கட்சி கசப்படைய வைத்திருக்கிறது.

முஸ்லிம் காங்கிரசும் பகிரங்கமான விரோத நிலைப்பாட்டை வெளியிட்டு வருகிறது.

புலிகள் அமைப்புக்கு எதிராக படையினரோடு இணைந்து செயற்படும் பண்டாரநாயக்கா தென் மாகாண சபைத் தேர்தலின் பின் ஆளும் கட்சிக்கு சவாலான ஒரு இளம் தலைவராகத் தோற்ற மெடுத்துள்ளார்.

இந்த நிலையில் எதிர்வரும் பாராளு மன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றில் தமிழ் பேசும் மக்களது வாக்குகள் தமிழ் பேசும் பொது வேட்பாளர் களுக்கே கிடைக்க வேண்டும். அதற்கேற்ற சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்றொரு கருத்து தமிழ் அரசியல் கட்சி வட்டாரங்கள் சிலவற்றில் மேலோங்கியுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஜனாதிபதி தேர்தலில் பொதுவான தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் கருத்தை கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

## இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முஸ்லிம் காங்கிரஸ் நிலை என்ன?

இலங்கையின் அரசியல் வரலாற்றில் சிறி லங்கா சுதந்திரக் கட்சியை விட ஐக்கிய தேசியக் கட்சி தான் தமிழ்-முஸ்லிம் அரசியல் கட்சிகளது நம்பிக்கைகளை கூடுதலாக பெற்று வந்திருக்கிறது.

ஜனாதிபதியாக பிரேமதாசா இருந்த போது சிறி லங்கா சுதந்திரக் கட்சிக்குள் உருவான 'ஹெல உறுமய' போன்ற இனவாத அமைப்புக்கள் தமிழ் பேசும் மக்களிடம் வெறுப்பையே ஏற்படுத்தின. அதனால் பிரேமதாசா ஜனாதிபதியாக இருப்பதே சிறந்தது என்ற கருத்தே பரவலாக இருந்தது.

ஆனால் இப்போது நிலமை மாறி வருகிறது.

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு அவசியம் என்னும் கருத்து வேரூன்றியுள்ள நிலையில் அதற்கு முற்றிலும் மாறாக ஜனாதிபதி தெரிவித்து வரும் அதிரடியான பேச்சுக்கள் ஐக்கிய தேசியக் கட்சியை புதிய தோற்றத்தோடு சித்தரிக்கின்றன.

தமிழ் அமைப்புக்கள் ஜனாதிபதி பிரேமதாசா உள்ளவரை அரசாங்கத்திற்கும் ஆதரவாகவே பேசி வந்தன.

இப்போது எந்தவொரு தமிழ் அமைப்பும் அரசாங்கத்தின் கொள்கைகளை ஆதரித்து கருத்து வெளியிடுவதை காண முடியவில்லை.

சமீபத்திய தென்மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் அடுத்துவரும் பாராளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் பற்றிய புதிய கணிப்பீடுகளை உருவாக்கி வருகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி தனது தேசியக் கொள்கையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த தவறினால் வாக்காளர்களிடம் தனக்குள்ள செல்வாக்கை இழந்துவிடும் நிலையில் இருப்பதாக அரசியல் பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

இதற்கிடையே மேல் மாகாண சபை முதல்வர் திருமதி சந்திரிக்கா குமாரணதுங்க

சமீபத்தில் கொழும்பு பண்டாரநாயக்கா நினைவு மண்டபத்தில் எதிர்வரும் தேர்தல்களில் பொது வேட்பாளர்களை நிறுத்துவது தொடர்பான இரகசிய ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் ஆதரவையும் பெற்று ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்துவது.

அவ்வாறு நிறுத்தப்படும் பொது வேட்பாளருக்கு கணிசமான வாக்குகள் கிடைத்தால் பெரும்பான்மை இன கட்சிகளது வேட்பாளர்கள் ஐம்பது வீதத்திற்கு குறைவான வாக்குகளையே பெறவேண்டியிருக்கும்.

அந்த நேரத்தில் பெரும்பான்மை இன கட்சிகளின் வேட்பாளர்களில் ஒருவருக்கு பொதுவான தமிழ் வேட்பாளர் பெற்ற வாக்குகள் தேவைப்படும். அந்த பொது வேட்பாளர் ஆதரவு தெரிவிப்பவரே ஜனாதிபதியாக முடியும்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு தேவையான வாக்குகளை பெற முடியாத ஒரு வேட்பாளர் மற்றொரு வேட்பாளர் பெறும் வாக்குகளது ஆதரவு பெற்று ஜனாதிபதியாக சட்டத்தில் இடமுண்டு.

எனவே- பொதுவான தமிழ் வேட்பாளர் இனப்பிரச்சனை தீர்வுக்கு வழிசெய்யக்கூடிய ஒருவருக்கு நிபந்தனையோடு ஆதரவளித்து ஜனாதிபதியாக்கலாம்.

அநேகமாக சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருக்கே பொதுவான தமிழ் வேட்பாளரின் ஆதரவு கிடைக்கக்கூடும்.

பாராளுமன்றத் தேர்தலில் சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்கு மீண்டும் செல்லும் எண்ணம் ஒரு தமிழ் கட்சியிடம் இருக்கிறது. வடக்கு-கிழக்கில் தேர்தலில் போட்டியிட்டு வெல்ல முடியாது என்ற நிலையில் தேசிய பட்டியல் மூலம் செல்வது பற்றி அக் கட்சி யோசித்து வருகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சிக்கு சாதகமாக நடந்து கொள்வதாக கூறி அதன் தேசியப் பட்டியலில் இடம் கேட்பதற்கு அக்கட்சி இரகசிய பேரம் நடத்துவதாக பேசப்படுகிறது.

எனினும் தமிழர் விடுதலைக் கூட்டணி அவ்வாறான நிலைப்பாட்டை மேற் கொள்ளுமா என்று தெரியவில்லை.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸ் போன்றவை உத்தேச பொது வேட்பாளர் திட்டத்தை எந்தளவுக்கு ஆதரிக்க முன்வரப்போகின்றன என்று தெரியவில்லை.

அவற்றின் ஆதரவு இல்லாவிட்டால் உத்தேச திட்டம் பெரிய வெற்றியளிக்காது என்றே கருதப்படுகிறது. எனவே அக்கட்சிகளது ஆதரவு பெறுவதற்காகவே பொது வேட்பாளர் திட்டம் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது.

பொது வேட்பாளராக நிற்கக்கூடும் என்ற பட்டியலில் ஜி.ஜி.பொன்னம்பலம் (ஜுனியர்) பெயரும் அடிபடுகிறது.

## தேசிய இளைஞர் சேவை மன்றம் இணைப்பு தமிழ்-முஸ்லிம் இளைஞர்கள் அதிருப்தி!

(காரைதீவு நிருபர்)

1990 ம் ஆண்டிலிருந்து இரண்டு பிரிவுகளாக இயங்கி வந்த தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அம்பாறை மாவட்ட இளைஞர் கழக சம்மேளனம் சமீபத்தில் மீண்டும் ஒன்றிணைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் ஏலவே பெரும்பான்மை இனத்தவருக்கு ஒரு சம்மேளன மும், தமிழ் பேசும் சமூகத்திற்கென இன்னுமொரு சம்மேளனமும் இயங்கி வந்தன.

தமிழ் சம்மேளனம் ஆரம்பித்து வைத்த நாளிலிருந்து எதுவித உதவியும் வழங்கப்பட வில்லை என்ற குறை நிலவி வந்தது.

இறுதியில் பணிப்பாளரினால் அந்த சம்மேளனம் கலைக்கப்பட்டது. இதனால் தமிழ்-முஸ்லிம் இளைஞர், யுவதிகள் மத்தியில் அதிருப்தி காணப்பட்டது.

இந்நிலையில் அம்பாறை காவன்திஸ்ஸ மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பலத்த எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன. 1993 ஆண்டறிக்கையில் கூடுதலான தவறுகள் தமிழில் இருப்பது சுட்டிக்காட்டப்பட்டது.

1993 இளைஞர் அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் மாவட்டத்தில் காரைதீவு, பொத்துவில், திருக்கோயில், ஆலையடி வேம்புப் பிரதேசங்கள் புறக்கணிக்கப்பட்டமை பற்றி உறுப்பினர்கள் கேள்விக்கணை தொடுத்தனர். அதிகாரிகள் செய்வதறியாது திகைத்தனர்.

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்த அளவில் இளைஞர் மன்ற திட்டங்கள் பெயரளவிலேயே தமிழ், முஸ்லிம் பகுதிகளில் நடைபெறுவதாக குறை கூறப்படுகிறது.

## கிழக்கிலங்கையில் முத்திரை பதிக்கும் கல்லூரி

(திருகோணமலை நிருபர்)



தி/ புனித சூசையப்பர் கல்லூரியின் கம்பீரத் தோற்றத்தையே மேலே காண்கிறீர்கள். 125வது ஆண்டு நிறைவானதையொட்டி 4.4.94ல் இப்பாடசாலையின் கல்வி, விளையாட்டுப் பணிகளைக் கௌரவிக்கும் முகமாக பாடசாலையின் படத்தோடு கூடிய முத்திரை வெளியிட அரசு முன்வந்தமை பாராட்டத்தக்கதாகும்.

1867ல் புனித மரியாள் பேராலய வளவில் அமல மரிய பரித்தியாகிகள் சபையினரால் ஸ்தாபிக்கப்பட்ட இந்நிறுவனம் 1933ல் இயேசு சபையினரால் பொறுப்பேற்கப்பட்டது. தற்போதைய இடத்துக்கு 1950ல் கொண்டு வரப்பட்ட இக்கல்லூரி படத்தில் காணப்படும் கட்டடத் தொகுதியுடன் இயங்கத் தொடங்கி இன்று பல கட்டடத் தொகுதிகளையும் பாரிய விளையாட்டு மைதானத்தையும் தன்னுள் கொண்டு கல்வி- விளையாட்டுத் துறைகளில் சாதனை படைத்து வருகிறது.

1992ல் தனது 125வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடிய இந்நிறுவனம் முத்திரை வெளியிடப்படும் பெருமையைப் பெற்ற "கிழக்கிலங்கையின் முதலாவது கல்வி ஸ்தாபனம்" என்ற சிறப்பை பெறுகிறது.

## "பார்த்த ஞாபகம் இல்லையோ? உங்கள் வீட்டில் இருந்தவர்கள் நாமல்லவோ!"

## நீர்கொழும்பில் ஒரு நேரடி அனுபவம்

கற்பிட்டி பத்தலங்குண்டு தீவில் தொழில் செய்யும் மீனவர்கள் பலர் கடலில் வைத்து கோரமாகக் கொல்லப்பட்டனர். புலிகள் அமைப்பினரே அப்படுகொலைக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

புலிகளுக்கும், மீனவர்கள் சிலருக்கும் டீசல் வியாபாரத் தொடர்பு இருந்ததாகவும் அதன் காரணமாகவே தகராறுகள் ஏற்பட்டதாகவும் நீர்கொழும்புப் பகுதியில் பரவலாகப் பேசப்படுகிறது.

எவ்வாறு இருப்பினும் அப்பாவிகளை படுகொலை செய்வதும், இனக் குரோதங்களை உருவாக்குவதும் இனப் புரிந்துணர்வுகளுக்கு வழி வகுக்காது.

இதே சமயம் நீர்கொழும்பின் சில பகுதிகளில் குடியிருந்த தமிழ் குடியிருப்பாளர்களை வீடுகளை விட்டு வெளியேற்றும் நடவடிக்கையில் ஒரு கோஷ்டி முனைப்புக் காட்டுகிறது.

நீர்கொழும்பின் ஏனைய பகுதிகளில் சிங்கள-தமிழ் மக்கள் அன்னியோன்னியமாகவே வாழ்ந்து வருகின்றனர்.

சந்தர்ப்பத்தை தமது தனிப்பட்ட இலாபங்களுக்கு பயன்படுத்தும் கோஷ்டி ஒன்றே தமிழ் குடியிருப்பாளர்கள் மீது விரோதம் காட்டி வருகிறது.

சமீபத்தில் நீர்கொழும்பு குடாப்பாட்டில் ஏற்பட்ட பதட்டம் காரணமாக தமிழ் குடும்பங்கள் வீடுகளை விட்டு வெளியேறினார்கள்.

கடந்தவாரம் அதில் ஒரு குடும்பத்தினர் பொலிஸ் உதவியோடு தாம் குடியிருந்த வீட்டுக்கு சென்றனர்.

சென்றவர்களுக்கு ஆச்சரியம். அங்கு வீட்டு உரிமையாளர்கள் குடிவந்திருந்தனர். தளபாடங்கள் மாயமாய் மறைந்திருந்தன. அதைவிட ஆச்சரியம் வீட்டு உரிமையாளர் சொன்ன பதில்,

"இவர்களை எங்களுக்கு தெரியாதே. பார்த்த ஞாபகம் கூட இல்லையே" என்ற தோரணையில் பேச பொலிசாரே பொறுமை இழந்துவிட்டனராம்.

முற்பணமும், வாடகையும் வாங்கும்போது மட்டும் ஞாபகம் இருக்குமோ என்று பொலிசார் கேட்டார்களாம். சாதாரண மீனவர்கள் கொல்லப்பட்டமை மிக மோசமான செயல் என்பதில் வேறு கருத்துக்கு இடமில்லை. அதே சமயம் சாதாரண தமிழ் மக்கள் அதற்கு பொறுப்பு என்பது போல் நடந்து கொள்வோரும் கண்டிக்கப்பட வேண்டியவர்களே.

## வடக்கு-கிழக்கு இணைப்பு பிரேரணை! என்ன செய்யப் போகிறது நகரசபை?

ஏப்ரல் 4ம் திகதி திருமலை நகரசபை கூடும்போது வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தொடர்ந்தும் ஒன்றிணைந்து இருக்க வேண்டும் என்னும் பிரேரணை கொண்டுவரப்படுகிறது.

திருமலை நகரசபையில் ஈ.பி.டி.பி ஆதரவோடு போட்டியிட்ட திரு.மாயன் நாதன் என்பவரே அப்பிரேரணையை கொண்டு வருகிறார்.

திருமலை நகரசபை அப்பிரேரணையை ஏற்று நிறைவேற்றினால், வவுனியா மற்றும் கிழக்கில் உள்ள மாநகரசபை, நகரசபை, பிரதேச சபைகளிலும் அந்த முன்மாதிரி பின்பற்றப்படக்கூடும்.

வடக்கு-கிழக்கு இணைப்பை வலியுறுத்தியும், இனப்பிரச்சனை இலங்கையில் உண்டு, என்று காட்டுவதற்கே தேர்தலில் போட்டியிட்டதாகவும் கூறும் தமிழ் அமைப்புக்கள் தமது அதிகாரத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் வடக்கு-கிழக்கு இணைப்பை வலியுறுத்தி தீர்மானம் எடுப்பார்கள் என்றே நம்பப்படுகிறது.

## கொழும்பு திரையரங்கில் அனுபவம் புதிது! படம் பார்க்கவும் அடையாள அட்டை!

கொழும்பில் உள்ள சினிமா அரங்கம் ஒன்றில் கடந்த திங்கட்கிழமை படம் பார்க்கச் சென்ற இரசிகர்களுக்கு புது அனுபவம் ஒன்று ஏற்பட்டுள்ளது. திரையரங்கின் உள்ளே செல்ல வேண்டுமானால் தேசிய அடையாள அட்டை காண்பிக்க வேண்டும் என்று கூறப்பட்டது.

அடையாள அட்டை இன்றி வந்தவர்கள் சிலர் திருப்பியனுப்பப்பட்டனர். "நீங்கள் பயங்கரவாதிகளாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் நாங்கள் உங்களை உள்ளே அனுமதிக்க முடியாத நிலையில் இருக்கிறோம்" என்ற ரீதியில் பதில் சொல்லி திருப்பியனுப்பிவிட்டார்களாம்.

## ஏப்ரல் 4ல் எங்கே கூடுவது?

## தெரிவான சபைகளுக்கு தோதான இடம் இல்லை!

(அக்கரைப்பற்று நிருபர்)

எதிர்வரும் ஏப்ரல் 4ம் திகதி வவுனியாவிலும் கிழக்கு மாகாணத்திலும் உள்ளூராட்சி சபைகள் கூடும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கிழக்கு மாகாணத்தில் 36 பிரதேச சபைகள் ஒரு மாநகரசபை, இரு நகரசபைகள் ஆகியவை உள்ளன. இவற்றில் அநேக சபைகள் கூடுவதற்கே இடமில்லாத நிலையில் இருக்கின்றன.


சில இடங்களில் கட்டிடங்கள் சேதமடைந்துள்ளன. வேறு சில இடங்களில் பாதுகாப்பு படையினர் தங்கியுள்ளனர்.

இந்த நிலையில் சமீபத்திய உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தெரிவான பிரதேச சபைக் கூட்டங்கள் எங்கே, எப்படிக் கூடுவது என்பது பிரச்சனையாக இருக்கிறது.

இதுதவிர சுயேச்சையாக போட்டியிட்டு வெற்றி பெற்ற சில குழுக்கள் மத்தியில் தலைவர் பதவிக்கான இழுபறிகள் நடந்துள்ளன.

மட்டக்களப்பு மாநகர சபையில் போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்கள் மத்தியிலும் இரு குழுக்கள் உருவாகியுள்ளதாக கூறப்படுகிறது. ஒரு குழுவுக்கு திரு.பத்மநாதனும், மற்றைய குழுவுக்கு திரு.ஈஸ்வரனும் தலைமை தாங்குவதாகப் பேசப்படுகிறது.

விசேட ஆணையாளர்களது அதிகாரத்தின் கீழ் இருந்த உள்ளூராட்சி சபைகளில் இதுவரை ஏற்பட்ட நிர்வாகச் சீர்கேடுகள் பற்றி ஆராய்வதற்கு ஒரு குழுவை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்திருக்கிறது.



## மலையாள மாந்திரீகம்

கொழும்புவாழ் நகர வாசிகளின் நலனைக் , கருதி ஒவ்வொரு மாதமும் (எம்மாதமும்)
வினோத் இன்
இல.33, மூன்றாவது மாடி
சிறீ குணானந்த மாவத்தை
கொட்டாஞ்சேனை.
"VINNODH INN"
No. 33. 3rd Floor
Sri Gunanantha Mawatha
Kotahena.

ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வழியாகவும், ஸ்ரீகுணானந்த மாவத்தை உபதபால் கந்தோர் முன்பாகவும் வீற்றிருக்கும் எமது துர்க்கையம்மனை நாட நினைத்ததை நினைத்தவாறு நினைத்தபோதே எமது மலையாள உச்சாடன பீடத்திற்கு வந்து உங்களுக்கு பில்லியா, சூனியமா, கணவன் மனைவி பிணக்கா, கல்யாணத் தடையா, காதலில் படுதோல்வியா, தீரா நோயா, ஆஸ்துமாவா? வியாபார விருத்தி இல்லையா, பொருளாதாரத் தங்கு தடையா? அச்சொட்டான விதியின் சுவடி ஜாதகங்கள் எதுவானாலும்-

நிர்வாக அமைப்போ ஆலோசனையோ-072-27024
மாந்திரீகக் குரு: 072-26088
வெளிநாட்டுத் தொடர்பு: 078-61933, 052-2508, 052-3093
நிர்வாகக் குழு: 072-27098
கடிதத் தொடர்பு: ஜோதிட மாந்திரீக தத்துவஞானி P.K.சாமி,
தபால் பெட்டி 33, ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்,
நுவரேலியா, சிறி லங்கா

P.K. SAAMY ASSOCIATE PVT. LTD.,
**33, Daily fair Complex,**
**NUWARA ELIYA.**

**Dial: 052-2508 & 3093**
**AND**
**072-26088, 078-61933**

FAX: 0094-523093

ஆரம்ப மனுச் செய்பவர்களுக்கு, தற்கால பலாபலனைத் தங்கள் பிறந்த திகதி, மாதம் மாத்திரம் எழுதியனுப்பினால் தற்போதைய அல்லது கடந்த ஆண்டுகளின் பலனை இலவசமாக அனுப்புவோம். விஷேடமாக வெளிநாட்டு ஆடர்கள் உடன் கவனிக்கப்படும். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும்; துர்க்கையின் அக்கினிக் குண்டல பூஜையில் கலந்து உண்மை அறியலாமே.

*Phone: 052-2508, 052-3093, 072-26088, 078-61933, 078-71243.*

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்



## ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

**ஞான சுந்தர வைத்தியசாலை**
*187, செட்டியார் தெரு,*
*கொழும்பு 11,*
*போன்: 421398*


# பிரசவம் பார்க்க மறுத்த மருத்துவமனை! போ என்றனர் வெளியே! பேருந்தில் பிறந்தது குழந்தை!!

**(கண்டி நிருபர்)**

கண்டி மெதமகா நுவரையைச் சேர்ந்த திருமணமாகிய தமிழ்ப் பெண்மணி பிரசவத்திற்காக (05.03.94ல்) தெல்தெனிய ஆஸ்பத்திரிக்குச் சென்றார்.

"இங்கு இடமில்லை. கண்டி பெரியாஸ்பத்திரிக்குப் போகவும்." இப்படி உத்தரவு போட்டனர் தெல்தெனிய ஆஸ்பத்திரியினர். பிரசவ வேதனையுடன் மற்றொருவரின் உதவியால் கண்டி பெரியாஸ்பத்திரிக்குச் செல்ல பஸ்ஸுக்காக சில நிமிடங்கள் காத்து நின்று எப்படியோ பஸ்ஸில் அந்தக் கர்ப்பிணி உள்ளே நுழைந்தார். இவரது பரிதாபத்தைக் கண்டதும் தனது ஆசனத்தை ஒதுக்கி கொடுத்தார் ஒரு பிரயாணி.

என்ன அதிசயம். பஸ் புறப்பட்டு சில நிமிடங்கள் தான். பஸ்ஸின் உள்ளே அழுகுரல். அது பச்சிளம் குழந்தையினதாகும். மீண்டும் எப்படியோ தெல்தெனியா ஆஸ்பத்திரியை பச்சிளம் குழந்தையும் தாயும் நாடினர். அங்கு அவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டனர்.

இருவரும் சேமமாகவே பின்னர் வீடு திரும்பினர்.

அவ்வாறானால் தெல்தெனிய ஆஸ்பத்திரி நிருவாகம் இந்தக் கர்ப்பிணியை உள்ளே அனுமதிக்க மறுத்தது ஏன்? "இது என்ன அநியாயம்? உடனடியாக மத்திய மாகாண சுகாதார அமைச்சர் இதில் தலையிட்டு விசாரணை செய்ய வேண்டும்." இப்படி மாகாண சபை உறுப்பினர் திரு.எஸ்.ரெங்கநாதன் (ஐ.தே.க) மாகாண சபையில் பிரஸ்தாபித்த வேளையில்-

அமைச்சர் எம்.எச்.எ.ஹலீம் இப்படி பதிலளித்தார்.


"இது மிகவும் பரிதாபகரமான செய்தி. நான் நேற்று "லங்கா தீப" பத்திரிகையைப் பார்த்து அசந்து போனேன். என்றாலும் இது குறித்து நான் விசேட குழு ஒன்றை நியமித்து பூர்வாங்க விசாரணை மேற்கொள்வேன். உண்மை நிலையை நாம் அறிய வேண்டும். இதனைச் சுட்டிக்காட்டிய உறுப்பினருக்கு எனது நன்றிகள்."

(விசாரணை சீராக இடம் பெறுமா என்பது இப்பொழுது கேள்வி.)

# நகர சபையில் ஒரு மாற்றமான தெரிவு! நகர சுத்தி தொழிலாளரின் மகன் உறுப்பினரானார்!!

*(திருமலை நிருபர்)*

திருகோணமலைத் தேர்தல் வரலாற்றில் இந்த முறை இடம்பெற்ற நகரசபைத் தேர்தலில் ஒரு புதிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. திருமலை நகரசபை வரலாற்றில் நகரசுத்தி தொழிலாளி ஒருவரின் மகன் இந்தமுறை உறுப்பினராகி புதியதோர் அத்தியாயம் திறக்கப்பட்டுள்ளது.



மாயன் நாதன்

சுயேச்சைக் குழு 3ன் சார்பில் (ஈ.பி.டி.பி.ஆதரவு பெற்ற குழு) தேர்தலுக்கு நின்று தெரிவு செய்யப்பட்ட உறுப்பினரான 27 வயதான மாயன் நாதன் அவர்களை தினமுரசு சந்தித்தது. மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வரும் அவர் இரு பிள்ளைகளின் தந்தை. 6 குழந்தைகளை கொண்ட குடும்பத்தில் மூத்தவர். தந்தை 87ல் காலமானபிறகு பிறந்த குடும்பத்தையும் சுமந்தவர். தாயாரும் ஏற்கனவே காலமாகிவிட்டார்.

வெற்றியை வாழ்த்திக்கொண்டே பேச்சுக்கள் கொடுத்தபோது வெளியான தகவல்கள்: தந்தையார் குமரன் மாயன் 23 வருடங்களாக இதே நகர சபையில் நகரசுத்தி தொழிலாளராக பணிபுரிந்திருக்கிறார். 87ல் காலமாகிவிட்டார். நிர்வாகத்தில் அபரிமிதமான செயற்பாடு காரணமாக இன்றுவரை பென்சன் வழங்கப்படவில்லை. சாக்குப் போக்குச் சொல்வதைவிட உருப்படியாக எதனையும் செய்யவில்லையாம்.

"இதுவொன்றே போதும்- நாங்கள் எப்படி கவனிக்கப்படுகிறோம் என்பதற்கு." என்றார் திரு.நாதன் சிரித்துக்கொண்டே.

"என்ன செய்வதாக உத்தேசம்..?" முரசு கேட்டது. நாதன் சொன்னார்: "எங்கள் சமூகத்தின் பெரிய வெற்றி நான் தெரிவானதுதான். கஸ்தூரி நகரில் இரண்டு பொது மலசலகூடம் கட்டுவதற்கு இந்த நகரசபைக்கு ஆறு மாதங்கள் தேவைப்பட்டன. இனி அவ்வாறு நடக்கவிடமாட்டேன். நாகராசா வளவு எனப்படும் குடியிருப்பிற்கு பொது மலசல கூட வசதியில்லை. இதை உடனடியாக செய்துக்கொடுக்க நடவடிக்கை எடுப்பேன். எமது பகுதி வீதிகளைச் சுத்தமாக வைத்திருப்பதற்கு குப்பைத் தொட்டி கட்டுதல், குழாய் நீர் வழங்கல் என்பவற்றை உடனடியாக கவனிப்பேன்..." என்று உறுதியாகத் தெரிவிக்கிறார்.


## முகவர்கள் தேவை

வலசுமுல்ல, ஹாலியகொட, எம்பிலிப்பிட்டிய, தனமல்வில, ஹம்புறுப்பிட்டிய, அம்பலாங்கொட, கரந்தெனிய, அக்குரஸ்ஸ, தெனியாய, நெலுவ, மிரிஸ்ஸ, அகலவத்தை, அம்பாறை.

மேற்காணும் ஊர்களில் தினமுரசு விற்பனை செய்வதற்கு முகவர்கள் கோரப்படுகின்றார்கள். முற்பணம் செலுத்தக்கூடிய முகவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

CIRCULATION MANAGER
THINAMURASU
88/14, Somadevi Place,
Kirilapone, Colombo-6.
Phone- 820265



விளம்பரம் செய்து வியாபாரத்தைப் பெருக்குங்கள்.

ADVERTISING MANAGER
THINA MURASU
*No. 88/14, Somadevi Place,*
*Kirilapone, Colombo-5*
Tel: 820265

**விளம்பர மேலாளர்**
இல.88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை, கொழும்பு-05
தொலைபேசி: 820265


# சவேரியார்புரம் குடியேற்றத் திட்டம் தொடர்ந்து புறக்கணிப்பு!

மட்டக்களப்பு மண்முனைப்பற்று பிரதேச செயலாளரின் பிரிவில் தாழங்குடா கிராமத்தில் அமைந்துள்ளது இயேசு சபையினரின் சவேரியார்புர குடியேற்றத்திட்டம்.

இக் குடியேற்றத் திட்டம் ஒவ்வொரு வருடமும் ஏற்படும் வெள்ளப்பெருக்கால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. இவ்விடயம் பற்றி கிராமசேவை உத்தியோகத்தினரதும் மண்முனைப்பற்று உதவி அரசாங்க அதிபரின் கவனத்திற்கும் எடுத்துக்காண்பிக்கப்பட்டு, 1993 வரவு செலவு நிதி ஒதுக்கீட்டில் அதற்குரிய வேலைத் திட்டத்தை ஆரம்பிப்பதாக உறுதியளித்தனர். ஆனால் இன்றுவரை அது நடைபெறவில்லை.

கடந்த 1990ல் தாழங்குடாவில் இடம்பெற்ற புலிகள்-இராணுவம் நேரடி மோதலில் சவேரியார்புரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. வீட்டுத் தளபாடங்களனைத்தும் தவிடு பொடியாகின. குடிமக்கள் தமது தொழில் உபகரணங்களை இழந்தனர். அந்த நஷ்டஈட்டுப் பணம்கூட முறையாகக் கொடுக்கப்படவில்லை. மந்த கதியிலேயே உள்ளது. கடந்த ஒரு மாதத்திற்கு முன் தாழங்குடா கிராம சேவையாளர் பிரிவில் தென்னங்கன்றுகள் மக்களுக்கு வழங்கப்பட்டன. இவ் விடயத்திலும் சம்பந்தப்பட்ட சவேரியார்புரம் புறக்கணிக்கப்பட்டது. அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கிற்கான நிவாரணப் பொருட்களிலும் ஒவ்வொரு குடும்பத்திற்கான முழுப் பெறுமதியிலும் அரைப்பங்கே விநியோகிக்கப்பட்டுள்ளது. மிகுதிப் பங்கு இதுவரை விநியோகிக்கப்படவில்லை.

ஆகவே மேற்படி விடயங்களை மண்முனைப்பற்று பிரதேசச் செயலாளர் கவனத்திற்கெடுத்து சவேரியார்புர மக்களின் குறைகளை நிவர்த்தி செய்ய முன்வர வேண்டும்.

**எக்ஸ்.எஸ்.ரஞ்சன்-சவேரியார்புரம்.**


தெய்வீகத் தமிழ் மணம் கமழும்
இந்து சமய இலக்கிய இதழ்!
இளைஞர் சமுதாயத்தின் எழுச்சிக்குரல்!

**இந்து கலசம்**

4 ஆவது அறிமுக இதழ்
தற்போது வெளியாகியுள்ளது

இந்து சமய அபிமானிகள் அனைவரும் கட்டாயம் படிக்க வேண்டிய பத்திரிகை !!
இந்து கலசம் - வாசிக்கத் தவறாதீர்கள்!

அச்சுப்பதிப்பு:- ஸ்ரீ சக்தி பிரின்டிங் இண்டஸ்றீஸ், கொழும்பு - T.P. 438967

மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்க:-

**Hindu Kalasam News Magazine**
C/O. Gnanabairaver Temple
42, Dewaas Lane, Colombo 14.

இந்து கலசம் சிறப்புற வாழ்த்துகிறது
**அம்மன் ஜுவல்ஸ்**
29, செட்டியார் தெரு - கொழும்பு 11.
தொலைபேசி - 332033


## புகார் பெட்டி

### ஆனது 33 வருடங்கள் இனியாவது கவனிப்பார்களா?

திருமலையிலிருந்து 34 மைல்களுக்கப்பால் புல்மோட்டைக் கிராமம் அமைந்துள்ளது. இங்கே சுமார் 18,000 மக்கள் வாழ்கின்றார்கள். இங்கு தற்போது CD&MH தரத்திலுள்ள வைத்தியசாலை உண்டு.

இப்பகுதி புவியியல் அமைப்பு, சனத்தொகை , போக்குவரத்துக் குறைபாடு கருதியும், மக்களின் தேவையை உணர்ந்தும் இங்குள்ள வைத்தியசாலையை RH தரத்துக்கு உயர்த்துவதற்கு 1959,60ம் ஆண்டுகளில் அப்போது கடமையிலிருந்த உயரதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதற்கான சான்றுகள் அன்று எழுதப்பட்டுள்ள கடிதங்களிலிருந்து தெரிய வருகின்றது. இம்முயற்சி இன்று வரையும் செயற்படுத்தப்படாததேன்? அன்றே உணரப்பட்ட இப்பகுதி மக்களின் தேவையை, 33 வருடங்களின் பின்னராவது நிறைவேற்ற சுகாதாரப் பகுதியினர் முன் வருவார்களா?

**எம்.எஸ்.ஏ.காதர்-புல்மோட்டை-04.**

# வருடங்கள் பலவாய் பழுதான மின்சார இணைப்பு! கவனிக்க வேண்டியவர்களின் கண்கள் படவில்லையா?

**(நிந்தவூர் நிருபர்)**



படத்தைப்பார்த்தும் மிருகக் காட்சிச் சாலையில் பாம்புகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து காணப்படுவதாக எண்ணிவிடாதீர்கள்!

நிந்தவூர் அல்-அஷ்றக் மகாவித்தியாலயத்தின் பிரதான மின்சார இணைப்புப் பகுதியே இப்படிப் "பயங்கர நிலையில்" காட்சியளிக்கின்றது.

1978ம் ஆண்டில் கிழக்கில் வீசிய சூறாவளியின்போது. இந்த மின்சார இணைப்புப் பிரிவுகள் சேதமுற்றன. பிரதான மின்சுவிச், மின்மானி, மின்தொடர்பு வயர்கள் எல்லாம் உடைந்த நிலையிலும், சேதமுற்று தற்காலிக மின்இணைப்பு வழங்கப்பட்டமை போன்றும் காட்சியளிக்கின்றன.

இதே போன்று பாடசாலையில் வேறு சில கட்டிடங்களுக்கான இணைப்புகளும் சேதமுற்று எந்நேரமும் மின் ஒழுக்கு ஏற்படக்கூடிய அபாய நிலையும் இருந்து வருவதாகத் தெரியவருகின்றது.

சூறாவளி வீசி பல ஆண்டுகள் கடந்துவிட்டன. கல்வித் திணைக்கள மேலதிகாரிகளின் கவனத்திற்கும் பல தடவைகள் இந்த அவலநிலை குறித்து தெரிவிக்கப்பட்டும் இதுவரை பயன் எதுவுமில்லை!

இலங்கை மின்சபையும் வருடங்கள் பல கடந்தும்கூட இதுவரை கவனம் செலுத்தாமல் இருந்து வருகிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கண்கள் இதுவிடயத்தில் இனியாவது திறக்குமா என்று மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் ஏங்குகின்றனர்.

# பாதை சீர்கேடு-பாதசாரிகள் படும்பாடு

திருமலை வீதியில் (97)வது மைல் கல், சிறாஜ் நகரை நோக்கி செல்லும் பாதையின் சீர்கேடு பாதசாரிகளுக்கு பெரும் சிரமத்தை உண்டு பண்ணுகிறது. இதனால், பாடசாலை செல்லும் மாணவமாணவிகள், வாகனங்கள், பொது மக்கள் போக முடியாமல் உள்ளது. மழைகாரணமாக பாதை பள்ளமும் குழிகளுமாய் மாறிவிட்டது. கவனிப்பாரற்றுக் கிடக்கும் இப்பாதையின் நிலைமை மேலும் நீடிக்கு மென்றால், பாதசாரிகளின் சிரமம் கூடும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

ஆகவே உரிய அதிகாரிகள் இப்பாதையின் சீர்கேட்டை நிவர்த்தி செய்யவேண்டும் என, பொதுமகன் என்ற முறையில் வேண்டிக்கொள்கின்றேன்.

**ஏ.எம்.அப்துல் றகுமான்-சிறாஜ்நகர்.**

# ஆளும் கட்சியின் அடுத்த முடிவு என்ன?

## எக்ஸ்ரே ரிப்போர்ட் நாரதர்

தென் மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் ஆளும் கட்சிக்கு பலத்த அதிர்ச்சி.

மாகாணசபையைக் கலைக்காமல் இருந்திருந்தால் பரவாயில்லையோ என்று ஆளும் கட்சியின் முக்கிய தலைவர் யோசித்திருக்கக்கூடும்.

அநுராவும், காமினியும் ஆளும் கட்சியோடு சங்கமமாகிவிட்டதால் வெற்றி வெகு சுலபம் என்றே கருதப்பட்டது.

ஆனால், தென்மாகாண வாக்காளர்கள் அரசியல் முதிர்ச்சியுடையவர்கள் தாங்கள் என்பதை பல்வேறு தேர்தல்களில் வெளிப்படுத்தியே வந்திருக்கிறார்கள்.

இம்முறையும் மீண்டும் ஒரு முறை அதனை உறுதிப்படுத்திவிட்டார்கள்.

இம்முறை தென்மாகாண சபைத் தேர்தலில் ஆளும் கட்சி வழக்கத்திற்கு மாறான தீவிர ஆர்வம் காட்டியிருந்தது.

ஜனாதிபதி நேர அட்டவனை தயாரித்து, நேரடியாகவே பிரசாரக் களத்தில் இறங்கியிருந்தார்.

கிழக்கிலும், வவுனியாவிலும் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரங்களுக்கு ஜனாதிபதி செல்லவில்லை.

அங்கு போட்டியிட்ட ஐ.தே.கட்சி வேட்பாளர்கள்கூட ஜனாதிபதி பிரசாரத்திற்கு வரக்கூடாது என்று பிரார்த்தித்ததாகவும் ஒரு கதை இருக்கிறது.

ஒருவேளை ஜனாதிபதி அங்கு நேரடியாகப் போய் "இனப்பிரச்னையும் இல்லை, ஒரு மண்ணும் இல்லை. நாங்கள் மரம். நீங்கள் கொடி. வடக்கு-கிழக்கை பிரிப்பதே குறி" என்று பேசியிருந்தால் தற்போது கிடைத்த வாக்குகளில் பாதி வேறு பக்கம் மாறி விழுந்திருக்கக்கூடும்.

எனவே-ஜனாதிபதி அங்கு போகாமல் விட்டதால் ஐ.தே.கட்சி வேட்பாளர்கள் ஓரளவு கௌரவத்தை தக்க வைத்துக்கொள்ள முடிந்தது.

ஆனால், தென் மாகாணசபைத் தேர்தலில் ஜனாதிபதி தனது செல்வாக்கை பரிசீலித்துப் பார்க்கும் வகையில் நேரடியாகவே களத்தில் இறங்கினார்.

அவர் களத்தில் இறங்கியபோது கையில் எடுத்துக்கொண்ட பிரசார ஆயுதம் சிங்கள மக்களின் ஐக்கியம்.

ஒடுக்கப்படுகின்ற, அல்லது இன ரீதியில் பெரிதும் பாதிக்கப்படுகின்ற ஒரு இனத்தின் மத்தியில் போய் ஐக்கியம் பற்றிப் பேசினால், அந்தப் பேச்சு சம்பந்தப்பட்ட இனத்தின் மனதை தொடுவதாக அமையும்.

ஆனால், இன்றைய நிலையில் சிங்கள மக்கள் மத்தியில் சென்று ஐக்கியம் பேசும் அளவுக்கு சிங்கள மக்களின் உரிமைகளுக்கு எந்த ஆபத்தும் ஏற்பட்டுவிடவில்லை.

தமது நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை நிறைவுசெய்யக்கூட தமிழ் பேசும் மக்கள் இதுவரை சிந்திய இரத்தம் போதாமல் இருக்கிறது.

அவர்கள் வந்து சிங்கள மக்களது உரிமையை தட்டிப்பறிக்கப் போகிறார்கள் என்று எவர் சொன்னாலும் அதை யார் நம்புவது?

ஒரு ஊருக்குள் ஒரு பெரிய மனிதர் இருக்கிறார். அவர் திடீரென்று ஒருநாள் ஊருக்கு பொதுவான இடத்தில் நின்று "எல்லோரும் ஓடி வாருங்கள், ஓடி வாருங்கள்." என்று அழைப்பு விடுக்கிறார். பெரிய மனிதர் அழைக்கிறாரே என்று ஊர் வந்து கூடுகிறது. "எல்லோரும் ஒன்று படுங்கள். எல்லோரும் ஒன்றுபடுங்கள்" என்று சத்தம் போட்டு பேசுகிறார் பெரிய மனிதர்.

இப்போது திடீரென்று என்ன நடந்துவிட்டது. வழக்கம் மாதிரித்தானே ஊர் இருக்கிறது. எவரும் வந்து எங்கள் மடியில் கைவைக்கவில்லை. எங்கள் வழியில் நின்றும் சண்டித்தனம் பண்ணவில்லை.

இவர் ஏன் ஒன்றுபடச் சொல்கிறார் என்று ஊரவர்களுக்கு ஒரே சந்தேகம். சந்தேகம் விரிந்து மெல்ல மெல்ல வளர்ந்து அந்த பெரிய மனிதர் மீதே சந்தேகப்படத் தொடங்கிவிடுகிறார்கள்.

பின்னர் அவர் பேசும் எந்தப் பேச்சையும் சந்தேகத்தோடு பார்க்கும் நிலை ஏற்பட்டு விடுகிறது.

இப்படித்தான் இருக்கிறது நமது ஜனாதிபதியின் பெரும்பான்மை இன ஒற்றுமை பற்றிய திடீர் பேச்சுக்கள். அந்த பெரிய மனிதரைப் பார்ப்பது போலவே நமது ஜனாதிபதியையும் தென்மாகாண சபை வாக்காளர்கள் நோக்கியிருக்கலாம் என்றே தோன்றுகிறது.

இனப் பிரச்சனையே இல்லை என்பதை ஏற்றுக்கொள்ளாதவர்கள் மீது கோபப்பட்டவர் ஜனாதிபதி. இப்போது தென்மாகாண சபை வாக்காளர்களில் பெரும்பான்மையினர் மீதும் அவர் கோபப்படவேண்டியவராகிவிட்டார்.

தேர்தல் நடைபெற்றது தென் மாகாண சபையில் என்றாலும்கூட அங்கு நடைபெற்ற பிரசாரங்களில் முக்கியமாக இனப்பிரச்சனை பற்றிய பேச்சுக்களே அடிபட்டன.

எல்லாப் பிரச்சனையும் தீர்க்கப்பட்டு விட்டது. பயங்கரவாதப் பிரச்சனைதான் இருக்கிறது என்று பேசிய ஜனாதிபதி வடக்கு-கிழக்குப் பிரிப்புப் பற்றியும் அடிக்கடி உறுதிப்படுத்திக் கொண்டார்.

வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது பற்றிய முடிவினை இன்னமும் மேற்கொள்ளவில்லை என்று பிரதமர் ரணில் பேட்டியொன்றில் தெரிவித்திருந்தார்.

ஆனால், ஜனாதிபதியோ வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு அங்கீகாரம் பெறும் தேர்தலாக தென்மாகாணசபைத் தேர்தலை எங்கே அறிவித்துவிடப் போகிறாரோ என்று எண்ணும் வகையிலே பேசிக்கொண்டிருந்தார்.

மறுபுறம், எதிர்க்கட்சிகள் தரப்பில் இனப்பிரச்சனை இருக்கிறது. அரசியல் தீர்வு அவசியத் தேவையாக இருக்கிறது என்ற குரல்கள் பிரசார மேடைகளில் கேட்டுக் கொண்டிருந்தன.

ஆளும் கட்சி இனப்பிரச்சனையை தீர்த்துவிடவில்லை. யுத்தத்தில் வெல்ல அதனிடம் திட்டம் இல்லை என்று வாக்காளர்களுக்கு தெரிவிக்க வேண்டிய கட்டாயம் எதிர்க்கட்சிகளுக்கு.

அதுவும், கிழக்கில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தி முடித்த சூட்டோடு தென்மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டது. உள்ளூராட்சித் தேர்தல் நடத்தியதை ஆளும் கட்சியின் சாதனையாக வாக்காளர்கள் கருதிவிடக்கூடாது. ஆகவே பிரச்சனை தீர்ந்துவிட்டது என்பதெல்லாம் பொய்யான கதை என்று நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தன எதிர்க்கட்சிகள்.

கட்டாயம் இருந்ததே தவிர நாட்டில் இனப்பிரச்சனை இருக்கிறது என்று நிரூபிப்பது ஒன்றும் கஷ்டமான விசயமல்லவே.

ஆகவே, ஜனாதிபதியின் பேச்சுக்களை வலுவிழக்கச் செய்ய எதிர்க்கட்சிகள் பெரிதாக கஷ்டப்படவில்லை.

அதுமட்டுமல்ல, கிழக்கில் உள்ளூராட்சி தேர்தலில் நடந்த முறைகேடுகளை தேர்தல் ஆனையாளரின் அறிக்கையும் மேலோட்டமாக என்றாலும்கூட வெளிப்படுத்தி விட்டது. அந்த அறிக்கையும் ஆளும் கட்சி பிரசாரத்தின் மீது விழுந்த அடிகளில் ஒன்றாக கணக்கில் சேர்க்கப்படலாம்.

நாட்டில் யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. இப்போதெல்லாம் சிங்கள, ஆங்கில பத்திரிகைகள் யுத்தச் செய்திகளை பக்கம் பக்கமாக படத்தோடு பிரசுரிக்கின்றன.

சிங்களப் பத்திரிகையாளர்களும் வடக்கே போய் புலிகளின் முக்கிய பிரமுகர்களோடு பேசி பேட்டிகளோடு வந்து பிரசுரிக்கிறார்கள்.

யாழ்ப்பாணம் என்றால் ஏதோ சந்திர மண்டலத்துக்கு பக்கத்தில் உள்ள பகுதிபோல் தூரமாகவும், அங்கு போவதே பயங்கரம் என்றும், பல்வேறு மாதிரி, எல்லாம் யோசித்துக்கொண்டிருந்த நிலை தெற்கில் இப்போது மறைந்து வருகிறது.

யுத்தத்தில் புலிகள் தோற்றுவிட்டார்கள். அரசின் கை ஓங்கி வருகிறது என்று நம்புவதற்கு சிங்கள மக்கள் தயாராக இல்லை.

தலைநகரில்கூட புலிகள் ஊடுருவக்கூடும் என்று பாதுகாப்புக்கள் பலப்படுத்தப் படுகின்றன.

ஜனாதிபதி மாளிகை உள்ள வீதியால் இரவு நேரங்களில் நடமாடத் தடை



திருமதி சந்திரிக்கா

விதிக்கப்படும் அளவுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது.

ஜனாதிபதியோ புலிகளை வடக்குக்குள் கட்டுப்படுத்தி சத்திர சிகிச்சை செய்வதுதான் பாக்கி என்று சொல்லுகிறார்.

கிழக்கு மாகாணத்தில் அரசுக்கு இராணுவ ரீதியில் சில வெற்றிகள் கிடைத்துள்ளதை மறுக்க முடியாது. அதற்காக கிழக்கில் புலிகளை முற்றாகக் கட்டுப்படுத்தி விட்டதாக கூறிவிட முடியாது.

பூநகரி இராணுவ முகாம் தாக்குதல்



காட்டூன்- நன்றி: சண்டே டைம்ஸ்

போன்ற நடவடிக்கைகள் மூலமாக புலிகள் பற்றிய வியப்பான தோற்றப்பாடு சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கிறது.

படையினர் குறித்த நம்பிக்கையீனங்கள் ஏற்பட்டு வருகின்றன.

யுத்த நிலைமைகள் பற்றி உண்மையான செய்திகள் தமக்கு வந்தடைவதில்லை. படையினர் தரப்பில் உண்மையைச் சொல்ல தயக்கம் நிலவுகிறது. தமக்கு சாதகமான கணக்குச் சொல்கிறார்கள் என்றே சாதாரண சிங்கள மக்கள் நினைக்கத் தொடங்கி விட்டனர்.

அதனால், படையினர் கிழக்கில் சமீபத்தில் பெற்ற வெற்றிகள்கூட முக்கியத்துவம் பெறமுடியாமல் போய்விட்டது.

எனவே-புலிகளை ஒழிக்காமல் விடமாட்டேன் என்று ஜனாதிபதி உறுதிமொழி தெரிவித்தபோது, அந்தப் பேச்சு கவர்ச்சிகரமானதாக தெரியவில்லை.

ஆக, மொத்தத்தில் வடக்கு-கிழக்கு பிரச்சனையில் இன்றைய அரசாங்கத் தலைமையின் நிலைப்பாட்டையும் சேர்த்தே தென்மாகாண சபை வாக்காளர்கள் நிராகரித்திருக்கிறார்கள்.

எதிர்க்கட்சிகள் புலிகளைப் பற்றி காரசாரமாக கண்டிக்கவில்லை.

பதவிக்கு வந்தால் யுத்தத்தை நிறுத்தி இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்போம் என்றுதான் திருமதி சந்திரிக்கா பிரசாரக் கூட்டங்களில் கூறியிருந்தார்.

எதிர்கட்சிகள் புலிகளைப் பற்றி பேசவில்லை என்பதை ஜனாதிபதி வாக்காளர்களுக்கு சுட்டிக்காட்டியிருந்தார்.

என்றாலும், புலிகளை ஒழித்துக்கட்டுவது என்று வெறுமனே பேசுவது மட்டும் பிரச்சனைக்கு தீர்வாகாது. பிரச்சனையை தீர்ப்பதும், யுத்தத்துக்கு ஒரு முடிவு காண்பதுமே அவசியம் என்பதை தென் மாகாண வாக்காளர்களில் பெரும்பான்மையானோர் உணர்ந்து இருக்கிறார்கள். தமது தீர்ப்பின் மூலம் உணர்த்தியும் இருக்கிறார்கள்.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் காலத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரங்களில் அவர் புலிகளை கடுமையாக விமர்சித்ததில்லை. புலிகளும், ஏனைய தமிழ் அமைப்புக்களும் ஆயுதம் ஏந்த காரணமான நிகழ்வுகளையும் சுட்டிக்காட்டி உரையாற்றியிருந்தார்.

இராணுவத்தீர்வை வலியுறுத்துவதாக அமையாமல் பேசித்தீர்க்கும் கருத்தை முன்னிறுத்துவதாகவே அவரது பேச்சுக்கள் அமைந்திருந்தன.

அதுமட்டுமன்றி பிரசார உத்திகளில் மிகவும் கைதேர்ந்தவராகவும், மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை நாடி பிடித்து அறிந்து அதற்கேற்ப தேர்தல் பிரசார வியூகம் வகுப்பவராகவும் பிரேமதாசா விளங்கினார்.

அதனால் பிரேமா உள்ளவரை புலிகளுக்கும் அவருக்கும் தொடர்பு என்று கூறிய எதிர்கட்சிகள் புலிகளை பற்றியும் காரசாரமாக கண்டித்தன.

ஆனால் இம்முறை ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா புலிகளை ஒரு வாங்கு வாங்கிக்கொண்டிருந்தபோது எதிர்க்கட்சிகள் புலிகளை காரசாரமாகக் கண்டிக்காமல் அரசியல் தீர்வு பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

ஜனாதிபதி பிரேமதாசா தலைமைத்துவத்தில் இருந்தபோதும், அவர் மறைந்த போதும் மாகாண சபைத் தேர்தலில் கிடைத்த வாக்குகளைவிட இம்முறை ஆளும் கட்சிக்கு கிடைத்த வாக்குகள் குறைவாகவே உள்ளன..

இனப்பிரச்சனையின் தாக்கத்தையும், அதன் தீர்வினையும் உணர்ந்துள்ள சிங்கள மக்களை புலிகளுக்கு எதிரான பேச்சுக்களால் மட்டும் திருப்திப்படுத்திவிட முடியாது என்பதையே முடிவுகள் உணர்த்துகின்றன.

ஆளும் கட்சியில் இருந்து லலித்-காமினி குழுவினர் வெளியேறிய போதும் அப்போது நடந்த தென்மாகாணசபைத் தேர்தலில் ஆளும் கட்சி கௌரவமான தோல்வியைத்தான் எதிர்கொண்டது.

இம்முறை திரு.காமினி, திரு.அநுரா ஆகியோர் ஆளும் கட்சியோடு சங்கமமாகி விட்டனர். ஆளும் கட்சியினர் மட்டுமல்லாமல் அரசியல் பார்வையாளர்கள் கூட இம்முறை ஆளும் கட்சிக்கு சாதகம் அதிகம் என்றே கணக்குப் போட்டுப் பார்த்தனர்.

திருவாளர் பொதுஜனம் சகல புள்ளி விபரக் கணக்குகளையும் தனது புள்ளடியால் புரட்டி எறிந்துவிட்டார்.

தென்மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் இலங்கையின் அரசியல் வானில் திருமதி சந்திரிக்காவுக்கு ஏற்பட்டுவரும் பிரகாசத்தையும் சுட்டிக்காட்டி நிற்கின்றன.

தனது தாயாரைப்போல் தோல்விகள் வரும்போதும் எதிர் நீச்சல் போடும் ஒரு அரசியல்வாதியாக திருமதி சந்திரிக்கா தன்னை இதுவரை வெளிப்படுத்தவில்லை. சமயங்களில் அவர் இங்கிருக்கிறரா அல்லது வெளிநாடு சென்றுவிட்டாரா என்று தெரியமல் போய்விடுகிறது. மௌனமாகி விடுகிறார்.

என்றாலும் சோர்வுட்டி வரும் அரசியல் அரங்கில் திருமதி சந்திரிக்காவின் பக்கம் திருவாளர் பொதுஜனத்தின் கவனம் திரும்பி வருகிறது.

ஆளும் கட்சிக்கு அது ஒரு எச்சரிக்கை மணி.

கட்சிமாறும் படலங்களுக்கு இலங்கை அரசியலில் பெரிய முக்கியத்துவம் இல்லையென்றாகி வருகிறது. எனவே கட்சி மாறுவோர் பட்டியலை வெளியிட்டுக் கொண்டிருப்பது மட்டுமே ஆளும் கட்சிக்கு ஆறுதலான விசயமாக இனிமேல் இருக்க முடியாது.

93ல் தென் மாகாண சபைத் தேர்தலில் லலித் கொலைக்கு பிரேமதாசாவே காரணம் என்று கடுமையாக குற்றம் சாட்டியவர் திரு.காமினி.

இம்முறை அவரை தன் பக்கத்தில் வைத்துக்கொண்டே லலித் கொலைக்கு புலிகளே காரணம் என்று கூறிவிட்டார் ஜனாதிபதி. வாக்காளர்கள் அதனையும் கவனித்து இருப்பார்கள். எனினும் "என்னைக் கொல்லுங்கள். என் பெயரைக் கெடுக்காதீர்கள்" என்று தன் கடைசிக் காலத்தில் பேசிய பிரேமாவின் ஆத்மா திருப்தியடைய வைத்துவிட்டார் ஜனாதிபதி.

ஆனால்-ஆளும் கட்சிக்குள் திருப்தியை ஏற்படுத்த அவரால் முடிந்திருக்கிறதா என்பதுதான் சந்தேகம்.

அதிர்ச்சி வைத்தியத்தின் பின் ஆளும் கட்சி தனது தேசியக் கொள்கைகளில் எவ்வாறான மாற்றங்களை மேற்கொள்ளப் போகிறது என்பதை அனைவரும் உற்று நோக்குகின்றனர்.

மாற்றம் தேவை என்பதை ஆளும் கட்சி தலைவர்கள் உணர்ந்திருப்பார்கள். ஆனால் அடுத்த முடிவு என்ன? அதை எப்படி மேற்கொள்ளப் போகிறார்கள் என்பதில்தான் அடுத்துவரும் தேர்தல்கள் குறித்த வியூகங்களின் வெற்றி தோல்வி அமைந்திருக்கிறது.

என்றாலும் முன்னர் எதிர்பார்த்த மாதிரி உடனடியாக ஒரு பொதுத் தேர்தல் வரப்போவதில்லை. அமைச்சரவை மாற்றங்கள் ஏற்பட இடமுண்டு. திரு. காமினிக்கு இதுவரை அமைச்சர் பதவி எதிவும் கொடுக்கப்படாமல் இருப்பது அவரது ஆதரவாளர்கள் இடையே அதிருப்திகளை உருவாக்கியிருக்கிறது. அதனால் அவர்கள்கூட தேர்தலில் சுறுசுறுப்பாக உழைத்திருக்க மாட்டார்கள் என்றே தோன்றுகிறது.

எதிர்பார்த்தளவு திரு.காமினி வாக்கு வங்கிகளை கவரவில்லை என்பதால் அவருக்கு எந்த மாதிரியான அமைச்சர் பொறுப்பு கொடுக்கப்படும் என்று தெரியவில்லை. நிதி அல்லது பாதுகாப்பு அமைச்சு தரப்பட வேண்டும் என்றே திரு.காமினி எதிர்பார்க்கறார்.

அடுத்து வரும் வாரங்களில் மாற்றங்களுக்கான அறிகுறிகள் தோன்றக்கூடும். ■

## அதிரடி அய்யாத்துரை



தென்மாகாண தேர்தல் முடிவுகள் முக்கியமான சில பேருக்கு கண்ணை திறந்து பார்க்க வழி பண்ணிப் போட்டுது பாருங்கோ. 24 மணிநேரத்திலை சிங்களத்தை ஆட்சி மொழியாக்குவேன் எண்டு சொன்னவுடனை கண்ணை மூடிக் கொண்டு வாக்குகளை அள்ளிப்போட்ட காலம் மலையேறிப் போச்சுது. இப்பவும் அந்தக் காலத்திலையே இருக்கிறமாதிரி கண்ணை மூடிக்கொண்டிருக்காமல் திறந்து பாருங்கோ எண்டு சொல்லிப் போட்டினம்.

முக்கியஸ்தர்கள் சிலரே முணு முணுக்கினமாம். இப்படியே போனாச் சரிப்பட்டு வராது. புள்ளடிகள் பொல்லடிகளாய்த்தான் விழும் எண்டு காதும் காதும் வெச்சமாதிரிப் பேசுகினமாம். எண்டாலும் வெளிப்படையாய் பேச பயப்பிடுகினம்.

மறைந்த முன்னாள் தலைவர் பெயரை உச்சரிக்கவே சிலர் கஷ்டப்படுற மாதிரி தெரிஞ்சது. ஆனால் பாருங்கோ அவற்றை செல்வாக்கு இருந்த பகுதிதான் பவர் உள்ள கட்சியை ஓரளவு காப்பாற்றியிருக்குது. அதுவும் கைவிட்டிருந்தா நிலமை என்ன? இப்பதான் மறைந்தவரைப் பற்றி பழையபடியும் நினைச்சுப் பார்க்கினமாம்.

நீர்கொழும்பிலை ஒரு பகுதியிலை தமிழ் ஆட்கள் வீடுகளை காலி பண்ண கால அவகாசம் கொடுத்திருக்கினமாம். கடலிலை நடந்ததுக்கும் கரையிலை இருக்கிறவைக்கும் என்ன சம்பந்தம் பாருங்கோ. மொட்டத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுற ஆட்களாலைதான் பிரச்சனையின் முடிச்சு இறுகிக்கொண்டு போகுது.

திருமலையிலை ஒரு தமிழ்கட்சி போய் அலுவலகம் திறந்திருக்கு. உடன்டியா அந்த இடத்திற்குப் போன மற்றொரு தமிழ் கட்சி "இது நாங்கள் பார்த்து வைச்ச வீடு. இடத்தை காலி பண்ணாட்டிச் சோலி வரும்" எண்டு மிரட்ட அலுவலகம் திறந்தவை திரும்பிப் போய்ட்டினமாம். எங்கடை ஒற்றுமையை நினைச்சா புல்லரிக்குதுங்கோ.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவை அடிக்கப் பார்த்தவரும் எலக்சன் கேட்டவர். ஒரு முந்நூறு பேர் வாக்குப் போட்டிருக்கினம். குட்டுப்பட்டாலும் மோதிரக்கையாலை குட்டுப்படவேணும் எண்டு சொல்லுறது. அது மாதிரி அடிக்கிறதெண்டாலும் பிரபலமான ஆளாப்பாத்து அடிச்சாத்தான் பேர் கிடைக்கும். இன்னொரு தகவல்.- ராஜீவ் காந்தி அவருக்கு ஒரு கடிதம் எழுதினவராம். "விரைவில் விடுதலையாகி நலமாக வாழ்த்துகிறேன். உங்கள் மீது எனக்கு வருத்தமில்லை" எண்டு. ராஜீவ் மறைந்தபிறகு இவரை ஒரு பத்திரிகை பேட்டி எடுத்தது. ராஜீவ் பற்றி என்ன நினைக்கிறீர்கள் எண்டு கேட்டது.

"அவர் ஒரு நல்ல மனிதர். தாக்கிய என்னையே வாழ்த்தினவர்." எண்டு இவர் பதில் சொன்னவர். பார்த்தியளோ, நல்ல மனுசரும் அடி வாங்கித்தான் தங்களை நிரூபிக்க வேண்டிக்கிடக்கு.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளரை நிறுத்துற முயற்சியிலை பழமையான தமிழ் கட்சியும் கடுமையான அக்கறை காட்டுதாம். ஆனாப் பாருங்கோ அப்படியோ விசயம் எண்டு கேட்டா, எங்களுக்குத் தெரியாது முன்னாள் பொன்னான தலைவரின் புத்திரர் ஜுனியர்தான் ஏதோ செய்யிறார் எண்டு பதில் வருகுதாம். உதுதானே பிழை. சுழியோட வெளிக்கிடுறதுதானே பிறகு முழிக்க வைக்கிறது! ஏன் மறைக்க வேணும்?

கவியரசு வைரமுத்து இப்ப எழுதுற பாடல்கள் வியாபார நிர்ப்பந்தம் காரணமாக வீரியம் இல்லாமல் இருக்கிறது ஒரு குறை. முந்தி அவர் எழுதின கவிதை ஒண்டு படிக்கக் கிடைச்சுது. பொத்தி வைச்ச சோகத்தை மனுசன் எப்படி வெளிப்படுத்தியிருக்கிறார் பாருங்கோ.

"கன்னங்கள் அறியாத கண்ணீரின் துடிப்புகளை
எண்ணங்கள் சொல்லுவதால் இதயவலி குறைகிறது.

மனக்கொடிக்கு நீர்வார்த்து மரண மலர் பூப்பதற்குள்
எனக்குள் நான் தேடுவது எதுவென்றே தேடுகிறேன்.

ஆகா!ஓ! தனிமைகளே! ஆவிகளின் நினைவுகளே!
சாகாத நினைவுகளை தவிக்கவிட்ட தனிமைகளே!

இறக்காமல் இனி நீங்கள் எனக்காக வாழுங்கள்.
மறக்காமல் நானுங்கள் மடிமீது தவமிருப்பேன்."



# உறவை முறிப்பதாக ஒரு மிரட்டல்
# பணிய மறுக்கிறது சீனா!

## காட்டுத் தீயாகக் கூடிய சிறு பொறிகளாய் தொழிற்சங்கங்கள்!

எங்கள் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட உங்களுக்கு என்ன உரிமை? நீங்கள் என்ன மாமனா, மச்சானா? என்ற தோரணையில் கேட்கிறது சீனா.

அமெரிக்காமீதுதான் சீனாவின் கோபம். கோபத்துக்கு காரணம் அமெரிக்கா சீனாமீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள்.

சோவியத் யூனியன் சிதையாமல் இருந்தவரை அமெரிக்காவும், சீனாவும் குலாவிக்கொண்டிருந்தன. சோவியத்தும், சீனாவும் சேர்ந்துவிட்டால் தனக்கு பெரிய தலைவலியாகிவிடும் என்று அமெரிக்காவும் கணக்குப் போட்டு சீனாவோடு கைகுலுக்கிக் கொண்டிருந்தது.

வர்த்தக உறவுகள் இருநாடுகளுக்கும் இடையே இருந்து வருகிறது.

இப்போது வர்த்தக உறவில் ஒரு விரிசல் வரும்போல் தெரிகிறது.

வர்த்தக உறவை தொடர வேண்டுமானால் தாம் சொல்வதைக் கேட்டு நல்ல பிள்ளையாக நடக்க வேண்டும் என்று அமெரிக்கா சொல்ல, சீனாவுக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்திருக்கிறது.

சீனாவில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. சீனா மனித உரிமைகளோடு விளையாடுகிறது. தனக்கு வேண்டாத கருத்துடையவர்களை கைது செய்து கொடுமைப்படுத்துகிறது. இது சரியல்ல. உடனே நிறுத்தவேண்டும். இல்லாவிட்டால் நாங்கள் வர்த்தக சலுகைகளை வழங்கமாட்டோம் என்று அமெரிக்கா வெட்டொன்று துண்டு இரண்டாக பேசப்போக, சீனா சீறியிருக்கிறது.

சீனப் பிரதமர் லீபெங் அமெரிக்காவை வாயை மூடு என்பதுபோல் பேசியிருக்கின்றார். "நாம் மனித உரிமைகளை மதிக்கிறோம். பிறர் எம்மீது குற்றம் சாட்டுவதை விரும்பவில்லை" என்கிறார் உரத்த குரலில்.


அமெரிக்க உள்நாட்டு அமைச்சர் சீனாவுக்கு சமீபத்தில் போனபோது, வாயை சும்மா வைத்துக்கொண்டிருக்காமல் உள்நாட்டு பிரச்சனையை கிளறும் விதமாக பேசிவிட்டார் என்பதும் சீனத் தலைவர்களது கோபத்துக்கு கொம்பு சீவிவிட்டுள்ளது.

வர்த்தக உறவுகளை முறித்துக்கொண்டால் நஷ்டம் சீனாவுக்கு மட்டுமல்ல. அமெரிக்காவுக்கும் தான். அதனால் அமெரிக்கா மிரட்டுமே தவிர முற்றாக முறிக்காது என்பதே சீனாவின் நம்பிக்கை.

சீனா அரசு மாற்றுக் கருத்துடையவர்கள் தலை தூக்குவதை விழிகளுக்கு விளக் கெண்ணெய் விட்டுக்கொண்டு கவனித்து அவ்வப்போது அடக்கினாலும் சிக்கல்கள் உருவாகியே வருகின்றன.

புதிய தொழிற்சங்கங்கள் வேகமாக உருவாகிவருகின்றன. தொழிலாளர்களும், விவசாயிகளும் வேலை நிறுத்த உரிமை கேட்டு பிரசார நடவடிக்கைகளில் குதித்திருக்கிறார்கள்.

தொழிற்சங்க தலைவர் ஒருவரை சீனா அரசு பிடித்து சிறைக்குள் போட்டிருக்கிறது. என்றாலும் சீனாவின் புரட்சித்தலைவர் மா ஓ சொன்னது வளர்ந்து வரும் தொழிற்சங்க இயக்கத்துக்கும் பொருந்தும். மா ஓ சொன்னது இதுதான். "சிறு பொறி பெரும் காட்டுத்தீயாகும்."



அமெரிக்க உள்நாட்டமைச்சரோடு சீனப் பிரதமர். உதட்டிலே சிரிப்பு-உள்ளே சினம்

## பசியில் இருந்த புலி படமெடுத்தவரை புசித்தது!



அங்கோலா நாட்டின் தலைநகரான லுவாண்டாவில் 18 வருடமாக உள்நாட்டுப்போர் நடந்து வருகிறது.

மக்கள் பட்டினி கிடக்கிறார்கள். மக்களே பட்டினியால் வாடும்போது விலங்குகளுக்கு மட்டும் உணவு கிடைக்குமோ?

அங்கோலாவின் மிருகக் காட்சிச் சாலையில் விலங்குகளின் எலும்புகள் வெளியே தெரிகின்றன. அந்தளவுக்கு கொலைப் பட்டினி. அதனைப் படமெடுக்கப் போனார் ஒரு புகைப்படக்காரர். கூண்டில் இருந்து வண்டி ஒன்றில் ஏற்றப்பட்டுக்கொண்டிருந்த புலியையும் அவர் கிளிக் செய்தார். பசியோடு கிடந்த புலி அது. படமெடுத்தவரை திரும்பிப்பார்த்து. ஒரு முறைப்பு. "பசியால் கிடக்கிறேன் நான். படமெடுக்கிறீரோ நீர்?" என்பது மாதிரியான முறைப்பு. "ஆகா அருமையான போஸ்" என்று அவர் மீண்டும் கிளிக்.கிளிக். அவ்வளவுதான் பாய்ந்தது புலி. ஒரே அடி. ஆள் காலி. மிருகக் காட்சி சாலை ஊழியர்கள் உடனடியாக அந்தப் புலியை சுட்டுக்கொன்றுவிட்டனர். ■

## கிளியை மிரட்டுவதா? கட்டிவிடு அபராதம்!

சுவீடனில் உள்ள தென் பகுதியில் அர்போகா என்ற நகரில் ஒரு வீட்டுக்குள் கொள்ளையன் புகுந்துவிட்டான்.

அந்த வீட்டின் உரிமையாளர் ஆசையோடு வளர்த்த கிளி கொள்ளையனைக் கண்டவுடன் குரல் எழுப்பியிருக்கிறது. உடனே கிளியை விரட்டிவிட்டு கொள்ளையன் தன் கைவரிசையை காட்டிச் சென்று விட்டான்.

அதன்பின்னர் அந்தக் கிளிக்கு தனியே இருக்க பயம். அதனால் வீட்டு உரிமையாளர் வெளியே செல்லும்போது கிளியை தன் உறவினர் வீட்டில் விட்டுச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. இதற்கிடையில் கொள்ளையன் பொலிஸ் வலையில் மாட்டிக்கொள்ள வழக்கு நீதிமன்றத்திற்கு வந்தது. வழக்கின் போது கிளியை மிரட்டியதும், அதனால் கிளிக்கு ஏற்பட்ட அதிர்ச்சியும் நீதிபதிக்கு விபரிக்கப்பட்டது.

கொள்ளையடித்த குற்றத்திற்கு சிறைத் தண்டனை வழங்கிய நீதிபதி, கிளியை மிரட்டிய குற்றத்திற்கு அபராதம் விதித்தார். அபராதத் தொகை ரூபா 12 ஆயிரம். ●

## "மாத்தையா செய்தது துரோகம் தான் நடவடிக்கை எடுத்ததும் நியாயம்தான்"
## கலைஞர் கருணாநிதி முரசொலியில் அறிவிப்பு!

புலிகள் இயக்கத்தின் தளபதியாக இல்லாவிட்டாலும் மாத்தையா உயிரோடு இருப்பது ஆறுதலாக இருக்கிறது என்று கருணாநிதி கூறினார்.

தி.மு.கழக தலைவர் கருணாநிதி 'முரசொலி' கடிதத்தில் எழுதி இருப்பதாவது:

### உயிருடன் மாத்தையா!

உடன் பிறப்பே,

'தினகரன்' இதழில் "தளபதி மாத்தையா உயிரோடு இருக்கிறார்" என்ற தலைப்புச் செய்தியைப் பார்த்து மகிழ்ந்து போனேன்.

இப்போது அவர், விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தளபதியாக இல்லை என்றாலும் உயிரோடு இருக்கிறார் என்பதில் ஓர் ஆறுதல்.

அரசியலில் ஆதாயத்துக்காகவோ-கருத்து வேறுபாடுகளுக்காகவோ-கட்டுப்பாடு குலைத்தமைக்காகவோ "கொன்று விடுவது" என்ற கொடிய தண்டனையை மனித நேய உணர்வுடையோர் யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது.

### இடம் தந்திட கூடாது!

அதற்காகக் கட்டுப்பாடு காத்திடும் பொறுப்புள்ள ஓர் இயக்கத்தின் தலைமை அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்காமல் இருந்து இயக்கத்தின் சீர்குலைவுக்கு இடம் தந்திடவும் முடியாது! கூடாது!

மாத்தையா, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தளபதியாகத் திகழ்ந்தவர். அந்த இயக்கத் தலைவர் பிரபாகரனின் தோளோடு தோள் நின்று பணியாற்றியவர். இருவரும் ஒருசேர இணைந்து நின்று வெளிவந்த புகைப்படங்கள் எல்லாம் இன்றும் இருக்கத்தான் செய்கின்றன.

### கல்லூரி ஆசிரியர்!

அப்படி நகமும் சதையுமாக நட்புணர்வுடனும்-புலிகள் இயக்கத்தின் குறிக்கோளை நிறைவேற்றும் முனைப்புடனும் களத்தில் நின்ற பிரபாகரனுக்கும், மாத்தையாவுக்கும் இடையே எழுந்த பிரச்சனை என்ன? எதற்காக மாத்தையா இயக்கத்திலிருந்து விலக்கப்பட்டு, தினகரனில் வந்துள்ள செய்தியின்படி ஒரு கல்லூரியில் உடற்பயிற்சி ஆசிரியராக பணியாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது?

### கூப்பிட்டு கேட்க கூடாதா?

தினகரனில் குறிப்பிடப்படும் ஒரு வாரப் பத்திரிகை (நக்கீரன்) நிருபரின் தகவலின்படி மாத்தையாவிடம் கேட்கப்பட்ட கேள்வியும் பதிலும் வருமாறு:

**கேள்வி:** பிரபாகரனிடம் சென்று நீங்கள் உண்மையைச் செல்லியிருக்கலாமே?

**பதில்:** நான் ஏன் போய்ச் சொல்ல வேண்டும்? என்னைக் கூப்பிட்டுக் கேட்கக்கூடாதா?

### தட்டிக் கழிக்கவில்லை!

உடன்பிறப்பே மாத்தையாவை பிரபாகரன் கூப்பிட்டிருந்தால் சென்று விளக்கம் அளித்திருப்பார். பலமுறை கூப்பிட்டும் சந்திக்க வருமாறு முக்கிய பிரமுகர்கள் மூலம் அழைத்தும் வர முடியாது எனத் தட்டிக் கழித்து விட்டாரென்ற நிலைமை மாத்தையாவைப் பொறுத்தவரையில் உருவாகவில்லை.

எனினும் அவரை விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து ஒதுக்கி, ஒரு கல்லூரி உடற்பயிற்சி ஆசிரியர் வேலை பார்க்க அனுப்பிவிட்டார்கள்.

### குற்றச்சாட்டு!

அப்படியென்ன மாத்தையா மீது குற்றச்சாட்டு?

மாத்தையாவின் முன்னாள் நெருங்கிய நண்பர் ஒருவர் அவர் பெயர் என்ஜினியர்! விடுதலைப்புலி இயக்கத்தின் முக்கிய பிரமுகர்களில் ஒருவர்! அவர்தான் தளபதி கிட்டு, கப்பலில் புறப்பட்டு வருவது பற்றி இந்திய உளவுத்துறை அமைப்பான 'ரா' அமைப்புக்குத் தகவல் கொடுத்து விட்டார். அதனால் கிட்டுவின் கப்பல் மடக்கப்பட்டு, கிட்டுவும் அவருடன் சென்றவர்களும் மரணமுற்றார்கள்.

இவ்வாறு துரோகம் செய்த அந்த என்ஜினியர், மரண தண்டனை விதிக்கப்பட்டு முடிவெய்தினார். அவர் செய்த துரோகத்தை மேலிடத்துக்கு மாத்தையா தெரிவிக்காமல் இருந்தது தப்பு என்பதால் இயக்கத்திலிருந்து விலக்கப்பட்டார்.

### உண்மையா?

இந்த விபரங்கள், மாத்தையாவையும் அவர் நண்பர்களையும் சந்தித்த நிருபர் வாயிலாக வெளிவந்துள்ளவைகளாகும்.

இந்த குற்றச்சாட்டு உண்மையாக இருக்குமானால் தளபதிகளில் ஒருவரான கிட்டுவை இழக்கக்கூடிய அளவுக்கு நடைபெற்ற துரோகத்திற்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமை நடவடிக்கை எடுக்காமல் இருந்திட இயலாதுதான்.

### கட்டுப்பாடு மீறல்!

தலைமையை மாற்றும் அரசியல் ஆதாயத்துக்காக நடைபெற்ற ஒரு நாசச் செயலுக்கு, நண்பராக இருந்தவர் காரணம் எனத் தெரிந்தும் கூட அதனைத் தனக்கு மிக நெருக்கமான தலைமையிடம் தெரிவிக்காமலே மறைத்து விட்டது என்பதும்-கட்டுப்பாட்டை மீறிய செயல்தான்! அல்லது கட்டுப்பாட்டை மீறிக் காட்டிக் கொடுப்போருக்குத் துணைபோன செயல்தான்!

### ஆறுதல் செய்தி!

இதில் தனக்கு சம்பந்தமில்லை என்று வெளியிலிருந்து அறிக்கை விட்டுக் கொண்டிராமல்-தலைமை அழைத்துக் கேட்டிருந்தால், விளக்கியிருப்பேன். என்னை ஏன் அழைத்துக் கேட்கவில்லை, என்று ஆதங்கப்படும் மாத்தையா இயக்கம் எடுத்துள்ள நடவடிக்கைக்குக் கட்டுப்பட்டு இயங்குகிறார் என்பதும் அவர் உயிருடன் இருக்கிறார் என்பதும்- ஆறுதல் அளிக்கும் செய்திகளாகும்.

### அறை கூவல்!

அங்ஙனமின்றி, இலங்கையில் எத்தனையோ போராளி இயக்கங்கள் இருக்கின்றன. இப்போது நடந்த தேர்தலில் அந்த இயக்கங்கள் போட்டியும் இட்டுள்ளன. அவற்றைப் பின்பற்றி மாத்தையாவும் ஒரு இயக்கம் தொடங்கியிருக்கலாம் அல்லது "நானே விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவன்" என்று அறைகூவல் விட்டுக் கொண்டிருக்கலாம். அது அது அங்குள்ள சிங்கள அரசுக்கும் குளிர்விட்டதுபோல் இருக்கும்.

### சிந்திக்கத்தக்கது!

ஆனால் அப்படியெல்லாம் செய்யாமல் தன்னை அழைத்து விசாரிக்காமலேகூட-தன்னை அழைத்து வரச்சொல்லி யாரையும், அனுப்பாமலேகூட தலைமையே முன்வந்து எடுத்துவிட்ட நடவடிக்கைக்கு கட்டுப்பட்டு, கல்லூரியொன்றில் உடற்பயிற்சி ஆசிரியராக, பழைய இராணுவ உடை அணிந்திடும் உரிமையின்றி சாதாரண உடையில் கடமை ஆற்றி வருகிறார் என்பது சிந்திக்கத்தக்கது! ஆம் அங்கும் இங்கும் சிந்திக்கத்தக்கது!!

இவ்வாறு எழுதி உள்ளார்.

## கலைஞரின் அவசரம்
### உறுதிப்படுத்தாமல் உடன் பிறப்புக்கு கடிதம்!



தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் வார இதழ் நக்கீரன். இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்த காலத்தில் பிரபாகரன் உயிருடன் இல்லை என்ற செய்தி வந்தது. நக்கீரன் பத்திரிகை பிரபாகரனை தமது நிருபர் காட்டில் சந்தித்ததாக கூறி அவரது படத்தோடு செய்தி வெளியிட்டது. பின்னர் பல காலம் கழித்து பிரபாகரன் உயிரோடு இருப்பது உண்மையானது. உடனே நக்கீரன் தாம் பிரபாகரனை காட்டில் சந்தித்ததாக கூறியது பொய் என்றும், பிரபா உயிரோடு இருப்பதை நம்பவைக்கவே அவ்வாறு செய்தி வெளியிட்டதாகவும் தெரிவித்தது. சொன்னது பொய்தான். ஆனால் உண்மையை நிலைநாட்ட முயன்றோம் என்று சமாதானம் சொன்னது.

இப்போது அதே நக்கீரன் மாத்தையா உயிரோடு இருப்பதாகவும் தமது நிருபர் சந்தித்ததாகவும் செய்தி வெளியிட்டுள்ளது. ஆனால் அச்செய்தியில் முரண்பாடு இருக்கிறது. மாத்தையா யாழ் கல்லூரி ஒன்றில் உடற்பயிற்சி ஆசிரியராக இருப்பதாக நக்கீரன் கூறுகிறது. புலிகள் இயக்கத்தில் இருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ள யோகி மட்டுமே யாழ்ப்பாணத்தில் நடமாடுகிறார். அவர்தான் யாழ் இந்துக்கல்லூரியில் கிரிக்கெட் பயிற்சி கொடுத்துவருகிறார். மாத்தையா யாழ்ப்பாணத்தில் எங்கும் காணப்படவில்லை.

மாத்தையா இன்னமும் உயிரோடு இருக்கிறாரா இல்லையா என்பது கேள்விக்குரிய விடயம். ஆனால் அவர் உடற்பயிற்சி ஆசிரியராக இருக்கிறார் என்பதில் துளியளவும் உண்மை இல்லை. யோகி பற்றிய செய்தியை நக்கீரன் மாத்தையாவோடு பொருத்திவிட்டது. எனினும் தி.மு.க.ஆதரவு நாளேடான தினகரனில் (தமிழ்நாடு) அச் செய்தி மறுபிரசுரமானது.

உடனே கலைஞர் கருணாநிதி தனது முரசொலி பத்திரிகையில் ஒரு கடிதம் வரைந்துள்ளார்.

வை.கோபாலசாமிக்கும் தனக்குமுள்ள பிரச்சனையை பிரபா-மாத்தையா பிரச்சனையோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

இலங்கைத் தமிழர் பிரச்சனையை தமிழக அரசியல் தலைவர்கள் தமது சொந்த அரசியலுக்கு பயன்படுத்தியதாக புலிகள் ஏற்கனவே குற்றம்சாட்டி வருகிறார்கள்.

இப்போது கலைஞரோ பிரபாகரன்-மாத்தையா பிரச்சனையையும் தனது அரசியல் பிரச்சனையில் பயன்படுத்தியிருக்கிறார்.

செய்தி சரியா தவறா என்று உறுதி செய்யாமல் கலைஞர் முரசொலி பத்திரிகையில் எழுதியுள்ள கடிதம் இங்கு மறுபிரசுரம் செய்யப்படுகிறது.

'முரசொலி' பத்திரிகை கலைஞரின் குடும்பப் பத்திரிகையாகும். அதில் உடன் பிறப்புக்கு கடிதம் என்று கலைஞர் தன் கருத்துக்களை எழுதுவது வழக்கம்.

**அலசுவது – இராஜதந்திரி**

# வடக்கு-கிழக்குப் பிரச்னை குறித்து நேர்த்தியான அரசியல் சிந்தனைக்கு வழிவகுத்திருக்கும் தென்மாகாண சபைத் தேர்தல்

இலங்கையில் மாகாணசபை ஆட்சி முறை பிரபலமடைந்திருப்பதனையும், இத்தகைய ஆட்சி முறையின் மூலம் எதிர்காலத்தில் இலங்கையில் விரிவான செயல் திட்டங்களை முன்னெடுக்க முடியும் என்பதனையுமே தென்மாகாணசபைத் தேர்தல் உணர்த்தி நிற்கின்றது.

1987ம் ஆண்டு இலங்கை-இந்திய சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டிருந்தது. வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு ஒரு தீர்வு காணப்படும் வகையிலும், இலங்கையில் அதிகாரப் பரவலாக்கத்தை அறிமுகப்படுத்தும் விதத்திலுமே மாகாணசபை அமைப்பு முறை இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் முக்கிய இடம் பெற்றிருந்தது.

மறைந்த இந்தியப் பிரதமர் திரு.ராஜீவ் காந்திக்கும், முன்னாள் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனாவுக்குமிடையே இலங்கை-இந்திய சமாதான ஒப்பந்தம் கொழும்பில் வைத்துக் கைச்சாத்தாகியிருந்தது.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை தயாரிக்கும் பொருட்டு இந்திய அதிகாரிகள் இலங்கையின் மிதவாத, தீவிரவாத தமிழ் அரசியல்வாதிகளுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.

இதனையடுத்து தமிழீழ விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ் அரசியல் அமைப்புக்கள் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டன. கூடவே வடக்கு-கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைந்த மாகாண சபை ஆட்சி முறைக்கும் உடன்பட்டிருந்தன.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை வடக்கே தமிழீழ விடுதலைப்புலிகள் நிராகரித்திருந்த சமயம் தெற்கிலும் அந்த ஒப்பந்தத்துக் கெதிராகக் குரல்கள் எழுந்திருந்தன.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் குறித்து, முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் ஆட்சியில் பிரதமராக இருந்த மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா கூட அதிருப்தி கொண்டிருந்தார்.



இலங்கை-இந்திய ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட கொழும்பு வந்திருந்த மறைந்த இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி அணி வகுப்பு மரியாதையின் போது கடற்படை வீரர் விஜிதமுனியால் தாக்கப்படும் காட்சி

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான தருணத்தில் கொழும்பில் கண்டனக் கூச்சல்கள் எழுந்திருந்ததுடன் அசம்பாவிதங்களும் இடம்பெற்றிருந்தன.

இறுதியாக ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட இலங்கை வந்திருந்த மறைந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் அவமானப் படுத்தப்பட்ட நிலையிலேயே புதுடில்லி திரும்பியிருந்தார்.

கொழும்பில் வைத்து ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக ராஜீவ் காந்திக்கு வழங்கப்பட்ட பிரியாவிடை அணிவகுப்பின் போது, அணிவகுத்து நின்ற கடற்படை வீரர் ஒருவர் தமது ரைபிள் துப்பாக்கியால் ராஜீவ்மீது தாக்கியிருந்தார். இத்தாக்குதலில் இருந்தும் ராஜீவ்காந்தி முதுகில் அடிபட்ட நிலையில் காயமெதுவுமின்றித் தப்பியிருந்தார்.

இத்தாக்குதல் தென்னிலங்கையில் நிலவிய இந்திய எதிர்ப்பு உணர்வையே வெளிப் படுத்தியிருந்தது.

அன்று விஜிதமுனி என்ற கடற்படை வீரரே ராஜீவ் காந்தியைத் தாக்கியிருந்தார். இச்செயலின் காரணமாக அவர் சிறையிலிடப்பட்டிருந்தார்.

ஆயினும் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவின் ஆட்சியில் விஜிதமுனி சிறையிலிருந்தும் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

ராஜீவைத் தாக்கியதால் பிரபலமடைந்திருந்த முன்னாள் கடற்படை வீரர் விஜிதமுனி நடந்து முடிந்த தென்மாகாண சபைத் தேர்தலில் ஒரு வேட்பாளராக போட்டியிட்டிருந்தார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

விஜிதமுனி அன்று மறைந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை தாக்கிய சம்பவம், இலங்கை-இந்திய ஒப்பந்தத்தையும் அதனோடு அறிமுகமான மாகாணசபை நிர்வாக முறையையும் தென்னிலங்கையர்கள் பரிபூரணமாக ஏற்றிராததையே புலப்படுத்தியிருந்தது.

ஆனால் தற்போது ராஜீவ் காந்தியைத் தாக்கியிருந்த விஜிதமுனியே தென்மாகாண சபைத்தேர்தலில் குதித்திருந்தமை, தென்னிலங்கையர்கள் மாகாணசபை நிர்வாக முறையை பெருமளவில் ஏற்றுக்கொண்டிருப்பதையே வெளிப்படுத்துவதாக இருந்தது.

வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு ஒரு தீர்வை ஏற்படுத்தும் வகையிலேயே மாகாணசபை நிர்வாக முறை ஆரம்பத்தில் அறிமுகப் படுத்தப்பட்டிருந்தது. ஆனால் இன்று வடக்கு-கிழக்கு மாகாணத்தில் மாகாணசபை நிர்வாகம் வெற்றியளிக்காத நிலையில் இலங்கையின் ஏனைய மாகாணங்களில் இந்த மாகாண நிர்வாக முறை அமுலில் இருக்கின்றது. அத்துடன் மாகாண சபை முதலமைச்சர்கள் மற்றும் மாகாணசபையின் ஏனைய அமைச்சர்கள் ஆகியோரின் பதவிகளும் முக்கியம் பெற்றவையாக இருக்கக் காணப்படுகின்றன.

அண்மையில் தனது 80வது வயதைப் பூர்த்தி செய்திருந்த லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் திரு.பேர்னாட் சொய்ஸாவும் மேல்மாகாண சபையில் ஓர் அமைச்சராக இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு.பேர்னாட் சொய்ஸா இலங்கையின் முன்னணி இடதுசாரித் தலைவர்களில் ஒருவராவார். அத்துடன் பல்வேறு முன்னணி அரசியல்வாதிகளுடனும் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்த திரு.பெர்னாட் சொய்ஸா மேல் மாகாண சபையில் ஓர் அமைச்சராக இருப்பதன்மூலம், அப்பதவி மேலும் அர்த்தம் நிறைந்ததாக இருக்கக் காணப்படுகின்றது.

இவ்வாறு மாகாணசபைகள் இலங்கையின் நிர்வாகப் பரவலாக்கல் விடயங்களில்

## அரசியல் முதிர்ச்சி பெற்றுள்ள முன்னாள் கடற்படை வீரர் விஜிதமுனி

செல்வாக்குச் செலுத்தி வருவதை அறியக் கூடியதாக தற்போது இருக்கின்றது. கூடவே மக்களும் முன்பு பாராளுமன்ற அமைப்பு முறையின் கீழ் குவிந்திருந்த அதிகாரங்கள், இன்று மாகாண ரீதியாக இருப்பதனால் அதிகாரப் பரவலாக்கம் குறித்து நன்கு அறிந்து கொள்ளும் சூழ்நிலைகள் உருவாகியுள்ளதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

எனவே மாகாணசபை நிர்வாகமுறை, இலங்கையில் நிர்வாகப் பரவலாக்கல் குறித்து மக்கள் உணரத் தலைப்பட்டுள்ளதையும், எதிர்காலத்தில் விரிவான நிர்வாகப் பரவலாக்கத்தை வலியுறுத்துவதாகவுமே இருக்கக் காணப்படுகின்றது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலும் இன்று பரந்தளவில் அதிகாரப் பரவலாக்கத்தை மேற்கொள்வதன் மூலமே அப்பிரதேசங்களில் ஓர் அரசியல் தீர்வை ஏற்படுத்தும் சூழ்நிலைகள் உருவாக வழிவகுக்க முடியும்.

வடக்கு-கிழக்கு மாகாணம் இலங்கையின் தமிழ்பேசும் சிறுபான்மையின மக்களைப் பெருமளவில் கொண்டிருக்கக் காணப் படுகின்றது. இந்நிலையில் இம்மக்களைப் பெருமளவில் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு நிர்வாக அமைப்பு முறை, கூடுதல் அதிகாரங்களுடன் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் ஏற்படுவது மிகவும் இன்றியமையாததாகின்றது.

கல்வி, சமூக, பொருளாதார, அரசியல் ரீதியாக இன்று இலங்கையில் பெருமளவு விழிப்புணர்வு தோன்றியிருக்கக் காணப்படுகின்றது. சாதாரண பாடசாலைகள் முதல்கொண்டு பல்கலைக்கழகம் வரையிலான கல்வியில் பெருமளவு நாட்டம் காட்டப்படும் நிலை இளைஞரிடையே காணப்படுகின்றது.

பொருளாதார ரீதியாகக்கூட இன்று தென்னிலங்கையில் கைத்தொழில் பேட்டைகள், தொழிற்சாலைகள், சுதந்திர வர்த்தக வலயங்கள், உல்லாசப் பயணத்துறை சார்ந்த ஹோட்டல்கள் என்பன உருவாகியிருக்கக் காணப்படுகின்றன.

இவை தவிர புதிய பல்கலைக்கழகங்கள், மற்றும் வெளிநாட்டு உதவியுடனான தொழில் நுட்பக் கல்லூரிகள், என்பனவும் தென்னிலங்கையில் தோன்றியிருக்கக் காணப்படுகின்றன.

காலனித்துவ ஆட்சியிலும், சுதந்திரத்துக்குப் பின்னரும் அரசாங்க அதிபர்களின் நிர்வாகங்களுக்கு உட்பட்டிருந்த பிரதேசங்கள் இன்று மாகாண சபை அமைப்பு முறையின் கீழ் விரிவான நிர்வாக அமைப்பைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன.

எனவே கல்வி, சமூக, பொருளாதார, அரசியல் மற்றும், பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயங்கள் ஓரிடத்தில் குவிந்திருந்தமையினாலும், இதன் காரணமாக



மாகாணசபை அமைப்பு முறைக்கு வழிவகுத்த இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் காட்சி.

சிறுபான்மை இனங்களின் அபிலாஷைகள் இனரீதியிலான கண்ணோட்டங்களுடன் புறக்கணிக்கப்பட்டமையினாலுமே, தமிழ் பேசும் மக்கள் தமது மொழி, கலாசாரம், பிரதேசம், பாதுகாப்பு ஆகியவற்றை தாமே நிர்வகிக்கும் வகையில் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பரவலாக்கத்தைக் கோரியிருந்தனர்.

தமிழ்த் தலைவர்களின் அதிகாரப் பரவலாக்கம் குறித்த சமஷ்டி அமைப்புக் கோரிக்கையை ஆட்சியாளர்கள் குறுகிய இனவாதக் கண்கொண்டு நோக்கினர்.

இதன் காரணமாக தமிழ் பேசும் மக்களின் கல்வி, தொழில் வாய்ப்பு, பொருளாதார, அரசியல் துறைகள் காலப்போக்கில் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருந்தன.

கல்வித் துறையில் விரிவான கொள்கைத் திட்டங்கள் காணப்படாமையால் தமிழ் பேசும் மாணவர்களின் உயர் கல்வி பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருந்தது.

இதனால் தொழில் வாய்ப்புக்கள் விடயத்தில் அவர்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கும் சூழ்நிலைகள் தோன்றியிருந்தன.

இதனையடுத்தே இனரீதியிலான கெடுபிடிகள் உருவானதைத் தொடர்ந்து வடக்கு-கிழக்குப் பிரதேச சிறுபான்மை இனத்தவர்கள் தமது சுய நிர்ணய உரிமை குறித்த போராட்டத்தை தீவிரப்படுத்தியிருந்தனர்.

இப்போராட்டத்தின் விளைவாகவே மாகாண சபை நிர்வாக முறை இலங்கையில் தோற்றம் பெற்றிருந்தது. ஆயினும் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இணைப்பு, மற்றும் அம்மாகாணங்களில் நடைமுறைப் படுத்தப்படும் குடியேற்றத்திட்டங்கள், சட்டம் ஒழுங்கு சார்ந்த விடயங்களில் ஆளுங் கட்சியினருக்கும், தமிழ் அரசியல் அமைப்புகளுக்குமிடையே இழுபறி நிலை தோன்றியிருக்கக் காணப்படுகின்றது.

இதனால் மாகாண சபை அமைப்பு முறையானது வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தோல்வியடைந்திருக்கக் காணப்படுவதுடன் அம்மாகாணங்களில் கல்வி, சமூக, பொருளாதார விடயங்கள் மற்றும் சௌக்கிய சேவை, சட்டம்-ஒழுங்கு என்பன பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கக் காணப்படுகின்றன.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தையடுத்து வடக்கு-கிழக்கு மாகாணங்கள் ஒரு மாகாணமாக இணைக்கப்பட்டன. இந்த ஒரே மாகாண அமைப்பின் கீழேயே வடக்கு-கிழக்கு மாகாண சபையும் தோற்றம் பெற்றிருந்தது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்கீழ் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிர்வாகத்தை அமுல்படுத்தும் வகையில் இந்திய அமைதிப்படையினரும் ஒப்பந்தம் கைச்சாத்தான 1987ம் ஆண்டிலிருந்து 1990ம் ஆண்டு முற்பகுதிவரை வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

இருந்தபோதிலும் வடக்கு-கிழக்கு மாகாண அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக இலங்கை-இந்திய அரசுகளுடன் முரண்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இந்திய அமைதிப் படையினருக்குமிடையே மோதல்கள் மூண்டமை மிகவும் துரதிஷ்டமானதாகவே இருந்தது.

இராஜதந்திர ரீதியிலான அணுகு முறைகளைக் கைவிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளும், இந்திய அமைதிப்படையினரும் நடத்திய மோதல்கள் வடக்கு-கிழக்கு நிலைமையை மேலும் மோசமாக்கிவிட்டிருந்தது.

இந்தியப் படையினர் வடக்கு-கிழக்கிலிருந்தும் வாபஸ் பெற்ற நிலையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இரு வேறுபட்ட சூழ்நிலைகள் இன்று நிலவக் காணப்படுகின்றன.

வவுனியாவுக்கு வடக்கே தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் வலுவடைந்திருக்கக் காணப்படுகின்றது. ஆனால் வவுனியாவிலும், கிழக்கிலும் பாதுகாப்பு நிலைமை திரப்திகரமானதாக இல்லாத போதிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் நடமாட்டங்கள் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், அரசாங்கம் சிவில் நிர்வாகத்தையும் மேற்கொண்டு வருகின்றது. கூடவே அண்மையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களையும் கிழக்கிலும், வவுனியாவிலும் நடத்தியிருந்தது.

எனவே வடக்கே வவுனியாவுக்கப்பால் புலிகளின் ஆதிக்கமும், கிழக்கிலும், வவுனியாவிலும் அரசின் நிர்வாகமும் தற்போது நிலவக் காணப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் சட்டம்-ஒழுங்கு, சிவில் நிர்வாகம், பாதுகாப்பு மற்றும் பொருளாதாரம் சம்பந்தப்பட்ட விடயங்களில் தாம் கொண்டுள்ள நிலைப்பாடுகளை எடுத்துக்காட்டும் விதத்திலேயே வடக்கே தமது நிர்வாகத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

தாம் ஆதிக்கஞ் செலுத்தும் பகுதிகளில் தமது பொலிஸ் நிலையங்கள், மற்றும் தமது நீதிமன்றங்களை இயக்கி வருகின்றனர்.

அவர்களின் இத்தகைய நடவடிக்கைகள், அவர்கள் எதிர்பார்க்கின்ற ஒரு நிர்வாக அமைப்பு முறையையே வெளிப்படுத்துவதாக இருக்கின்றன.

இந்நிலையில் அரச தரப்பினரும், தமிழீழ விடுதலைப்புலிகளும் தத்தமது நிலைப்பாடுகள், எதிர்பார்ப்புகள், கோரிக்கைகள் தொடர்பாக காலதாமதமற்ற பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டியதே தற்போது இன்றியமையாததாகின்றது.

மாகாண சபை முறை இன்று இலங்கையில் பிரபலமடைந்திருக்கக் காணப்படுகின்றது. இந்த ஆட்சி முறை அதிகாரப் பரவலாக்கத்துக்கு வழிவகுத்ததாகவும் காணப்படுகின்றது.


இதே வேளை தமிழீழ விடுதலைப் புலிகள் சமஷ்டி அமைப்பு முறையையொத்த நிர்வாகமுறை குறித்தே ஆர்வங்காட்டி வருகின்றனர். இந்நிலையில் ஆட்சியாளர்கள் மாகாணசபை முறை மற்றும் புலிகளின் சமஷ்டி அமைப்பு முறை ஆகியன குறித்து விரிவான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் பட்சத்தில், இன ரீதியிலான தனித்துவங்களை அங்கீகரிக்கக் கூடிய பரந்துபட்ட ஒரு நிர்வாக முறை எதிர்காலத்தில் தோற்றம் பெறும் எனக் கருதலாம்.

அத்தகைய சூழ்நிலை ஏற்படுமானால் புலிகளும் அரசதரப்பினரும் தத்தமது கரங்களிலுள்ள கொடிய ஆயுதங்கள் தம்மை அறியாமலேயே கை நழுவுவதையும் உணர்ந்து கொள்ள முடியும்.

எனவே தென்மாகாண சபைத் தேர்தலில் யார் யாருக்கு வெற்றி கிடைத்தது என்று அலட்டிக்கொள்வதைவிட, நாட்டின் சர்ச்சைக்குரிய வடக்கு-கிழக்குப் பிரச்னையைத் தீர்ப்பதற்கான ஒரு நேர்த்தியான அரசியல் சிந்தனைக்கு தென் மாகாணத் தேர்தல் வழியமைத்துள்ளதென்று குறிப்பிடுவதே சாலப்பொருத்தமானதாக இருக்கின்றது. ●




## பாடலோடு தரையிலே முத்தம்



குள்ளமாக இருக்கின்றோமே என்று சிலர் கவலையால் வாடுவார்கள்.

அந்த கவலையும் தாழ்வு மனப்பான்மையும் வாழ்க்கையை நரகமாக்கிவிடும்.

படத்தில் உள்ள பெண் இருக்கிறார் பாருங்கள். அவர் மிகவும் குள்ளமானவர்தான். ஆனால் உள்ளம் உறுதியானவர்.

அதனால் பல சாதனைகளை படைத்திருக்கிறார்.

முரசின் முகப்பில் இருக்கும் படம் தனது நெற்றியை கால் பெருவிரலால் அவர் தொடுகின்ற சாதனைக் காட்சி.

உடலை வளைத்து முகத்தால் நிலத்தை முத்தமிடுவது எத்தனை கஷ்டமானது. ஆனால் இவரோ தனது பருத்த உடலை வளைத்து தரையை முகத்தால் தொடுவதோடு பாட்டும் பாடிக்கொண்டி ருப்பார். உடலின் ஏனைய அம்சங்கள் அசையாமல் இருக்க இடையை மட்டும் அசைக்கும் சாதனையையும் படைத்துள்ளார்.

இந்த சாதனைப் பெண்ணின் பெயர் மே நாத் பாஸ். அமெரிக்காவில் ஜக்சன்விலே என்ற ஊரைச் சேர்ந்தவர்.

பருமனும், குள்ளமும் உள்ளபோதும் உள்ளத்தில் உறுதியும், முயற்சியும் கண்டவர் வியக்கும் சாதனையாளராக்கிவிட்டது.

## தூக்கம் இல்லாத பெண்கள்!

## விரக்தியை வளர்க்கும் வீட்டுச் சுமைகள்

ஆண்களைப் பார்க்கிலும் பெண்கள் அதிகமாக உளரீதியான பாதிப்புக் குள்ளாகும் நிலை ஏற்படுகிறது. சூழ்நிலை காரணமாக பெண்களுக்கு பல தரப்பட்ட அழுத்தங்கள் எற்படுவதே இதற்குக் காரணமாகும். இதனால் மிக விரைவாக அவர்கள் விரக்தியடைந்து விடுகின்றனர்.

இயல்பாகவே பெண்களின் உடல் நிலைக்கேற்ற அளவு ஒய்வு காட்டாமலிருப்பதே பிரதான காரணமாகும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆண்களைவிட பெண்களுக்கு தூக்கம் ஒன்றரை மணிநேரமாவது கூடுதலாக இருக்க வேண்டும்.



ஆண்கள் ஒரு நாளில் 8 1/2 மணி நேரம் தூங்கினால் பெண்கள் ஒன்பதே முக்கால் மணி நேரமாவது தூங்கியாக வேண்டும். இந்த அளவு தூங்கும் வசதி ஒரு பெண்ணுக்குக் கிடைக்குமானால் அவள் போதுமான உளவள ஆற்றல் பெற்றவளாகவும் சுகதேகியாகவும் காணப்படுவாள்.

ஆனால், சமுதாய அமைப்பின்படி பார்த்தால் எந்த நாட்டிலும் இவ்வளவு நீண்டநேரம் எந்தப் பெண்ணும் தூங்க முடியாது.

'பின் தூங்கி முன் எழுதல்' பெண்ணின் கடமை என்று சுலபமாய் சொல்லப்படுகிறது. பெண்ணை வெறும் உழைப்புக்கான இயந்திரமாக கருதும் மரபு அது.

கணவனுக்குப் பின்னர் தூங்கி, கணவன் எழும்புவதற்கு முன்னதாகவே கண் விழித்து தன் கடமைகளை ஒரு பெண் செய்தாக வேண்டும். வேலைக்குச் செல்லும் கணவன் அலுவலகத்தில் 8 மணிநேரம் வேலை செய்தால் போதும். பின்னர் ஓரிரு மணி நேரம் பொழுது போக்கு; பின்னர் வீடு வந்து ஒய்வெடுப்பார். ஆனால் அதிகாலையில் எழும் மனைவி கணவனுக்கு வேண்டிய பணிவிடைகள், குழந்தைகள் இருந்தால் அவர்களுக்குரிய பணிகள் ஆகியவற்றைக் கவனிக்க வேண்டும். சகலருக்கும் காலை உணவு தயாரித்தளிக்க வேண்டும். பாடசாலை செல்லும் குழந்தைகள் இருந்தால் அதற்கான உதவிகளை வழங்க வேண்டும். பின்னர் மதிய உணவு, இரவு உணவு இடைத் தீனி அத்தனையும் தயாரித்தாக வேண்டும். வீட்டைச் சுத்தம் செய்து, ஆடை அணிகளைத் தோய்த்து-இவ்வாறு இரவு வெகு நேரம் வரை இயந்திரம் போன்றே சுழல வேண்டும்.

தொழிலுக்குச் செல்லும் பெண்ணானால்மேலும் சுமை அதிகம். அலுவலகம் செல்லும் முன்னரும் சென்று திரும்பிய பின்னரும் சகல காரியங்களையும் அவளே செய்ய வேண்டும். இத்தனைக்கும் தனக்கு எத்தகைய வசதியீனங்கள் இருந்த போதிலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் கணவன் மனமோ பிள்ளைகள் மனமோ கோணாமல் நடந்து கொள்ளவேண்டும்.

இதே சூழ்நிலை நமது கீழத்தேய நாடுகளில் மட்டுமல்ல மேலத்தேய நாடுகளிலும் இருந்து வருவதை ஆய்வாளர்கள் சீர்தூக்கிப்பார்த்துள்ளனர். பிற்ஸ்பரோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த எல்லன் ஃபிராங் என்பவர் தலைமையிலான ஆய்வுக் குழு ஒன்று 1984ம் ஆண்டு முதல் விரிவான ஆய்வு களைச் செய்து வெளியிட்டுள்ள முடிவின் படி, 'பெண்கள் உள ரீதியாகப் பாதிக்கப் படுவதற்கான காரணம் போதுமான தூக்கமின்மையே' என்று தெரிகிறது.

ஒரு பெண் சராசரி 10வது வயதில் தனது தூங்கும் காலத்தைப் படிப்படியாகக் குறைத்துக்கொள்ளுகிறாள். பள்ளிக்கூடப் பாடங்களை இரவு வெகு நேரம் கண் விழித்துப் படிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்படும் பெண் அப்பருவத்திலிருந்தே போதுமான தூக்கத்தைப் பெற முடியாதவளாகிறாள் என்று ஆய்வின் முடிவு மேலும் கூறுகிறது.

குடும்பப் பொறுப்புக்களில் பெண்ணோடு ஆணும் பங்கெடுப்பதும், பரஸ்பரம் உதவுவதும், பெண்ணின் சுமை களைக் குறைக்கும். வீடு விரக்தியான இடமாக இல்லாமல் இருக்க ஆணும், பெண்ணும் சுமைகளை சமமாக பகிர்ந்து கொள்வது முக்கியம். பெண்ணை இயந்திர மாய் கருதாமல் அவளை ஒரு மனுஷியாக மதிப்பது வீட்டை இன்பமான இடமாக்கும்.

## வெந்நீரில் குளித்தால் கரைந்துபோகும் ஆடைகள்!

### பெண்களுக்கான புதிய தயாரிப்பு ரெடி

ஐரோப்பிய நாடுகளில் புதுவகை ஆடை அணிகள் இந்த வருடக் கோடை காலத்தில் படையெடுக்கவிருக்கின்றன. இவ்வாடைகள் ஒரு தரமோ இரண்டு தடவைகளோ மட்டும்தான் பாவிக்கத்தக்கவை. இவற்றை சலவை செய்யவோ ஸ்திரிக்கை போடவோ வேண்டிய அவசியமில்லை. விலை மிக மிகக் குறைவாக இருப்பதனால், புதிது புதிதாக வாங்கி அவ்வப்போது அணிந்து கொள்ளலாம்.

பெண்களுக்கான வகை வகையான இவ்வாடைகளை பரீட்சார்த்தமாக அமைத்து ஜேர்மனியின் பல நகரங்களில் அறிமுகப் படுத்தியது ஒரு நிறுவனம். அத்தனையும் மிக வேகமாக விற்பனையாகி விட்டன.

இவற்றுக்கிருந்த கிராக்கி அதிகரித்தமையினால் உற்பத்தியாளர்களால் சமாளிக்க முடியாமற் போயீவிட்டது. உற்பத்தியாளர்களுக்கு கோரிக்கைகள் வந்து குவிந்த வண்ணமுள்ளன. ஜேர்மன் நாட்டின் நகரங்களில் மட்டுமல்லாமல், இந்த ஆடைகளைப் பற்றிக் கேள்விப்பட்ட, ஏனைய ஐரோப்பிய நகரங்களிலுள்ள ஆடை விற்பனையாளர்களிடமிருந்தெல்லாம் கோரிக்கைகள் வந்து சேர்ந்துள்ளமையினால் இந்த ஆடைகளை உற்பத்தி செய்வதற்கென பல புதிய தொழிற்சாலைகளை நிறுவியுள்ளனர்.

சாதாரண ஆடைகளைப் போன்றே இவை காட்சியளிக்கும். அணிந்தால் உடலுக்கு மிக நேர்த்தியாகவும் காணப்படும். ஆனால் நீடித்து உழைக்க முடியாத மிக மலிவான மூலப் பொருட்களால் ஆக்கப்பட்டவை. இவை தைக்கப்படுவதற்குப் பதிலாக ஒரு வகைப்பசையால் ஒட்டப்படுகின்றன. கண் கவர் வர்ணங்களில் மிகக் கவர்ச்சியாகவும் தென்படுகின்றன.

இரு தடவைகள் மட்டும் அணியலாம். அதற்குமேல் நீடிக்கும் சக்தி இவ்வாடைகளுக்கு இல்லை. அதே ஆடைகளுடன் குளியலறைக்குள் புகுந்து வெந்நீரில் குளித்தால், ஆடையும் கரைந்து தண்ணீருடன் போய்விடும். இவற்றுக்கு சவர்க்கார நுரையைக் கண்டால் பிடிக்காது. சவர்க்காரம் பட்டதும் சுருங்கிவிடும்.

இந்த ஆடைகளை முதன் முதலில் கண்டுபிடித்தவர் ஜேர்மனியரான ஏர்லன்ஸ் ராஜ்ரீக் என்பவர். இதனை அவர் உருவாக்கத் துணிந்தமைக்கான காரணமும் விசித்திரமானதே! ஏர்லன்ஸ் ஒரு தடவை ஒரு விலை மலிவான 'ரீ சேட்' ஒன்றை வாங்கினார். அதனை ஓரிரு தடவை பாவித்த பின்னர் கழுவினார். தண்ணீர் பட்டவுடன் அந்த ரீசேட் சுருங்கி, வர்ணங்கள் கரைந்து உதிர்ந்தும் போய்விட்டது. இந்தச் சம்பவத்தை ஆதாரமாக வைத்தே புதிய வகை கடதாசித் துணியை உருவாக்கினார். வகை வகையான ஆடைகளைத் தயாரித்தார். இரண்டு வருட ஆராய்ச்சியின் பின்னரே சரியான முறையில் ஆடைகள் தயாரிக்கப்பட்டு பரீட்சார்த்தமாக கடந்த ஆண்டின் மத்தியில் விற்பனை செய்யப்பட்டன.

ஏர்லன்ஸ் ராஜ்ரீக் இப்பொழுது மூன்று தொழிற்சாலைகளை நிறுவியுள்ளார். அமெரிக்கா, பிரிட்டன், கனடா, பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்தெல்லாம் வந்து குவியும் கோரிக்கைகளை ஈடுசெய்ய இரவு பகலாக நூற்றுக்கணக்கான பணியாட்கள் ஆடைகளைத் தயாரித்து வருகின்றனராம்.

எதிர்வரும் மே மாத ஆரம்பத்திலேயே இப்புதுரக ஆடைகள் அவனியெங்கும் படையெடுத்துவிடுமாம்.

உடைகளைச் சலவை செய்யும் நேரம் மிச்சமாவதுடன் அதற்காகச் செலவு செய்யும் பணமும் மிச்சம் என்று பெண்கள் குதூகலிக்கும் அதே வேளையில் விலையுயர்ந்த துணிகளைத் தயாரிப்போர், ஆடைகளை உற்பத்தி செய்வோர் தங்கள் வியாபாரம் படுத்து விடுமே என்று ஏங்க ஆரம்பித்து விட்டனர். அதேபோல் சலவைத் தொழிலிலீடுபட்டுள்ள தொழிலாளர்களும் தங்கள் வயிற்றில் அடி விழப்போகிறதே என்று விசனப்படத் தொடங்கிவிட்டனர்.



## நீங்களும் தைக்கலாம்

### துணிகளை வெட்டும்போது கவனிக்க வேண்டியவை:

1. குறுக்கு அல்லது நிரப்பல் இழை (Weft thread of filling) அல்லது நெடுக்கு அல்லது நெசவுப் பாவசம் (Selvedge thread) கவனித்து வெட்ட ஆரம்பிக்க வேண்டும்.
2. மூலைகளைக் கவனிக்க வேண்டும்.
3. முதலில் பெரிய பாகங்களைக் கத்தரித்துக் கொண்டு, பிறகு சிறிய பாகங்களைக் கத்தரித்துக்கொள்ள வேண்டும்.
4. டக்குகள் (Tacks), மடிப்புகள் (Pleats), தையல்கள் (Seams) இவைகளுக்குத் துணி விட்டுக் கத்தரிக்க வேண்டும்.
5. பல்பல்லாக வெட்டாமல், ஒழுங்காக வெட்டவேண்டும்.
6. சரியான பக்கமும் (Right side), தவறான பக்கமும் (Wrong side) கவனித்த பிறகு வெட்ட வேண்டும்.

### வெல்வெட் (Velvet) துணி வெட்டும் பொழுது கவனிக்க வேண்டியவை:

1. காகித மாதிரியைத் (Paper pattern) துணியின் மேல் வைத்து, தையற்காரர் இழையோட்டல் தையலை (Tailors taking) உபயோகித்து, மாதிரியை எடுக்க வேண்டும். துணியை வெட்டுமுன் ஊசி கொண்டு பதியச் செய்த பிறகே வெட்ட ஆரம்பிக்க வேண்டும்.
2. வெட்டும்போது வெல்வெட்டின் சரியான பக்கம், அதாவது பட்டுக் குவியல் (Flesh) பாகமாக இருப்பது எல்லாம் மேல் நோக்கி இருக்கும்படி கவனிக்க வேண்டும்.

## கொண்டை அலங்காரப் போட்டி

இலண்டனில் கடந்த ஆண்டுக்கான சிறந்த கொண்டை அழகியை தேர்வு செய்ய சமீபத்தில் போட்டி நடந்தது.

போட்டியில் மான் கொண்டை, முள் கொண்டை, குழாய் கொண்டை, சுருள் கொண்டை என்று வித விதமான கொண்டை அலங்காரங்களுடன் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் போட்டியில் எல்லாரையும் கவர்ந்தது படத்தில் உள்ள பெண்ணின் கொண்டை அலங்காரம்தான். இந்த அலங்காரத்திற்கு ஆன செலவு ரூபா ஒரு இலட்சம்.



## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது-சுகந்தினி

### பாண் பக்கோடா

**தேவையான பொருட்கள்:**

பாண் துண்டுகள்-4
பெரிய வெங்காயம்- 2
பச்சை மிளகாய்- 4
இஞ்சி-சிறுதுண்டு
கடலை மாவு- ஒரு மே.கரண்டி
சோடா உப்பு-ஒரு சிட்டிகை
என்னெய்- பொரிப்பதற்குத் தேவையான அளவு
நெய்- ஒரு மே.கரண்டி
உப்பு-தேவைக்கேற்றப

**செய்யும்முறை:**

1. பாண்துண்டுகளைப் பொடிப்பொடியாக்கிக் கொள்ளவும்
2. வெங்காயம், இஞ்சி, பச்சை மிளகாயைப் பொடியாக நறுக்கிக் கெள்ளவும்.
3. பொடியாக்கிய பாண்துண்டுகளுடன், நறுக்கிய வெங்காயம், இஞ்சி, பச்சை மிளகாய், கடலை மாவு, நெய், உப்பு முதலியவற்றைச் சேர்த்து ஒன்றாகப் பிசையவும். சோடா உப்பையும் சேர்த்துப் பிசையவும்.
4. சூடான எண்ணெயில் பக்கோடா செய்வது போல் சிறு சிறு உருண்டைகளாகப் போட்டுப் பொரித்து எடுக்கவும்.

### பச்சை சட்னி சாண்ட்விச் டோஸ்ட்

**தேவையான சாமான்கள்:**

உருளைக்கிழங்கு-2 (வேகவைத்து மசித்துக் கொள்ளவும்)
பச்சைக் கொத்தமல்லி- ஒரு சிறிய கட்டு
பச்சைமிளகாய்-5
புளி-சிறிது
உப்பு- தேவையான அளவு

**செய்முறை:**

1. உருளைக் கிழங்கை வேகவைத்து மசித்துக் கொள்ளவும்.
2. பச்சைக் கொத்தமல்லி, பச்சை மிளகாய், உப்பு, புளி வைத்து அரைக்கவும்.
3. மசித்த உருளைக்கிழங்குடன் சேர்க்கவும்.
4. வெண்ணெய் தடவிய பாண் துண்டின் நடுவில் வைத்து டோஸ்ட் செய்யவும்.


பரிசுத் திட்ட கூப்பன் இல-7

தினமுரசு-அருள் ஜுவல்லர்ஸ் இணைந்து வழங்கும் தங்க நகைப் பரிசுத் திட்டம்

தங்க நகைப் பரிசுத் திட்டத்தில் பங்குபற்றி வெற்றியீட்டும் அதிஷ்டசாலிகளில் முதல் அதிஷ்டசாலிக்கு தங்க நகை காத்திருக்கிறது.

ஏனைய பத்து அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

1. மகளிர் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
2. இல 1 முதல் 20 வரையான பரிசுத்திட்ட கூப்பன்களைச் சேகரித்து வையுங்கள்.
3. சேகரித்து வைத்துள்ள கூப்பன்களைப் பின்னர் நாம் குறிப்பிடும் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கலாம்.




## தகவல் பெட்டி

# 87 நாட்கள் அந்தரத்தில் தொங்கியவர்! வலியும் இல்லை – இரத்தக் கசிவும் இல்லை!!

ஐம்பதாம் அறுபதாம் ஆண்டுகளில் கதிர்காமத் திருவிழாக்களில் 'பறவைக் காவடியில் வரும் ஒருவர், யானை மீது வைத்து எடுத்துச் செல்லப்படும் சுவாமிக்கு மாலை சூட்டினார்' என்று பற்பல கதைகள் வெளிவரும். ஓர் உயரமான ஊஞ்சல் போன்ற அமைப்பில், முதுகில் பல உருக்கு முட்களினால் குத்தப்பட்டு மேலே அந்தரத்தில் தொங்கும் அவர் ஆண்டவனின் அருள் பெற்றவர் என்று கருதப்பட்டது.

ஆரம்பத்தில் அற்புதச் செயலாகக் கருதப்பட்ட பறவைக் காவடி காலக்கிரமத்தில் செல்வாக்கிழந்து போயிற்று.

கொழும்பு ஆடிவேல் விழா மற்றும் பிற ஊர்களில் நடக்கும் திருவிழாக்களிலும் பறவைக் காவடிகள் தலைகாட்டுவதுண்டு.

படத்தில் பறவைக் காவடி எடுப்பவர் ஓர் உலக சாதனையை நிலைநாட்டியுள்ளார். தொடர்ந்து 87 நாட்கள் பறவைக் காவடியில் அந்தரத்தில் தொங்கியிருக்கிறார்.

உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடிக்க வேண்டும் என்ற ஆசையில் இந்தச் சாதனையினை அவர் நிலைநாட்டவில்லை.

தன்னுடைய ஆத்ம ஈடேற்றத்துக்காகவே இதனைச் செய்வதாக அவர் கூறியிருக்கிறார்.

வட இந்தியாவில் போபால் நகரைச் சேர்ந்த ரவி வார்ணாசி சுவாமியார் என்பது இவருடைய பெயர்.

உருக்காலான ஆறு கொழுக்கி முட்கள் முதுகிலும் கால்கள் இரண்டிலும் ஒவ்வொரு முட்களாக மொத்தம் 8 முட்களில்தான் இவர் தொங்குகிறார். உடல் முழுவதும் 108 சிறிய வெள்ளி வேல்கள் இவருடைய உடம்பின் பல பாகங்களில் செருகப்பட்டுள்ளன.

8 அங்குல நீளமான வெள்ளியாலான வேல் நாக்கை ஊடுருவிச் சென்று வாயின் ஓரங்களைத் துளைத்து வெளியாகியிருக்கும்.

"எனது சிந்தனைகள் எதுவும் உடலைப் பற்றியல்லாமல் ஆண்டவனிடம் அர்ப்பணமாகி விடுவதால் எனக்கு உடல் உபாதையோ நோவோ தென்படுவதில்லை." என்று கூறுகிறார் சுவாமி.

பறவைக்காவடி நிலையில் தொங்கும் போது சுவாமி வாரணாசி அதிக உணவு உட்கொள்ளுவதில்லை. எப்போதாவது தனது சீடர்களிடம் நீர்ப்பிடிப்புடைய பதார்த்தங்களை மட்டும் கேட்டுப் பருகுவார். பெரும்பாலான அவருடைய நேரம் தியானத்திலேயே செலவிடப்படும்.

87 நாட்கள் தனது நேர்த்தியை நடத்தி முடித்தவரை பல மருத்துவ நிபுணர்கள் பரிசோதனை செய்தனர்.

"முட்கள் குத்தப்பட்ட இடங்களில் இரத்தக் கசிவு கூட இருக்கவில்லை. எந்த வகையிலும் அவருக்கு நோவோ வலியோ இருக்கக் காணப்படவில்லை." என்று ஜேர்மன் நாட்டு மருத்துவ ஆய்வாளர் டாக்டர் ஹோர்ஸ்ட் கிரோயெனிக் என்பவர் கூறுகிறார்.

அவர் மற்றுமொரு கருத்தையும் வெளியிட்டார். "சுவாமி வார்ணாசி இந்தச் செயலின் போது வலி தென்படாமலிருப்பதற்கான தந்திரம் என்ன என்பதைக் கூறுவாரானால், சத்திர சிகிச்சையின் போது நோயாளியை மருந்து கொடுத்து மயக்க மடையச் செய்யும் முறைக்கு விடைகொடுத்து விடலாம்."

# பன்றியும் இசை மீட்டும்!





சொன்னால் நீங்கள் நிச்சயமாக ஆச்சரியப்படுவீர்கள். பன்றிகளுக்கும் இசை ஞானம் உண்டு! இதனை ஃபுளொறிடா மாநிலம், றஸ்கின் என்ற ஊரைச் சேர்ந்த பார்பரா பேக்கர் நிரூபிக்கிறார். இவரும் ஒரு இசைக் கலைஞர்.

தன் வீட்டில் வளரும் செல்லப்பிராணியான வியட்நாம் ரக பன்றிக்குட்டி ஒன்று இசை ஞானம் ஓரளவு பெற்றிருப்பதை பார்பரா அவதானித்தார்.

அவர் வீட்டில் இசைக் கருவிகளை மீட்டும்போதெல்லாம் 'லேடி லீ' என்று பெயர் சூட்டப்பட்ட அந்தப் பன்றிக்குட்டி தன்னிடம் ஓடி வந்து விசித்திரமான ஓசைகளை எழுப்புவதை பார்பரா கண்டார். மேலும் அதனை அவதானிக்க பல சோதனைகளையும் மேற்கொண்டார். தனது எண்ணம் சரியானதே என்பதை உணர்ந்து கொண்டார்.

குறிப்பிட்ட 'ஹோர்'ணை அழுத்தினால் குறிப்பிட்ட சுருதியுடன் கூடிய ஓசை வரத்தக்க விதத்தில் பல்வேறு சுருதிகள் கொண்ட ஹோர்ண்களை வைத்து எவ்வாறு சுருதி எழுப்புவது என்று அந்தப் பன்றிக்கு கற்றுக் கொடுத்தார். பல ஹோண்களைக் கொண்ட ஓர் அமைப்பினை ஏற்படுத்திக் கொடுத்தார்.

கற்றுக் கொடுத்த முறையினை அவதானித்து லேடி லீ இப்பொழுது இசை மீட்ட ஆரம்பித்து விட்டதாம்.

தனது வாயால் ஹோர்ணை அது அழுத்தும்போது ஓசை எழுகிறது. எந்த ஹோர்ணுக்குப் பிறகு எதனை அழுத்த வேண்டும் என்பதை நினைவில் வைத்து, குடுகுடு என ஓடி இசை மீட்கிறது அந்தப் பன்றிக்குட்டி.



# முதுகுப்புறத்தில் முகம் ஆச்சரிய சாதனை

ஜோரிலோ என்பது இவரது பெயர். தலையை திருப்பி முதுகுப்புறமாய் முகத்தைக் கொண்டுவந்து என்று காண்போரையெல்லாம் காண்பது என்ன கனவா, நனவா? என்று ஆச்சரியப்பட வைத்துவிடுவார். அவர் கால்களை கவனியுங்கள். இப்படியும் நடக்குமா என்ற சந்தேகம் தீர்ந்துவிடும். நாங்கள் நம்பவே முடியாத ஆனால் உண்மையான ஆச்சரியங்கள் நிறைய உண்டு.

## பெயர்கள் இப்படி

- ★ உலகில் நூறு மில்லியன் பேர்களுக்கு சாங்(Chang) என்ற பெயரே வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சீனப் பெயருக்குப் பிறகு தான் முகமது என்ற பெயர் உள்ளவர்கள் வருகிறார்கள்.
- ★ உலக அளவில் எலிசபெத் லூசி, அலிஸ் சார்லோட்டி, மேரி என்ற பெண்களின் பெயர்களும், ஜேம்ஸ், வில்லியம், அலெக்சாண்டா, தோமஸ், எட்வேட் போன்ற ஆண்களின் பெயர்களும் அதிக அளவில் வைக்கப்படுகின்றன.
- ★ ஆங்கிலம் பேசும் நாடுகளில் அதிகம் சூட்டப்படும் பெயர்—எது தெரியுமா? ஸ்மித் என்று பெயர் சூட்டுகின்றனர்.

# கர்ஜிக்கும் நேரத்தில் கச்சிதமான கிளிக்!




சிங்கம் கர்ஜனை செய்யும் என்று தெரியும். கர்ஜிக்கும் போது பார்த்திருக்கிறீர்களா? இல்லையல்லவா? படத்தில் பாருங்கள். அதுவும் ஒரே நேரத்தில் இரண்டு சிங்கக்குட்டிகள் சொல்லி வைத்தது போல் கர்ஜிக்கும் போது கமரா கச்சிதமாய் கிளிக்.கிளிக்.

கமராவால் படம் எடுக்கத் தெரிந்தால் மட்டும் போதாது. அதை எப்படி, எந்த நேரத்தில் பயன்படுத்தி வியப்புக்களை உள்ளே விதைத்தெடுக்க வேண்டும் என்றும் தெரிய வேண்டும். படம் எப்படி? படு கச்சிதம்தானே!

## காதோடு சொல்லுகிறோம்

★ ரயில் நடிகையின் தங்கை நடிகை மீண்டும் தமிழில் கலக்க வந்திருக்கிறார். படப்பிடிப்பு ஒன்றில் அவர் ஆற்றில் குளிக்கும் காட்சியில் அவதிப்பட, பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்தில் இருந்து சிலர் ஆற்றில் குதித்து அவரை அள்ளிக்கொண்டு வந்தனராம். அவர்கள் அள்ளியபோது செய்த குறும்புகளால் இனி ஆற்றில் குளிக்கும் காட்சியே வேண்டாம் என்கிறாராம் நடிகை.


★ சுகன்ய நடிகைக்கு 'நதி' படத்தில் மூன்றெழுத்து நடிகர் கொடுத்த பரிசால், பரிசு வாங்கிய இடத்தில் பயங்கர வலி என்று சொல்லுகிறார். அப்படி சொல்லிக் கொண்டாலும் கண்களில் சந்தோசம் காட்டுகிறார். காதல் இளவரசனின் பரிசு கசக்குமா என்ன?

★ நடிகர் சங்கத்தில் போட்டியோ போட்டி. நடிகவேளின் மகனுக்கு எதிராக போட்டி அமைப்பு ஒன்றை உருவாக்க சில நடிகர்கள் முயற்சியாம்.

★ பூ நடிகை மூக்குத்தியை கழற்ற முடிவெடுத்து அதைக் கொடுத்தவரிடம் அனுமதி கேட்டாராம். அவர் மறுத்து விட்டாராம். மூக்கு மூன்றெழுத்து. மூக்குத்தி கொடுத்தவரும் மூன்றெழுத்து என்று கிசு கிசுக்கிறது கோடம்பாக்கம் வட்டாரம்.

★ தானும், கணவரும் இப்போதும் காதலர்களாகவே இருப்பதாக சொல்கிறார் 'ரே' நடிகை.

★ 'இந்து' திரைக்கு வந்ததும் கல்யாணம் செய்யும் முடிவோடு இருக்கிறார் அதன் இயக்குநர் பவித்ரன்.



பிரசாந்த்
படம்-ஆணழகன்

## சண்டைக் காட்சிகளில் கவனமான நடிகர்



ஆக்சன்கிங் அர்ஜுன் சண்டைக்காட்சிகளில் மிகக் கவனமெடுத்து நடிப்பவர். அதிகமாக டூப் போடுவதில்லை. 'ஜெய்ஹிந்த்' படத்தில் நீர்வீழ்ச்சியில் ஒரு சண்டைக்காட்சி படமாக்கப்பட்டது. 150 அடி உயரமுள்ள இரு மலைகளுக்கிடையே கயிற்றுப் பாலத்தில் தொங்கியபடி செல்லும் காட்சியில் அர்ஜுன் டூப் போடாமல் தானே நேரடியாக நடித்திருக்கிறார்.

'ஜெய்ஹிந்த்' படத்தில் ரஞ்சிதா பெண் பொலிஸ் அதிகாரியாக நடித்திருக்கிறார். தீவிரவாதிகளாக பம்பாய் நடிகர்கள் ஜாக்கி சிவு, நீக்ரோ ஜானி ஆகியோர் நடித்துள்ளனர். பொலிஸ் அதிகாரியாக நடிப்பதோடு திரைக்கதை அமைத்து இயக்கும் பொறுப்பையும் அர்ஜுனே ஏற்றுள்ளார். புத்தாண்டு வெளியீடு.

### சுகன்யாவா? மீனாவா?

இன்றைய தமிழ் பட நடிகைகளில் இன்றைய தேதியில் அதிக சம்பளம் கேட்கும் நடிகை சுகன்யா.

மீனா மலைபோல் வளர்ந்து வருவதால் சுகன்யாவுக்கு போட்டியும் உண்டு. சுகன்யாவை விட மீனாவுக்கு சாதகம் கவர்ச்சி. அதனால் இந்த வருட முடிவுக்குள் மீனா சுகன்யாவை ஓரம் தள்ளிவிடலாம்.

### வெளுத்து வாங்கும் விஜயசாந்தி

விஜயசாந்தி நடித்த சூர்யா தமிழில் மொழி மாற்றப்பட்டு சக்கைபோடு போட்டுக் கொண்டிருக்கிறது.

விஜயசாந்திபோல் நடிக்க வேண்டும் என்று பல நடிகைகள் முயற்சி செய்தபோதும் அவரது கம்பீரமும் சண்டைக்காட்சிகளில் ஒரு லாவகமும் அவர்களுக்கு அமையவில்லை.

உங்களைப்போல நடிக்க வேண்டும் என்று பல நடிகைகள் முயற்சி செய்கிறார்களே என்று விஜயசாந்தியிடம் கேட்டபோது அதற்கு அவர் சொன்ன பதில்.

"சந்தோசமாக இருக்கிறது. நான் அந்தளவுக்கு புகழடைந்திருக்கிறேன் என்று தெரிகிறது. என்றாலும் என்னைப்போல் உடல்வாகு அவர்களுக்கு அமையாது."

தன்னம்பிக்கை அதிகம்தான்.

### ஸ்ரீதேவியின் புரட்சிதேவி

இந்தியில் வெற்றிக்கொடி நாட்டிய படத்தை தமிழில் புரட்சி தேவி என்ற பெயரில் மொழி மாற்றம் செய்கிறார்கள். காட்டில் இருந்து படை திரட்டி எதிரிகளை பழிவாங்கும் பெண்ணாக ஸ்ரீதேவி நடிக்கிறார்.

துப்பாக்கிச் சண்டை, குதிரைச் சவாரி என்று அசத்துகிறாராம். சத்ருக்கன் சின்ஹா, ரஞ்சித், பிரான் காதர்கான் ஆகியோரும் நடித்திருக்கின்றனர். தமிழில் பாடல்களை வாலி எழுத, எஸ்.பி.பி, சித்ரா, சுனந்தா, ரமணா ஆகியோர் பாடியிருக்கின்றனர்.

### அனுபவம் பேசுகிறது

சிவரஞ்சனியிடம் இப்போது நிறைய முன்னேற்றம். பாடம் கற்றுக்கொண்டதால் அனுபவ முதிர்ச்சியோ தெரியவில்லை. "என்னால்தான் இந்தப் படம் ஓடுகிறது என்று பெருமைப்படும் பழக்கம் எனக்கு கிடையவே கிடையாது" என்கிறார். "ஓடுகிற படத்தில் நான் நன்றாக இருந்தால் போதும்" என்று சொல்லும் சிவரஞ்சனி உண்மையில் நன்றாகத்தானே இருக்கிறார். குறையே இல்லை.



சிவரஞ்சனி

### அடித்துச் சொல்கிறார் டிஸ்கோ சாந்தி!

கவர்ச்சி நடிகை டிஸ்கோ சாந்தி இப்போது இந்திய படவுலகை ஒரு கலக்கு கலக்கிவருகிறார். தமிழ்பட கதாநாயகிகள் மீது அடிக்கடி வெறுப்படித்து அறிக்கை விடுவது டிஸ்கோவின் வழக்கம். ஒரு பாட்டுக்கு வந்து ஆடும் கதாநாயகிகள் தங்களை நிலை நிறுத்திக்கொள்ள முடியாது. நடனம் கற்ற கவர்ச்சி நடிகைகள்தான் இரசிகர்களிடம் நின்று பேர் வாங்க முடியும். இந்த ஆண்டில் மீண்டும் என் போன்றோரின் 'கவர்ச்சி' அலை பெருகும் என்று உறுதியாகச் சொல்லியிருக்கிறார் டிஸ்கோ சாந்தி. டிஸ்கோ சாந்திக்கு மறைக்க தெரியாது மனதில் உள்ளதை! அதுதான் அடிக்கடி வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

## ஆணழகன்

தனது மகனின் முன்னேற்றத்தில் உடும்புப்பிடி மாதிரியான உறுதியோடிருப்பவர் தியாகராஜன்.

அவரே திரைக்கதை அமைத்து இளையராஜாவின் இசையில் உருவாகும் படம் 'ஆணழகன்.'

'தாலாட்டு' படத்தை இயக்கிய டி.கே.ராஜேந்திரன் படத்தை இயக்குகிறார். அதிகம் பொருட்செலவில் உருவாகிவருகிறது. காதல், நகைச்சுவை, சண்டைக்காட்சிகள் என்று ஜனரஞ்சகத் தனமான படமாக உருவாக்கி வருகிறார்கள்.

### ராம்கிக்கு இரு ஜோடி

தாய்க்கும் மகனுக்கும் இடையே நடைபெறும் பாசப் போராட்டத்தை புதிய கோணத்தில் தரப்போகிறார்கள். படத்திற்கு 'மைக்கேல் தம்பா' என்று பெயரிட்டுள்ளார்கள். ராம்கி கதாநாயகனாக நடிக்கிறார். யுவராணி அவரது ஜோடியாக நடிக்கிறார். கிரிஜா என்னும் புதுமுகமும் மற்றொரு கதாநாயகியாக அறிமுகமாகிறார். இம்மாதம் படப்பிடிப்பு தொடங்குகிறது.

### கனிமொழியின் கனல் வரிகள்!

40 ஆண்டுகளுக்கு முன்னர் கலைஞர் மு.கருணாநிதி பராசக்தி படத்தில் எழுதிய வசனங்கள் பரபரப்பை உருவாக்கின.

இப்போது கலைஞரின் வசனத்தில் உருவாகியுள்ள 'புதிய பராசக்தி' படமும் அதேயளவு பரபரப்பை ஏற்படுத்தும் என்கிறார் படத்தின் இயக்குநர் கோலப்பன்.

செல்வா, நெப்போலியன், சுகன்யா, சங்கீதா ஆகியோர் நடித்துள்ளனர்.

படத்தில் கலைஞரின் மகள் கனிமொழி எழுதிய பாடல் வருகிறது. தமிழக பத்திரிகைகள் பலவற்றில் கவிதை, கட்டுரை என்று எழுதிவரும் கனிமொழி பலரது கவனத்தையும் ஈர்த்து வருகிறார்.

'புதிய பராசக்தியில்' அவர் எழுதியுள்ள பாடலின் முதல் வரிகள்,

"மனிதர்களே நீங்கள் வாருங்களேன்.
உங்கள் நிலை உணருங்களேன்.
பயத்தில் மூச்சடக்கி,
கண்ணீருக்குள் பேச்சடக்கி வாழும் நிலை மாறுமோ...
தோழனே தளராதே..."

என்று தொடர்கிறது பாடல். கனிமொழிக்கு புதிய படங்களிலும் பாட்டெழுதும் வாய்ப்புக்கள் வரக்கூடும்.

# சினி விசிட்




## 'எம்.எல்.ஏ. ஏழுமலையான்'

உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்தவர் இயக்குநர் தாசரி நாராயணராவ். இப்போதும் சுறுசுறுப்பு. அவ்வப்போது நடிப்பதும் உண்டு. இப்போது தமிழில் ஒரு படம் தயாரிக்கிறார். அவரே முக்கிய பாத்திரத்திலும் நடிக்கிறார். படத்திற்கு எம்.எல்.ஏ. ஏழுமலையான் என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். சில வருடங்களுக்கு முன்னர் தெலுங்கில் 'எம்.எல்.ஏ. ஏடுகொண்டலவாடு' என்ற பெயரில் வெள்ளிவிழா கொண்டாடி, பிறகு இந்தியில் 'ஆஜ்கா எம்.எல்.ஏ.' என்ற பெயரில் ராஜேஷ் கன்னா நடித்து வெற்றி பெற்ற படம். இப்போது தமிழில் எடுக்கப்படுகிறது. தாசரி நாராயணராவுக்கு ஜோடி சுஜாதா.

## விக்கிரம ஸ்டைல்

புது வசந்தம் புகழ் இயக்குநர் விக்கிரமனுக்கு பழையபாடல்கள் என்றால் உயிர் மாதிரி. அதுதான் தனது படங்களில் பழைய பாடல்களை புதிய பாணியில் வழங்கி வருகிறார்.

## கார்த்திக்கின் தாராளம்

தன்னுடைய மேக்அப் மேன் பத்மநாபனுக்காக படம் ஒன்றில் இலவசமாய் நடித்துக் கொடுக்க முன் வந்திருக்கிறார் கார்த்திக்.

## கஸ்தூரி மார்க் கவிதை

கவிதை எழுதுவதில் பிரியமுள்ள நடிகை கஸ்தூரி கவிதைத் தொகுப்பு ஒன்றை வெளியிட ஆசைப்படுகிறார். கவிதைகளை தெரிந்தெடுக்க கவிஞர் மு.மேத்தாவிடம் கொடுத்திருக்கிறார்.

## ஆடும் உலா

நடன இயக்குநர் கலாவும், டிஸ்கோ சாந்தியும் "டிஸ்கோ நடனக்குழு" அமைத்து வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணம் நடத்தப் போகிறார்களாம்.

## தமிழில் தனித்து முடியாது



மலையாள படவுலகில் வெற்றி நாயகன் மம்மூட்டி. மம்மூட்டி தமிழ் படங்களிலும் நடித்துள்ளார். 'அழகன்', 'கிளிப்பேச்சு கேட்கவா' போன்ற படங்கள் வியாபார வீதியில் வெற்றி பெறவில்லை. மம்மூட்டி ரஜினியோடு நடித்த 'தளபதி' படத்தில் அவருக்கு இருந்த வரவேற்பு அவர் தனிக் கதாநாயகனாக நடித்த தமிழ் படங்களில் கிடைக்கவில்லை. எனவே, தமிழில் நடிக்கும்போது இரண்டு கதாநாயகர்கள் உள்ள படங்களில் நடிப்பதே நல்லது என்று மம்மூட்டி நினைக்கிறாராம்.

## தெலுங்குக்கு சென்று வந்தவர்

'சூரசம்ஹாரம்' படத்தில் கமலுக்கு ஜோடியாக நடித்த போது இனி தன் மவுசு பயங்கரமாக உயரும் என்றுதான் நிரோஷா நினைத்திருந்தார். தாராளமாய் கவர்ச்சி காட்டி காதல் காட்சிகளில் சருடல் ஒருடலாகிவெல்லாம் நடித்தும்கூட திடீர் வீழ்ச்சி. தமிழ் படவுலகம் நிரோஷாவுக்கு டாட்டா காட்டிவிட, தெலுங்குப் பக்கம் போய் அங்கும் தயாரிப்பாளர்களது வசதிகளுக்கு ஏற்ப ஆடைகளில் சிக்கனம் காட்டினார். மீண்டும் அவரை தமிழ் பட உலகம் அழைத்திருக்கிறது. 'வானவில்' படத்தில் ஆனந்தபாபுவின் ஜோடி. 'மைந்தன்' படத்தில் செல்வாவுக்கு ஜோடி. 'தெய்வத்தின் தீர்ப்பு' படத்தில் ரகுமானின் ஜோடி. 'இன்ஸ்பெக்டர் விஜய்' என்னும் படம் சமீபத்தில் வெளி வந்திருக்கிறது. தெலுங்கில் இருந்து தமிழுக்கு மொழி மாற்றப்பட்ட அந்தப் படத்தில் ராம்கியின் ஜோடியாக நடித்திருக்கிறார்.



நிரோஷா

## கவர்ச்சிக் கலாட்டா

ஆந்திராவில் 155 நாட்களுக்கு மேல் ஓடிக் கொண்டிருக்கும் படம் 'அல்லாரி அல்லுடு'. தெலுங்கில் அதன் வசூலைப் பார்த்துவிட்டு சூட்டோடு சூடாக தமிழில் மொழிமாற்றம் செய்கிறார்கள். 'கலாட்டா மாப்பிள்ளை' என்ற பெயரில் தமிழுக்கு வரப்போகும் அந்தப்படத்தின் நாயகன் நாகார்ஜுன். அவரது ஜோடிகள் மூவர்.

நக்மா-மீனா-ரம்யா. படத்தில் கவர்ச்சிக் கலாட்டாவும் இருக்கும்.

## இயக்குநராகிறார் நாசர்

வில்லனாக நடித்து கதாநாயகனாக உயர்ந்தவர்கள் பட்டியல்களில் நிலைத்திருப்பவர்களில் ஒருவர் நாசர். நாசருக்கு இப்போது புதிய வாய்ப்பு ஒன்று தேடி வந்திருக்கிறது. படம் ஒன்றை இயக்கப்போகிறார். படத்தின் பெயர் 'அவதாரம்.'

## ரூபினி சொல்லும் இரகசியம்

பம்பாயிலிருந்து பறந்து வந்து தமிழ் படத்தில் அறிமுகமானவர் ரூபினி.

உடல்வாகும், கவர்ச்சியும் இல்லாத நடிகைகள் தன்னைவிட அதிகப் படங்களில் நடித்துவருவது ஏன் என்று ஆராய்ந்தாராம் ரூபினி. அந்த ஆராய்ச்சியில் அவர் கண்ட உண்மைகள் என்ன? இதோ அவரே சொல்கிறார்.

"எந்தக் காட்சி என்றாலும் கவர்ச்சி சேர்த்து நடித்தார்கள். வாய்ப்புக்கொடுத்த தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் ஆகியோரோடு தனிப்பட்ட முறையில் மிகவும் நெருக்கமாய் பழகினார்கள். அதுவே அவர்களது வெற்றிக்கு காரணம் என்று தெரிந்து கொண்டேன்" என்கிறார் ரூபினி.







ரூபினி
படம்-தர்ம அண்ணாச்சி

## மினிசினி

- ★ முன்னணிக் கதாநாயகர்களில் அதிகம் போலீஸ் வேடம் போடுபவர் விஜயகாந்த். 'ராஜதுரை', 'சேதுபதி ஐ.பி.எஸ்.' படத்தை அடுத்து 'ஹானஸ்ட் ராஜ்' படத்தில் போலீஸ் அதிகாரி வேடத்தில் நடிக்கிறார். 'ஹானஸ்ட்ராஜி'ல் போலீஸ் வேடத்தில் நடித்தாலும் ஒரு காட்சியில்கூட காக்கிச் சட்டையில் தோன்றமாட்டார்.
- ★ இராம நாராயணன் தயாரிக்கும் 'வா மகனே வா' படத்தை இயக்கி வரும் விசு அடுத்து ராதாரவி, சுகன்யா, மணிவாசகம் ஆகியோர் சொந்தமாகத் தயாரிக்கும் படங்களை இயக்கவுள்ளார்.
- ★ விசேகர் இயக்கி தமிழில் வெற்றி பெற்ற 'பொறந்த வீடா புகுந்த வீடா' படம் தெலுங்கில் தயாராகவுள்ளது. பானுப்பிரியா நடித்த வேடத்தில் தெலுங்கில் மதுபாலா நடிக்கிறார். இப்படத்தை நட்சத்திர இயக்குநர் பி.வாசு இயக்குகிறார்.
- ★ ஹீராவின் கைவசம் தமிழில் அதிகமாக படங்கள் இல்லை. இந்தியில், சஞ்சய் தத்துடன் ஒரு படத்திலும் இந்தியில் தயாராகும் 'ஜென்டில்மேன்' படத்தில், தமிழில் சுபாஸ்ரீ நடித்த வேடத்திலும் நடித்து வருகிறார்.
- ★ 'அமரன்' படத்தில் ஒரு பாடலைப் பாடினார் நடிகை ஸ்ரீவித்யா. பாடல் மிகவும் பிரபலமானது. இதன் பின்னர் பலர் அவரைப்பாட அழைத்தனர். முதலில் மறுத்து வந்த ஸ்ரீவித்யா, விரைவில் தேவாவின் இசையில் படமொன்றில் பாடவுள்ளார்.
- ★ நளினி, ஜீவிதா, அமலா போன்றவர்களை அறிமுகம் செய்தவர் சகலகலா வல்லவர் டி.ராஜேந்தர். இவர் தற்போது இயக்கி நடித்து வரும் 'ஒரு வசந்த கீதம்' படத்தில் ஸ்ரீகன்யா என்ற புதுமுகத்தை அறிமுகப்படுத்துகிறார்.
- ★ 'புதுப்பட்டி பொன்னுத்தாயி' என்ற படத்தில் நாதஸ்வரக் கலைஞராக நடித்து வரும் ராதிகா, படத்தில் தனது வேடம் தத்ரூபமாக வரவேண்டும் என்பதற்காக வீட்டிலிருக்கும்போது நாதஸ்வரம் ஊதிப் பழகுகிறாராம்.
- ★ இயக்குநர் மணிரத்தினம் தனது சொந்த நிறுவனமான ஆலயம் சார்பில் மூன்று படங்களைத் தயாரித்தார். அடுத்து இந்நிறுவனத்திற்காக 'கேளடி கண்மணி' வசந்த் ஒரு படத்தை இயக்கவுள்ளார்.
- ★ 'சின்னத்தம்பி' படத்தின் வெற்றிக்குப் பின் மனோரமாவுக்கு விதவைத்தாய் வேடங்கள்தான் தொடர்ந்து வந்தன. தற்போது மனோரமா, 'டியர் சன்' படத்தில் பெண் போலீஸ்காரராக வித்தியாசமான வேடத்தில் நடிக்கிறார்.



"சோம்பல் மிகக் கெடுதி பாப்பா!-தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா!
தேம்பி யழுங் குழந்தை நொண்டி.-நீ
திடங்கொண்டு போராடு பாப்பா!"
-பாரதியார்-



## தெரியுமா சேதி?




கழுதைக்கு மூத்தும் கொடுத்தால் பல் வலி போய்விடும் என்பது பண்டைக்கால ஜேர்மனியரின் நம்பிக்கை.



இந்தியாவில் சினிமாவுக்கு முன்னோடியாக இருந்தவர் தாதா சாகேப் பால்கே. அக்காலத்தில் படங்களில் நடிக்க பெண்கள் முன்வரவில்லை. அதனால் அவர் என்ன செய்தார் தெரியுமோ? தனது சமையல்காரர் சலுங்கேவை பெண் வேடமிட்டு நடிக்க வைத்தார். சமையல்காரருக்கும் பெரிய பாராட்டுக்கள் கிடைத்தன.

## பாப்பா முரசு சிறுகதை

# காதில் என்ன சொல்லிற்று?



ஓர் ஊரில் இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். ஒருவன் பெயர் ரகு. மற்றவன் பெயர் ரவி. எங்கு சென்றாலும் இருவரும் ஒன்றாகவே செல்வார்கள், வருவார்கள். ரகு,ரவி இருவரும் மணமானவர்கள். குழந்தை குட்டி உள்ளவர்கள். குறைந்த வருமானம் உள்ளவர்கள்.

ரகுதான் பெரியவன். அவன் அடிக்கடி ரவியிடம், "நீ என் உயிர் நண்பன். உன்னைப் போல் எனக்கு ஒரு ஆருயிர் நண்பன் கிடைக்கமாட்டான்," என்று சொல்வான். எல்லாரிடமும் ரவியின் நட்பைப் பற்றிப் பெருமையாகச் சொல்வான்.

ரவியும் வாய்க்கு வாய் ரகு, ரகு என்று சொல்வான்.

"உனக்காக என் உயிரைக் கொடுப்பேன்," என்பான். அதைக் கேட்க ரவிக்குச் சந்தோஷமாக இருக்கும்.

ரகுவும், ரவியும் துணி வியாபாரம் செய்பவர்கள். அதனால் அடிக்கடி வெளியூர் சென்று கொண்டே இருப்பார்கள். ஒருவருக்குத் துணையாக மற்றொருவர் செல்வது தங்கள் நட்பைப் பலப்படுத்தும் என்று நம்பினார்கள். பக்கத்து ஊரில் கோயிலில் ஒரு திருவிழா வந்தது. அத்திருவிழாவிற்குச் சற்றுப் புறத்திலுள்ள சிறிய சிறிய கிராமங்களிலிருந்து நிறைய மக்கள் வந்து கொள்வார்கள். திருவிழாவையொட்டி ஒரு சந்தையும் நடைபெறும். சந்தையில் வளையல்கடை, பொம்மைக்கடை, சோப்பு, சீப்புக்கடை, பலகாரக்கடை, துணிக்கடை எல்லாம் நிறைய வரும்.

ரகுவும், ரவியும் திருவிழாவுக்குத் துணிமணிகள் நிறைய எடுத்துச் சென்று துணிக்கடை போட்டார்கள். அவர்கள் விற்கிற துணி நேர்த்தியாகவும், அழகாகவும் இருந்ததால் எல்லாரும் அவர்கள் கடைக்கே வந்து துணிமணிகள் வாங்கினார்கள். அவர்கள் இருவரும் கொண்டு சென்ற அவ்வளவு துணிகளும் விற்று முடிந்து விட்டன. ஒரு கைக்குட்டைகூட மிஞ்சவில்லை. இருவரும் மிகவும் சந்தோஷத்துடன் ஊர் திரும்பலானார்கள். அப்போது அவர்கள் தங்கள் வீட்டிற்கு விரைவாகச் செல்ல வேண்டும் என எண்ணி, குறுக்கு வழியாகக் காட்டு வழி சென்றார்கள். காட்டின் இடையே ஒரு ஒற்றையடிப்பாதை சென்றது. அது மக்கள் நடந்து நடந்து ஏற்பட்டது. அதன் வழியாக அவர்கள் விரைவாக நடந்தார்கள்.

அவ்வாறு அவர்கள் விரைவாக நடக்கக் காரணம் கள்வர்கள் வந்து வழிப்பறி செய்வார்கள் என்றல்ல. காட்டில் வாழும் துர்மிருகங்களால் தங்கள் உயிருக்கு பாதகம் ஏற்படக்கூடாதே என்கிற பயம்தான்.

அக்காட்டில் கொடிய மிருகமான புலி எப்பொழுதாவது தான் தென்படும். ஆனால், கரடிகள் அதிகம். அதற்குக் காரணம் காட்டிலுள்ள ஒவ்வொரு மரத்திலும் தேன் கூடுகள் பல இருப்பதுதான்.

கரடிகளுக்குத் தேன் மிகவும் பிடிக்கும். மரத்தின் உச்சாணிக் கிளையில் தேன்கூடுகள் கட்டியிருந்தாலும் மரத்தில் 'சரசர' வென ஏறி தேனடையிலிருந்து தேனை உறிஞ்சிக் குடித்துவிடும். அதனால் கரடிகள் காட்டில் எப்பொழுதும் நடமாடிக்கொண்டே இருக்கும்.

ரகுவும், ரவியும் தேனின் இனிமையான வாசனை காற்றில் வந்து நாசியில் நுழைந்ததும், வெகு அருகில் ஒரு கரடி தேன் குடித்துக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்தார்கள். அதனால் தங்களுக்கு ஆபத்து விளையுமென்று எண்ணினார்கள். விரைந்து நடப்பதை விட வேகமாக ஓடி விடலாமென்று அவர்கள் எண்ணியபோது...

ஒரு கரடி அவர்களை நோக்கி வேகமாக வந்தது. அது தங்கள் மீது பாய்ந்து கடித்துக் குதறப் போகிறது என்பது அவர்களுக்குத் தெரிந்தது. வேகமாக ஓடினால்கூட அதனிடமிருந்து தப்ப முடியாது என்று தெரிந்தது.

ரவி அருகிலிருந்த ஒரு மரத்தின் மீது 'மடமட'வென ஏறி அதன் பெரிய கிளைமீது படுத்து பலமாகப் பிடித்துக்கொண்டான். ரகு தரையில் பட்டென்று விழுந்து, நீட்டி நிமிர்ந்து பிணம்போல அசைவற்று, மெலிதாக மூச்சு விட்டுக்கொண்டு இருந்தான்.

கரடி ஓடிவந்து உயிரற்ற பிணம்போல் அசைவற்றுக் கிடக்கும் ரகுவைச் சுற்றிச் சுற்றி வந்தது. மூச்சை அடக்கிக் கொண்டான் ரகு. அவனைச் சுற்றிச் சுற்றி வந்த கரடி முகர்ந்து முகர்ந்து பார்த்தது. காதருகே, கழுத்தருகே கை, காலை எல்லாம் முகர்ந்து பார்த்துவிட்டு அங்கிருந்து காட்டுக்குள் சென்று விட்டது.

கரடி போய் வெகு நேரங்கழித்து மரத்தின் மீதிருந்த ரவி மெதுவாக கீழே இறங்கி வந்தான். அசைவற்ற பிணம் போல் கிடக்கும் ரகுவைத் தொட்டு அசைத்து "ரகு, ரகு" என்று எழுப்பினான். ரகு கண் திறந்து பார்த்தான். கரடி போய் விட்டிருப்பதையும், தன் அருகில் ரவி இருப்பதையும் பார்த்தான். எழுந்து உட்கார்ந்தான்.

"ரகு கரடி உன் காதில் என்ன சொல்லிற்று?" என்று கேட்டான் ரவி.

"ஆபத்தில் தன்னை மட்டும் காப்பாற்றிக்கொள்பவன் நண்பனல்ல. தன்னை மட்டும் காப்பாற்றிக் கொள்பவன், உயிரைக்கூடக் கொடுப்பேன் என்று சொல்வது பொய் என்று கரடி சொல்லிற்று," என்றான் ரகு.

ரவி வெட்கித் தலை குனிந்தான். ●

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 09.04.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 35
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு-05.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 32

**பரிசுக்குரியவர்**

[illegible]

**பாராட்டுக்குரியவர்கள்**

செல்வி.வனிதா ராமலிங்கம்
இந்து தமிழ் மகாவித்தியாலயம், புத்தளம்.
துர்யோகராஜா-முகுந்தன் நகர், நுவரெலியா.

வைகுந்தன்
சிவாநந்த வித்தியாலயம், மட்டக்களப்பு.
எம்.மன்சூர்-பர்த் பிளேஸ், கொழும்பு-4.
எம்.இஸட். ஷாமில்
அரபியா வத்த வீதி, கண்டி.
எம்.சிறுசன்னாத் - முஸ்லிம் மகளிர் மகாவித்தியாலயம், மட்டக்களப்பு.
ஏ.கேதுரிர - சர்சம் நகர், குன்னீப்போத்தாணை.

## இதுதான் முதலில்



அமெரிக்க உள்நாட்டுப் போரின் பல நிகழ்ச்சிகளைப் புகைப்படம் எடுத்தார் மத்திவ் பிராடி என்ற புகைப்பட நிபுணர். உலகிலேயே முதன் முதலில் தொகுக்கப்பட்ட போர் புகைப்படம் அதுதான்.

## மன்னரின் ஆடை



மத்திய ஆபிரிக்காவின் மன்னர் பொகாசா 1977ம் ஆண்டு தனது முடிசூட்டும் விழாவின்போது, உலகிலேயே மிகவும் விலை உயர்ந்த ஆடையை அணிந்தார். அதில் பல மணிகளும், தங்கத் தகடுகளும் பதிக்கப்பட்டிருந்தன. அதன் பிறகு அவர் பதவியிலிருந்து துரத்தப்பட்டார். அவரது நாடு உலகிலேயே மிகவும் ஏழை நாடாக உள்ளது.

# குறும்பான குரங்காரும் குளிக்கும் தண்டனையும்!





படத்தில் குளித்துக்கொண்டிருப்பது ஒரு குரங்குக்குட்டி. இவர் முழித்து வந்து வெகு நாள் இந்தப் படம் எடுக்கப்பட்டது.

பெற்றுப்போட்டு தாய்க்குரங்கு இதனை கைவிட்டுச் சென்றுவிட்டது. பால் கொடுக்கவும் இல்லை. பரிவோடு அணைக்கவும் இல்லை.

ஜெர்மனியில் உள்ள ஃபிராங்போட்டிலுள்ள ஒரு பெண், கைவிடப்பட்ட குரங்காரை கண்டெடுத்து வாஞ்சையோடு வளர்த்தாள். 'போலோ' என்று பெயரும் சூட்டினாள்.

ஒரு நாள் சமையலறைப் பக்கம் போன குரங்கார் அங்கிருந்த வெண்ணெய் மற்றும் ஜாம் வைக்கப்பட்டிருந்த பாத்திரங்களுக்குள் விழுந்து புரண்டு வால்தனத்தைக் காட்டிவிட்டார்.

உடல் முழுவதும் சசசவென்று வெண்ணையும், ஜாமும். எஜமானி பார்த்துவிட்டு குரங்காரை குளியல் அறைக்கு கொண்டுபோய் சோப் போட்டு குளிக்க வைத்துவிட்டார். கையோடு ஒரு புகைப்படமும் எடுத்திருந்தமையால் நாமும் அந்த குளியல் காட்சியை கண்குளிர காண முடிகிறது.

ஹி..ஹி...ஹி...

## விடுகதைகளும் விடைகளும்

1. அடடா! என்ன வெளிச்சம். எண்ணெயில்லை. திரியும் இல்லை. ஏற்றி வைக்க ஆளும் இல்லை. அது என்ன?
2. வரும்போது வெள்ளை சிவப்பு. வளர வளரத் தகதகப்பு. போகும் போதும் பெருஞ் சிவப்பு. அது என்ன?
3. நினைக்கும் போதே வாய் இனிக்கும். நீரில் விட்டால்தான் மிதக்கும். வேண்டி வேண்டிச் சாப்பிடவே விருப்பம் தினமும் அதிகரிக்கும். அது என்ன?
4. இறைவன் செய்த ஒரு பெட்டி. என்றும் நிறைவாச் சிறு பெட்டி. எத்தனை எத்தனை போட்டாலும் என்றும் நிறையா ஒரு பெட்டி. அது என்ன?

விடைகள்

கந்தப்பெருமாள் நிமலதாசன்
ஆண்டு-10
மாங்காடு ச.வி.,
செட்டிபாளையம்.

# மருத்துவ + விந்தைகள்

## எடுத்ததுக்கெல்லாம் வைத்தியரிடம் ஓடுவதா? நோயின் அறிகுறிகளை நீங்களே கண்டறியலாம்

## அமெரிக்க மருத்துவர் சொல்லும் சுலப வழிகள்

உங்கள் உடம்பில் நோய்க்கான அறிகுறிகள் தென்படுகின்றனவா என்பதனை எந்த மருத்துவ பரிசோதனை களுக்கும் செல்லாமல் நீங்களாகவே கண்டறிய முடியும். இதற்கான சில எளிய முறைகளை அமெரிக்க குடும்ப மருத்துவர்கள் கழகத்தின் தலைவரான டாக்டர் ஜோன் கொல்லி தெரிவித்துள்ளார்.

ஒரு கண்ணாடிக்கு முன்பாக நின்ற வண்ணம் உங்கள் கண்களின் இமை உட்புறத்தைப் பிதுக்கிப் பாருங்கள். சாதாரணமாக ரோஸ் வர்ணத்தில் இருக்குமானால் உங்களுக்கு இரத்தச் சோகை இல்லை என்பதனை அறிந்து கொள்ளலாம். இரத்தச் சோகை பல வியாதிகளுக்கு ஆதாரமான முன் அறிகுறியாகும். இதனை வலுப்படுத்த உங்கள் உள்ளங்கையை நன்றாக விரித்து அகன்று உயர்ந்துள்ள பகுதியில் அடுத்த கை ஆட்காட்டி விரலால் அழுத்திய பின்னர் விரலை எடுத்து விடுங்கள். உடனடியாகவே முன்பிருந்த நிலைக்கு கை மீண்டும் திரும்பி அதே பழைய நிறம் ஏற்படுமானாலும் இரத்தச் சோகை இல்லை என்பது நிரூபணமாகிவிடும்.

தேகத்தின்-சருமத்தின் நிறமாற்றங்களைக் கொண்டு நோய்க்குறிகளைக் கண்டறிய முடியும். ஒருவகை வெளுப்புத் தன்மை காணப்படின் அல்லது உங்கள் இயற்கையான நிறம் மாறி மஞ்சள் தன்மை அதிகரித்தால் அது ஏதோவொரு நோய்க்கான அறிகுறி என்று கண்டுகொள்ளலாம்.

உங்கள் இருதயத்தின் தன்மையையும் நீங்களாகவே கண்டு கொள்ள முடியும். சில நிமிடங்கள் ஓடுவதன்மூலம் கொண்டே இருதய மற்றும் நுரையீரல் ஒழுங்குகளை உணர முடியும். 40 வயதுக்குக் குறைவானால் 15 நிமிட நேரம் ஓடிப்பாருங்கள். வயது 40 தாண்டிவிட்டால் 5 நிமிடங்களுக்கு மேல் ஓடலாகாது.

ஓடும்போது மார்பில் ஏங்காவது வலியோ அல்லது அசாதாரணமான தன்மையோ ஏற்பட்டால் அல்லது மூச்சுத் திணறல் கண்டால் உடனே மருத்துவரை அணுக வேண்டும்.

சாதாரணமாகவே ஓடுவோருக்கும் களைப்பு ஏற்படுவதுண்டு. இருதயக் கோளாறு அல்லது நுரையீரலில் சில சிக்கல்கள் இருந்தால் உண்டாகும் களைப்பு சாதாரண களைப்புப் போலன்றி மயக்கம் தரும் களைப்பாகவும் இருக்கக்கூடும்.

சாதாரணமாக மூச்சு விடுவது ஓட்டத்தினால்-வேகமாக இருக்கும். சில நிமிடங்களில் வழமையான மூச்சு விடும் தன்மை திரும்பாவிட்டால் ஏதாவது கோளாறு இருக்கிறது என்று அறிந்து மருத்துவரின் உதவியை நாட வேண்டும்.

உடம்பில் ஆங்காங்கே காணப்படும் மச்சங்கள்கூட நோய்க்கான முன் எச்சரிக்கைகளை விடக்கூடும். ஏற்கனவே இருந்த இடத்தை விட்டு மச்சங்கள் இடம் மாறினாலும் அவற்றின் வழமையான நிறமோ அளவோ மாறினாலும் ஏதோ ஒரு நோய் உடம்பைத் தாக்க ஆரம்பித்துள்ளது என்பதனை அறிந்து கொள்ள முடியும்.



அளவுக்கு மீறி ஒருநாளும் உண்ண வேண்டாம்

கண் பார்வையில் கோளாறு ஏற்படுமானால் சுலபமாகப் புரிந்துகொள்ளலாம். சுமார் 25 யார்களுக்கப்பாலுள்ள மோட்டார் வாகனத்தின் இலக்கத் தகட்டிலுள்ள இலக்கங்களை வாசிக்க முடியாதிருந்தால் கண் மருத்துவரை அணுக வேண்டும். இரவு நேரங்களில் தொலைவிலுள்ள தெருவிளக்கு முன்பு தெளிவாகத் தெரிந்திருக்கும். அதே விளக்கு தெளிவற்று கலங்கலாக-பல ஒளிக்கதிர்கள் சுடர் விடுவது போல் தென்பட்டாலும் கண் மருத்துவரை நாட வேண்டிய நிலையில் உள்ளீர்கள் என்பது தெளிவாகும்.

அண்டவாதம் அல்லது குடல் வாயு என்பதை 'ஹேர்னியா' என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். உதர விதானத்தினூடாக வயிறு அல்லது குடல் இறங்குவதனால் ஏற்படும் வியாதி இது. இந்நோய் கண்டால் மிகச் சாதாரண சத்திர சிகிச்சை மூலம் சீர்படுத்திவிடலாம். ஆனால் அண்டவாதம் தான் என்பதை எவ்வாறு கண்டுபிடிப்பது?

ஒவ்வொரு உணவின் பின்பும் ஏப்பம் தொடர்கிறதா? ஒன்று அல்லது இரண்டு தடவைகள் ஏப்பம் வருமானால் கவலை இல்லை. அதைவிட அதிக தடவைகள் ஏப்பம் தொடருமானால் மருத்துவரிடம் சென்றாக வேண்டும். அடி வயிற்றில் வலியும் இருக்குமானால் அது அண்டவாதம் தான் என்று நிச்சயித்துவிட முடியும். 'அல்சர்' என்றழைக்கப்படும் குடற் புண்ணுக்கும் இதே அறிகுறிகள் தான் காணப்படும்.

விரல் நகங்களில் வெடிப்பு அல்லது கீறல்புகள் காணப்பட்டால் உடலுக்கு அத்தியாவசியமான தாது/பொருட்கள் குறைந்து விட்டன என்று கருதலாம். நாம் பருகும் குடி *தண்ணீரில் காணப்படும் நச்சுத் தன்மை தாதுப்பொருட்களை உறிஞ்சி விடுவதனால் இது ஏற்படுகிறது. பூஞ்சணம் எனப்படும் நுண் கிருமித் தொற்றும் இதற்குக் காரணமாகலாம்.

இருதயத் துடிப்பில் ஏற்படும் மாற்றங்கள், உணவில் ஒத்துக்கொள்ளாத பதார்த்தங்கள் சேர்ந்து உட்சென்று விடுவதனாலும் ஏற்படலாம். இதனால் இரத்த ஓட்டம் பாதிப்படைகிறது.

கால் பாதங்கள் சோர்வடைதல், வீங்குதல், வலி எடுத்தல் போன்ற நிலை ஏற்பட்டால் தாமதியாமல் மருத்துவரை நாட வேண்டும். ஏதோ ஒரு நோய்க்கான அறிகுறிகள் அவை என்று கருதலாம்.

இத்தகைய கருத்துக்களை கலிபோர்னியா மாநில சாந்தா குரூசிலுள்ள புத்துயிர் நலவாழ்வு மையத்தின் முன்னாள் மருத்துவ இயக்குநர் ஆமோதித்துள்ளார்.

---

## கார் வேண்டுமா? காதல் வேண்டுமா?



### அமெரிக்காவில் ஒரு வித்தியாசமான ஆய்வு

### "காதலி இல்லாவிட்டால் கஷ்டம்தான். ஆனால் சமாளிக்கலாம். கார் இல்லாவிட்டால்.... ஓ... மை காட்..."

அமெரிக்க ஆண்களுக்கும் பெண்களுக்கும் கார்கள் மீது மகாப்பிரியம்.

அவர்களின் பிரியத்தை பார்த்துவிட்டு ஒரு உளவியல் ஆய்வு நிறுவனம் கணிப்பீடு ஒன்றை நடத்தியது.

அமெரிக்காவின் பிரதான நகர்களில் அந்த நிறுவனத்தின் ஆட்கள் ஆண்களையும் பெண்களையும் சந்தித்து வரைக்கை நொடுத்து தங்கள் கேள்விகளை எடுத்துப் போட்டார்கள்.

கேள்வி இதுதான்?

"உங்களுக்கு எது வேண்டும் காதலா? காரா?" உடனே சிலர் முகம் எல்லாம் பல்லாக இரண்டும்தான் என்றார்கள்.

உடனே அடுத்த கேள்வியை தூக்கிப் போட்டார்கள். "இன்னும் ஒரு மாதத்தில் உங்கள் வாழ்வில் இரண்டில் ஒரு முடிவுக்கு வர வேண்டியிருக்கும் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்போது நீங்கள் கைவிடப் போவது எதனை காரையா? காதலையா?

காதல் இல்லையேல் சாதல் என்று பதில் சொல்லியிருப்பார்கள் என்றுதானே நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை.

கருத்துச் சொன்னோரில் 77 வீதமானோர் சொன்ன பதில்: "எங்களுக்கு காரைவிட காதல் ஒன்றும் அத்தனை முக்கியமில்லை," என்பதுதான்.

அவ்வாறு பதில் சொன்னவர்களில் பெண்களும் உண்டு. காரிலிருக்கும் கார்மீதுதான் அதிக காதல்.

டல்லஸ் நகரில் ஒரு ரொட்டிக்கடை உரிமையாளர். அவருக்கு வயது 31.

"எனக்கு வயதாகிவிட்டது. அதனால் காதலியை விட கார்தான் உபயோகப்படும்," என்று பட்டென்று சொல்லிவிட்டார்.

கல்லூரி/பேராசிரியர் போல் சட்டகாளை என்பவர் சொல்வதைக் கேளுங்கள்!

"காதல் வாழ்வு கைவிட்டுப்போனால் தனிமையாகும். கவலையும் இருக்கும். என்றாலும் ஒருவிதமாக சமாளித்துக்கொள்ளலாம். ஆனால்... ஆனால்....ஆனால். ஒரு கார் இல்லாவிட்டால் ஒரு நாள்கூட என்னால் தாங்க முடியாதப்பா. என்கிறார். லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் அலுவலகம் ஒன்றில் செயலாளராக இருக்கும் 21 வயது பெண் சொல்வது சற்று வித்தியாச ரகம்.

"தேவையான அளவு செக்ஸ் அனுபவத்தை பெற்றுவிட்டேன். இப்போது போதுமென்றாகிவிட்டது. இப்போது என் கவனம் எல்லாம் காதலன் மீதல்ல, கார்மீதுதான்." என்கிறார் அந்தச் அலட்டிக் கொண்டவள்.

இவர்கள் அனைவரையும் ஓரம்கட்டிவிட்டார் ஒர்லாண்டோவில் அடிபிடிக்கும் கடை வைத்திருக்கும் டேவ் ஓட்டர்கள். அவர் சொன்ன கில்லாடித்தனமான பதில், "செக்ஸ் இல்லாவிட்டால் நான் செத்தாலும் செத்துவிடுவேன். அதனால் கார் உள்ள ஒரு காதலி கிடைத்தால் மாபெரும் மகிழ்ச்சி. வேன். சோ...காருள்ள காதலி என்றால் வசதி" என்று ஒரு போடு போட்டுவிட்டார் டேவ்.

---

## தினசரி உணவுக்கு சரியான பட்டியல்

## அளவோடு உண்டால் பொலிவோடு வாழலாம்

ஒருவருக்கு நாளொன்றுக்கு சராசரி 1500கலோரிகள் உணவு தேவைப்படும். கீழே தரப்பட்டுள்ள பட்டியலின் படி உணவினை உட்கொண்டு வருவீர்களேயானால் உடலின் தேவைகளை சீராகப் பூர்த்தி செய்து கொள்ளலாம். பெண்களுக்கான உணவு 1300 கலோரிகள் போதுமானது.

காலை உணவு:

தானிய உணவு அல்லது ஒரு முட்டை- 70 கலோரி
பாண் ஒரு துண்டு- 70 கலோரி
பாலுடன் தொடர்புடைய பதார்த்தம்-70 கலோரி
ஒரு பழம்- 50 கலோரி
மொத்தம் 260 கலோரிகள்.

இடை பகுதியல்:
வேக வைத்த காய்கறி அல்லது பாலுணவு அல்லது பழம்- 60 கலோரி

மதிய உணவு:
இறைச்சியும்-மீனும்- 160 கலோரி
பாண் துண்டு- 70 கலோரி
காய்கறி வகை- 50 கலோரி
ஐஸ்கிறீம் அல்லது சலட் அல்லது பழம்- 150 கலோரி
மொத்தம்- 430 கலோரி.

பிற்பகல்:
வேகவைத்த காய்கறி, பாலுணவு,
பழம் அல்லது தானிய உணவு- 60 கலோரி



இரவு உணவு:
இறைச்சி அல்லது மீன்- 160 கலோரி
பாண் துண்டு- 70 கலோரி
காய்கறி- 50 கலோரி
ஐஸ்கிறீம் அல்லது சாலட்- 150 கலோரி
மொத்தம் 430 கலோரி.

இடைப்பட்ட வேளையில் பழம் அல்லது பச்சைக் காய்கறி 60 கலோரி வரை உண்ணலாம்.

---

## குழந்தை பிறந்துகொண்டிருந்தது தாதிமார்கள் தப்பி ஓடிக் கொண்டிருந்தனர்!

### அமெரிக்க மாநிலத்தில் அதிர்ச்சியான நிகழ்ச்சி




### "கடவுளே! என்னைக் காப்பாற்றுங்கள்... என்னை இந்த நேரத்தில் கைவிட்டு விட்டு ஓடாதீர்கள்...!"

அவளுடைய நாலைக் கேட்பதற்கு அங்கு யாருமே இருக்கவில்லை. தங்கள் தங்கள் உயிரைக் காப்பாற்று வதற்காக ஒவ்வொருவரும் அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலம். லொஸ் ஏஞ்சல்ஸ் நகரின் அண்மையிலுள்ள அனஹெய்ம் பொது மருத்துவமனை. கடந்த ஜனவரி 17ம் திகதி அதிகாலை. குழந்தைப் பேறுக்காக அங்குள்ள ஒரு பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த வெனிசா மயேர் என்ற பெண் தொடர்ந்து 8 மணிநேரமாகப் பிரசவ வேதனைப் பட்டுக்கொண்டிருந்தாள். தாதியரும் பல உதவிகளை வழங்கிக்கொண்டிருந்தனர். சாதாரண பிரசவம் என்பதனால் மருத்துவரும் இருக்கவில்லை. ஆனால் பிரசவ வேதனை சில மணிநேரமாக நீடித்ததனால் மருத்துவருக்கு அறிவிக்கப்பட்டு, அவரும் வந்துகொண்டிருந்தார்.

அதிகாலை 4.10 ஆகியது. குழந்தையின் சிரசு தெரியலாயிற்று. அதே தருணத்தில் பல மாடிகளைக் கொண்ட அந்த மருத்துவமனை திடீரென ஆடத் தொடங்கியது. மின்சார விளக்குகள் அனைத்தும் அணைந்தன. அறையில் இருந்த தாதிமாரும் ஏனைய உதவியாளர்களும் எங்கோ ஓடத்தொடங்கினார்கள்.

மெலிக்காவின் கணவன் டிம் ஜெக்சன் அந்த அறையின் வெளியே நின்று கொண்டிருந்தார். பூமி அதிர்ச்சி அவரையும் அதிர்ச்சியடைய வைத்தபோதிலும், தனது மனைவியின் அலறலைக் கேட்டு நொடிப் பொழுதில் அறையினுள் பாய்ந்தார்.

வெளிச்சமில்லாதிருந்தபோதும் மெலிக்காவின் அலறல் கேட்டு அவளிருக்கும் இடம் தெரிந்து ஓடிப்போய் அவள்மீது படுத்து படாமலும் எதிர்பார்த்துக்கொண்டார். மெலிக்காவின் கால்களை ஒரு கையால் பற்றியவாறு அடுத்த கையால் வெளிவந்துகொண்டிருக்கும் குழந்தையைத் தாங்கிக் கொண்டார். பூமி அதிர்ச்சி ஒரு சில நிமிடங்களே நீடித்தது. கட்டிடம் இதோ விழுந்து சரிந்து விடுமோ என்ற நிலையில் ஆடியது. ஆனால் விழவில்லை. அதிர்ச்சி நின்றதும் கை விளக்குகளுடன் தாதிமாரும் மருத்துவரும் வந்து சேர்ந்தனர். மருத்துவர் மருத்துவமனையின் சில பகுதிகளைத் தாண்டி வரும்போதே அதிர்ச்சி ஏற்பட்டு மின் விளக்குகளும் அணைந்ததனால் தடுமாறித்திருக்கிறார்.

மிக முக்கியமான வேளையில் தன்னை நிர்க்கதியாக விட்டுவிட்டுப் போனமைக்காக தாதிமாரை மெலிக்கா தாறுமாறாகத் திட்டினாராம்.

அந்த மருத்துவமனையில் நடைமுறைச் சட்டப்படியே அவர்கள் நடந்துள்ளனர் என்று மருத்துவமனையின் பிரதான அதிகாரி பிறேம் கெல்கேர்வி கூறினார்.

"பூமி அதிர்ச்சி போன்ற சம்பவங்கள் ஏற்படும்போது மருத்துவப் பணியாளர்கள் அனைவரும் கட்டிடத்தின் முன் வாயிலுக்கே போய்ச் சேர்ந்துவிட வேண்டும். அவர்கள் தங்கள் உயிர்களைக் காப்பாற்றினால்தான் விபத்துக்குள்ளானவர்களைக் காப்பாற்ற முடியும்." இதுதான் அந்த மருத்துவமனையின் பொது விதி.

---


## கையருகில் வைத்தியம்

### கத்தரிக்காய்

உடலுக்கு வெப்பத்தை ஊட்டக்கூடியது. வாயுவை அதிகரிக்கும். குழந்தை பெற்ற பெண்ணுக்கு பூண்டு போட்டு பொரித்துக் கொடுக்கலாம். நோயாளிகள் இதைச் சாப்பிடாமல் தவிர்க்க வேண்டும். தோல் வியாதிகள் உள்ளவர்கள் அறவே தவிர்ப்பது நல்லது.

### சிரிப்பு

ஆச்சரியமாக இருக்கிறதா? சிரிப்பும் ஒரு மருந்துதான். சிரிப்பதால் ஏற்படும் சமாச்சாரங்கள் பல. மனக்கவலை போகும். உயர் இரத்த அழுத்தத்தை குறைக்கும். நிரண சக்தியை அதிகப்படுத்தும். ஹென்றி ரூபின்ஸ்டைன் என்ற நரம்பியல் மருத்துவர் அதனை உறுதிப்படுத்தியுள்ளார். அதற்காக நேரம் காலம் தெரியாமல் சிரித்துவிடாதீர்கள்.



**எழுதுவது ரசிகன்**

# கொலை விழும் நேரம்



# 8

**கொலை விழும் நேரம் கொலை விழும் நேரம் கொலை விழும் நேரம் கொலை விழும் நேரம் கொலை விழும் நேரம் கொலை விழும் நேரம் கொலை விழும் நேரம்**
**கொலை விழும் நேரம் கொலை விழும் நேரம் கொலை விழும் நேரம் கொலை விழும் நேரம் கொலை விழும் நேரம் கொலை விழும் நேரம் கொலை விழும் நேரம்**

முன்னால் சென்று கொண்டிருந்தவன் முதுகில் ஏதோ ஊர்வது போல உணர்ந்தான்.

'யாரோ கவனிக்கிறார்கள்.' உடம்பின் சகல பாகங்களும் உஷார் பெற்றுக்கொள்ள ஒவ்வொரு அடியாய் எண்ணி வைப்பது போல் ஸ்போட்ஸ் சப்பாத்துக்குள் கொடுத்திருந்த பாதங்களை நிதானமாய் எடுத்து வைத்து நடந்தான்.

'யாரோ தொடர்கிறார்கள். நீ தொடரப்படுகிறாய். தொடப்படும் தூரத்தில் தொடரப்படுகிறாய்.' மூளையில் அலாரம் அடித்தது. செவிகளை கூர்மைப் படுத்தியபடி நடந்து, சட்டென்று நின்று பின்னால் கழுத்து திருப்பினான். விழிகளை கூர்மையாக்கி இருட்டை அலசினான்.

அவன் திரும்பிப் பார்ப்பது புரிந்து பின்னால் தொடர்ந்த உருவம் ஆடாமல் அசையாமல் சிலைபோல் நின்றது.

கறுத்த ஜீன்சும், அதே நிறத்தில் மழைக்கோட்டும் அணிந்திருந்தது. இருளில் கலக்க கறுத்த நிறம் வசதியாக இருந்தது.

ஆயினும், அந்த உருவம் உஷார் அடைவதற்குள் ஏற்பட்ட அசைவை அவன் விழிகள் வாங்கிக்கொண்டன.

தான் தொடரப்படுவது தென் மாகாண சபையில் ஆளும் கட்சியின் தோல்விபோல உறுதியானது என்று புரிந்துகொண்டான்.

'என்ன செய்யலாம்? என்ன செய்யலாம்?' மூளைக்கு கேள்வி அனுப்பி விசாரித்தான்.

'உடனே எதிர்க்காதே. தொடர்பவன் பலம் என்ன? தெரியாதல்லவா? ஆகையால் அவசரப்படாதே.' மூளை புத்தி சொன்னது.

பின்புறத்தில் தான் தொடரப்படுவதை அறியாதவன் போல் மீண்டும் முன்னோக்கி அடி எடுத்து வைத்தான்.

நெஞ்சு திக், திக் என்று அடித்துக்கொண்டது. முதுகுப் பைக்குள் கை செலுத்தி துழாவினான். தட்டுப்பட்டது. தயாராக இருந்தது. 9.M.M பிஸ்டல்., நடந்தபடியே எச்சரிக்கையாக மெல்ல மெல்ல கை அசைவு தெரியாமல் அதை வெளியே எடுத்தான்.

'இப்போது செயற்பட வேண்டும். தாமதம் ஆபத்து.'

சடுதியாய் பின்னோக்கித் திரும்பி பிஸ்டல் உயர்த்தி குறிபார்த்து, விழிகளை கூர்மைப்படுத்தியவன் அதிர்ந்து போனான்.

தொடர்ந்து வந்த உருவம் காணாமல் போயிருந்தது.

மீண்டும் விழிகளை கூர்மைப்படுத்தி இருள் கிழித்து வைடுருவிப் பார்த்தான்.

'நிச்சயமாய் கிடையாது. ஒரு வேளை பிரமையோ. நான்தான் வீணாகப் பயந்து, விபரமாக கற்பனை செய்து...'

அவன் நினைத்துக்கொண்டிருக்க முதுகிலே ஏதோ உறுத்தியது.

தீயை மிதித்தது போல திடுக்கிடலோடு திரும்ப முயன்றான்.

"வேண்டாம் நண்பனே. திரும்ப முயலாதே. முயன்றால் உன் முதுகில் சலக்குறி தோண்டிவிடும் என் துப்பாக்கி."

காதோரத்தில் மிக தாழ்ந்த தொனியில் இரகசியம் பேசுவது போல் கேட்டது குரல்.

'வசமாய் மாட்டிக்கொண்டேன். சரியான பொறி.' அசையாமல் நின்றான்.

"உன் பிரியமான பிஸ்டலை தருகிறாயா நண்பனே?"

தயங்கினான். கேட்காதது போல் நின்றான்.

"அட...தயங்குகிறாய் பார். உன் உயிரைவிட பிஸ்டல் ஒன்றும் பெரிதில்லை நண்பா."

சொல்லிக்கொண்டே அவன் எதிர்பாராத தாக்குதலாய், முன்னோக்கி நகர்ந்து, கால் பாதத்தை ஒரு கத்திபோல் பாவித்து, பிஸ்டலை தாங்கியிருந்த கரத்தின் மணிக்கட்டில் குறிதவறாமல் உதைக்க, பிஸ்டல் அவன் கரம்விட்டு கீழே நழுவியது. அப்படியே குனிந்து பிஸ்டலை தன் கரத்தில் ஏந்திக்கொண்டது அந்த உருவம்.

அதிர்ச்சியில் இருந்து மீண்டு அவன் சுதாரிப்பதற்கிடையில்,

நாய் ஒன்று உரத்து குரைத்தபடி ஓடி வந்துக்கொண்டிருந்தது.

நாய் குரைத்த சத்தத்தில் இருந்து விபரீதமாய் உணர்ந்ரா, வீட்டின் முன்புறம் காவலுக்கு நின்ற பொலிஸ் பின்புறமாய் ஓடிவரும் பூட்ஸ் சத்தம் தெளிவாய் கேட்டது.

இரு கரங்களிலும் பிஸ்டல்கள் இருக்க, இரண்டையும் தன் மழைக்கோட்டின் இரு புறத்திலும் இருந்த பெரிய பொக்கற்றுக்கு கொடுத்துவிட்டு, அவனை மடக்கிப் பிடிக்க கரங்களை விரித்து முன்னேறியது அந்த உருவம்.

அவன் தன் முகத்தின் கீழ்புறத்தை கறுத்த துணி ஒன்றால் மறைத்துக் கட்டியிருந்தான். இரு புறமும் அபாயம் நெருங்கிவருவது புரிந்து தன் பலம் அனைத்தையும் ஒன்று திரட்டினான்.

தன்னை நெருங்கிய உருவத்தின் மார்பை குறிவைத்து கால்களை உயர்த்தியபடி தரையில் இருந்து ஐந்தடி உயரத்திற்கு அந்தரத்தில் மிதந்தபடி வலது காலை நீட்டி உதைத்தான்.

அதி வேகமான தாக்குதல் உத்தியை உடனே தடுக்க முடியவில்லை. மார்பில் உதைபட்டு பின்புறமாய் தடாலென்று தரையில் விழுந்தது அந்த உருவம்.

வீட்டின் பின்புறமாய் ஒரு மேர்க்குரி பல்ப் இருந்தது. ஆரவாரம் கேட்டு ஒரு காவலர் ஓடிச்சென்று வீட்டின் முன்ஹோலில் கிடந்த சுவிட்ச் அழுத்த, மேர்க்குரி பளிச்சென்று சிரித்து இருளை கழுவியது.

அவன் இப்போது தான் உள்ளே வந்த பின்புற மதில் வழியாய் ஏறி வெளியே பாய்ந்தது துல்லியமாய் தெரிந்தது. ஓடிவந்த பொலிஸ் அவன் முதுகுப் புறத்தை நோக்கி ரைபிள் உயர்த்தி சுடலாமா கூடாதா என்று யோசிப்பதற்கு இடையே அவன் தெருவில் குதித்தான்.

தரையில் இருந்து எழுந்த உருவத்தை பார்த்து, வியப்பான பொலிஸ் விறைப்பான சல்யூட் வழங்க, பின்புற மதிலை நோக்கி ஓடி, தொற்றிக்கொண்டு ஏறி, தெருவை எட்டிப்பார்க்க, தெருவின் திருப்பத்தில் ஒரு கார் வேகமாய் திரும்பி மறைவது தெரிந்தது.

மீண்டும் உள்ளே இறங்கி,

"பின்புற லைட்டை போட்டு வைக்காமல் முன்னால் இருந்து கச்சேரி நடத்துகிறீர்களாக்கும். கொலைகாரன் உங்களிடம் வந்து தட்டிச் சொல்லிவிட்டுத்தான் உள்ளே வருவானாக்கும்?"

எரிச்சலாய் கேட்டவர் இன்ஸ்பெக்டர் மோகன்.

லீலா வீட்டின் மீது கண்காணிப்பு போடும்படி டி.ஐ.ஜி. டென்சில் உத்தரவிட, உரிய வேகத்தில் அதற்கு ஏற்பாடு செய்யாமல் போக, லீலா கொலையாகிப் போக, கோபமான டி.ஐ.ஜி. பிரசாத் வீட்டை இரகசியமாய் கண்காணிக்கும் பொறுப்பை இன்ஸ்பெக்டர் மோகனிடமே தள்ளிவிட்டார்.

கொலைகாரனை தப்ப விட்டதற்கு டி.ஐ.ஜி.யிடம் எப்படித் தப்புவது என்று யோசித்துக்கொண்டு, காவலுக்கு நின்ற பொலிசிடம் எரிச்சல் பட்டுக்கொண்டு இன்ஸ்பெக்டர் மோகன் பரபரப்பாய் அலைய,

"சேர் உங்களுக்கு ஃபோன்." என்று கொன்ஸ்டபிள் வந்து சொல்ல,

டி.ஐ.ஜி.யாகத்தான் இருக்க வேண்டும். அதற்குள் எப்படி அவருக்கு விசயம் தெரிந்து...

> என்றென்றும் சொந்தமில்லையோ
> என் நெஞ்சம் உன்னதில்லையோ
> ஒன்றென்று வந்ததல்லவோ
> இன்னொன்று இங்கு வருமோ!
> உடலில் நீயும் உயிரில் நானும்
> படரும் கொடியல்லவோ!.....!!
>
> -கவியரசு கண்ணதாசன்-



விரைந்து ஓடி ரிசீவர் தூக்கி,

"ஹலோ...."

"என்னப்பா இன்ஸ்பெக்டர்! உங்கள் டி.ஐ.ஜி. எட்டடி பாய்ந்தால் நாங்கள் சரியாக எண்ணிப்பார்த்து எண்பது அடி பாய்ந்து விடுவோம்."

மறுமுனையில் பரிச்சயமில்லாத குரல். ஆண் குரல். அலட்சியம் தொனித்த குரல்.

"யார் நீ?"

"அட... இதுதான் இதே தான். உடனடியாக கேள்வி. யார் நீ எங்கே இருந்து பேசுகிறாய்? நீங்கள் கேட்டால் நாங்கள் உடனே பட்டு பட்டென்று பதில் சொல்லிவிடுவோமாக்கும்?"

சிரித்தான்.

"நான் இப்போது பொலிஸ் லாக்கப்பில் இருந்து பேசவில்லை? ஃபோன் பக்கத்தில் இருந்து பேசுகிறேன். அதனால் உங்கள் கேள்விக்கெல்லாம் டாண்டாவென்று பதில் சொல்லமாட்டேன் மை டியர் இன்ஸ்பெக்டர்."

"பொலிசோடு விளையாடாதே!"

"அட...சுமமா துள்ளாதே ராஜா. இப்போது தாங்கள் ஒரு உதவி செய்ய முடியுமா?"

அவனை நார்நாராய் கிழித்துவிடும் கோபம் துள்ளியெழ, எரிச்சலாய் கேட்டார்,

"என்ன உதவி?"

"காதில் உள்ள ரிசீவரை பத்திரமாய் வைத்துவிட்டு, பூட்ஸ் கால்களால் நடந்து போய் நிரோசாக் கண்ணு நலமா என்று விசாரித்துப் பார்க்க வேண்டும் இன்ஸ்பெக்டர். நிரோசா உடனே என்ன சொல்லுவாள் தெரியுமோ?"

கேட்டு நிறுத்தி, எக்காளமாய் சிரித்துவிட்டு,

"எதுவுமே சொல்லமாட்டாள். ஏன் தெரியுமோ? அட.... செத்துப்போனவள் பேச முடியுமா இன்ஸ்பெக்டர்..? சோ...குட் நைட்."

தொடர்பு துண்டித்தான். என்ன சொல்கிறான் இவன்? மோகன் யோசித்தபடி. உடம்பெங்கும் பதட்டம் வியாபிக்க, ரிசீவர் வைத்து, நிரோசா அறை நோக்கி ஓடிப்போய், கதவு தள்ளி, உள்ளே எட்டிப்பார்க்க,

நெஞ்சின் மையத்தில் கசிந்திருந்த இரத்தத்தோடு, கட்டிலில் மல்லார்ந்தபடி, விழிகள் வெறித்தபடி, வாய் பிளந்தபடி செத்துப் போயிருந்தாள் நிரோசா.

பின்புறமாய் போக்கு காட்டிவிட்டு உள்ளே புகுந்து கத்தி செருகி விட்டான்.

அருகில் போய் மூக்கருகே விரல்வைத்துப் பார்த்து நிரோசா நிச்சயமாய் மூச்சை நிறுத்திக்கொண்டதை உறுதிப்படுத்தியபோது கண்ணில் பட்டது அது.

நிரோசாவின் இடது தோள் புறத்தில் கட்டில் மீது கிடந்த சிவப்பு ரோஜா.

அந்த ரோஜாவின் கீழே ஒரு துண்டுக் காகிதம் படபடக்க, கை நீட்டி எடுத்து விழிகள் செலுத்தினார்.

சிவப்பு மையினால் அழகான கையெழுத்தில் எழுதப்பட்டிருந்த வாசகம் தெளிவாய் சொன்னது செய்தி.

"அடுத்த கொலை விழும் நேரம் நாளை இரவு 7.30. முடிந்தால் தடுக்கவும். ஆனால் முடியாது."

அந்த துண்டைப் பத்திரப்படுத்தி பொக்கற்றுக்குள் வைத்தபடி, தொலைபேசியை நோக்கி ஓடினார் இன்ஸ்பெக்டர் மோகன்.

□□

"சாரங்கன் படிந்து வருகிறானா சித்ரா?"

சித்ராவின் வீட்டில் அவளது தனி அறையில், நீளமான சோபாவில் அவள் மடி மீது தலைவைத்துக்கொண்டு கேட்டவன் மனோகர்.

அவன் நெற்றியில் வந்து விழுந்த முடியை தன் கரத்தால் சரிசெய்துவிட்டபடி,

"படியாமல்?"என்றாள் சித்ரா.

"அதுதானே பார்த்தேன். ஹரிகரனையே ஒரு கலக்குக் கலக்கிய உனக்கு, சாரங்கன் ஒரு கொசு."

அவன் சொல்ல சித்ரா கண்சிமிட்டிக் காட்டினாள்.

மடியில் சாய்ந்திருந்த மனோகரின் முகத்தை தொட்டுவிடும் தூரத்தில் இருந்து முறைப்பதாய் தெரிந்தன சித்ராவின் இளமைகள்.

சித்ரா நைற்றி அணிந்திருந்தாள். அறைக்குள் மங்கலான வெளிச்சத்திலும் வனப்புகள் தெளிவாய் வெளிப்பட்டுக் கொண்டிருந்தன.

மனோகர் நைற்றியின் முடிச்சில் கைவைத்தான். சிரமமே இல்லாமல் விட்டுக்கொடுக்க, நைற்றியின் தடை விலக, மனோகரை அவசரப்படுத்தியது சித்ராவின் இளமையான உடல்.

மெல்ல முகம் உயர்த்தினான். சித்ரா அவன் முகத்தை தன் இரு கைகளாலும் ஏந்தி குனிந்து அவன் உதடுகளை சரப்படுத்தினாள்.

வெளியே மனோகரின் ஃபியட் கார் நின்றுகொண்டிருந்தது.

காருக்கு அருகே வந்து நம்பர் பிளேட்டில் இலக்கம் பார்த்து 'இது மனோகரின் கார்தான். ஆகவே ஆள் உள்ளே இருக்கிறான்' என்று அவன் மனதில் உறுதி செய்து கொண்டான்.

முதுகுப்பையை தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

சித்ரா இப்போது அறையின் உள்ளே மனோகரனை தன் மேல் சுமந்து கொண்டிருந்தாள்.

சித்ராவின் வயதான அம்மா தன் உறவினர் வீட்டுக்குப் போயிருந்தாள். அதனால் இடையூறு எதுவும் இல்லாமல் மனோகரின் வேகத்திற்கும் ஆர்வத்திற்கும் சித்ரா அனுமதி கொடுத்துக் கொண்டிருந்தாள்.

அவன் சித்ராவின் வீட்டு கதவின் மீது கைவைத்து தள்ளிப் பார்த்தான். கடைசியாய் வீட்டின் உள்ளே போன மனோகர் கதவை தாழ் போட மறந்துவிடும் அவசரத்தில் இருந்தான். அவனுக்கு மனோகரின் அவசரம் கைகொடுத்தது.

மெல்ல கதவு திறந்து உள்ளே கால் எடுத்து வைத்தான். முதுகுப் பையில் கைவிட்டு கத்தியை எடுத்து தயாராக வைத்தபடி சுற்றிலும் விழிகள் செலுத்தி ஆராய்ந்தான்.

முன்ஹோலில் ஒரு சிறிய பல்ப் மட்டும் எரிந்துகொண்டிருந்தது. மிகக் குறைந்த சக்தியுள்ள பல்ப்.

சித்ராவும் மனோகரும் இருந்த அறை முன்ஹோலின் வலது புற கோடியில் இருந்தது. கதவு சற்று விரிந்திருக்க உள்ளே எரிந்த மங்கலான வெளிச்சமும், சித்ராவின் சிணுங்கலும் வெளியே வந்துகொண்டிருந்தன.

இரை எங்கே இருக்கிறது என்று அவனுக்குப் புரிந்து போனது.

பற்களால் கீழ் உதட்டை கடித்துக் கொண்டான். இடது கரம் உயர்த்தி தலையில் இருந்த தொப்பியை சரிசெய்து கொண்டு, அறையை நோக்கி காலடி எடுத்து வைத்தான்.

□□

நிரோசா கொல்லப்பட்டது பொலிசுக்கு பெரிய சவாலாகிப் போனது.

பத்திரிகைகள் போட்டி போட்டுக் கொண்டு பொலிஸ் மீது பாய்ந்திருந்தன.

"தூங்குகிறது பொலிஸ் தொடர்கிறது கொலை வேட்டை" என்று 'ஜன முழக்கம்' பத்திரிகை தலைப்பிட்டிருந்தது. செய்தியை எழுதியது பிரியா பகபதி என்றிருந்தது.

டி.ஐ.ஜி. டென்சிலுக்கு கோடை கால வெயிலின் வெப்பம் போல் கோபம் ஏறிக்கொண்டிருந்தது.

அருகில் இருந்த கோட்லெஸ் ஃபோனை கையில் எடுத்து இலக்கங்கள் அழுத்தி காத்திருக்க மறுமுனையில் ரிசீவர் தூக்கி "யார் வேண்டும்?"

என்று கேட்டது பெண்குரல்.

பெண்குரல் கேட்டதில் வியப்பாகி,

"குலாம்ஷா இல்லையா? அவர்தான் வேண்டும்."

என்றார் டி.ஐ.ஜி. டென்சில்.

"குலாம்ஷா வெளியில் போயிருக்கிறார். யார் நீங்கள்? நான் நினைப்பது சரியானால் நீங்கள் டி.ஐ.ஜி. டென்சில் ஆம் ஐ கரெக்ட்?"

என்றது பெண்குரல்.

மேலும் வியந்து,


"நீங்கள்...?"

என்று கேட்க,

"நான் பிரியா. பிரியா பகபதி."

என்றது பெண்குரல்.

## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: இராமன் இராமதாஸ்
வயது: 23
முகவரி: இராமஜுர், கண்டி வீதி, புளியங்குளம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், பாடல்கள் கேட்டல், கவிதை எழுதுதல், சினிமா பார்த்தல்.



பெயர்: எஸ். சந்திரசேகரன்
வயது: 26
முகவரி: வுட்லண்ட்ஸ், பதுளை வீதி, ஹப்புத்தளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப் புத்தகம் வாசித்தல், வானொலி கேட்டல், தொலைக்காட்சி பார்த்தல்.



பெயர்: எம்.எச்.எம். ரபீக் கான்
வயது: 30
முகவரி: 121, பிரதான வீதி, தர்ஹா நகர்.
பொழுதுபோக்கு: பரத நாட்டியம், சதுரங்கம், கச்சேரி, மேடை நாடகம், கோல்ஃப், டெனிஸ்.



பெயர்: எஃப். சுஹாரா
முகவரி: இல. 596, கண்டி வீதி, தெலியாகொன்னை, குருனாகலை.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், நண்பர் தொடர்பு.

பெயர்: சிவபாலன் குணபாலன்
வயது: 18
முகவரி: 7ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு
பொழுதுபோக்கு: கவிதை எழுதுதல், பத்திரிகை, புத்தகம் வாசித்தல், வானொலி கேட்டல்.

பெயர்: செல்வி. சண்முகநாதன் ரேவதி பாரதி
வயது: 23
முகவரி: நாரங்கடுவ, தலாத்துஓயா.
பொழுதுபோக்கு: பத்திரிகை, நாவல்கள் படித்தல், பேனா நண்பர் தொடர்பு, வானொலி கேட்டல்.

பெயர்: இஸ்மத் சாலிம்
முகவரி: த.பெ.இல. 9340
கோட் இல. 63004
அல்-அகமதி,
குவைத்.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், ரீவி. பார்த்தல்.

பெயர்: பாத்திமா நஜூபா
வயது: 18
முகவரி: இல. 191/6,
ஹெட்டியாவத்த,
மல்லவாபிட்டிய,
குருநாகல்.
பொழுதுபோக்கு: செடிகள் வளர்த்தல், கதைப்புத்தகம் படித்தல், சமைத்தல்.

# இது தேவையா....? அடப் போங்கய்யா....

விசயம் தெரிந்த மாணவிகள் என்னைப் பார்த்துச் 'சந்தேகத்தோடு' சிரித்துவிட்டுப் போனார்கள்.....

## ஜொள்ளுக் கதை



"ஒன்னோட ஒடம்பில கால் எங்க இருக்கு, கை எங்க இருக்குன்னே தெரியல்லியே... டேய் தயவு செய்து கால் எங்க இருக்குன்னு காட்டுடா நான் விழுந்து கும்பிடணும்."

"என்னது எங்கால்ல நீ விழுந்து கும்பிடப் போறியா? எதுக்குடா?"

"ஐயோ! ஒனக்குப் புரியுதில்லையே..டேய், டேய், நீதான்டா எங்காதலுக்கு தூது போகணும்."

"என்னது மாமா வேலையோ? என்னால முடியாதுப்பா."

"டேய், ஒன்னா குடிச்சு, ஒன்னா சாப்பிட்டு, ஒன்னா படிச்சு, ஒன்னா பெகிலாகி, நட்பின் இலக்கணமா இருக்கிற இந்த நண்பனுக்கு, இந்த உதவியைக்கூட செய்ய முடியாட்டி... யாரைத்தான் நம்புவதோ பேதை நெஞ்சம் எல்லாமே பூமியிலே நிறையும் வஞ்சம்."

"சரி,சரி தப்புதப்பா பாடித் தொலைக்காத நான்..."

"தூது போறியா?"

"அவசரப்படாதடா ஒன்னோட ஃபிகர் படிக்கிற வேமன் காலேஜ்ல எனக்குத் தெரிஞ்ச நெறையப்பேர் படிக்கிறாங்க. அதோட அங்க இருக்கிற டீச்சர்மாரைக்கூட எனக்கு நல்லாத் தெரியும்டா. நெலமை இப்பிடி இருக்கிறப்போ நான் எப்பிடிடா காலேஜ் வாசல்ல நின்னு, ஒன்னோட ஃபிகரைச் சந்திச்சு விசயத்தைச் சொல்லுறது.... மத்தது... என்னோட மாமியும் அங்க டீச்சர்டா!"

"நண்பா! நீ மட்டும் தூது போகா விட்டால், என் சுகபோக வாழ்க்கையை விடுத்து துறவறம் பூண்டுவிடுவேன். எனக்கு அவளின்றி சொத்தும் தேவையில்லை, சுகமும் தேவையில்லை."

"ஆமா! இவரு பெரிய ராஜராஜசோழன். சொத்து சுகமெல்லாம் விட்டுட்டு, காசிக்குப் போகப்போறாரு...சும்மா போடா."

"ஆ...மீசை குளிர்கிறது. மேனி நடுங்குகிறது உடலுக்கேன் வருகிறது மரிச்சல்? என்னோடு காலேஜுக்கு வந்தாயா? ஜொள்ளுவடித்தாயா? அங்கு, துள்ளி விளையாடும் நம்மூர் ஃபிகர்களுக்கு கடலை மிட்டாய் வாங்கிக் கொடுத்தாயா? அல்லது நீ என் அங்கிளா? ஆன்டியா? மாமன் கெட்டவனே...இனிமே நீ யாரோ, நான் யாரோ," உண்மையிலேயே சற்றுக் கோபத்தோடு வெளியேறும் அவனை ஓடிப்போய் நிறுத்தி... "ம்.. என்ன பண்ணுறது போய்த் தொலைக்கிறேன்." சொன்னதும் அவனுக்கு ஏகப்பட்ட சந்தோஷம்.

"போட்டு வைத்த காதல் திட்டம்
 - ஓகே.கண்மணி
காதலி ஐ லவ் யூ என்றால் இங்க வந்து
 சொல்லு நீ
இதுதான் காலேஜ் எக்ஸ்பிரஸ் ஒன்லி
 -பலபேர் செல்லும் பஸ்பல
வேலன் வேலை சக்சஸ், இனி முத்தம்
 -வேலை கிஸ் கிஸ்."

"ஐயோ! தயவு செய்து பாடுறத நிறுத்துடா. இளையராஜா ஒரு மாதிரியான ஆள். ஒம்மேல கேஸ் போட்டாலும் போட்டுடுவார்."

"நண்பா கதையை விடுத்து என் கண்மணியைக் காண உடனே புறப்படு. அவளோடு பேசத்துடிக்கிறேன் என்பதை எடுத்துச் சொல். என் விரக தாபத்தை எடுத்துக் கூறு. அன்றொருநாள் நந்தவனத் தினிலே அவள் என்னை தனியாகச் சந்தித்து சிரித்தாள், சிவந்த ரோஜாப்பூக்கள் முகம் சுருத்துப் போயின. எனக்கு நிலவை மிக அருகில் பார்த்த திருப்தி...அவளின் மேனியிலே எனக்கு ரொம்பப் பிடித்தவை அந்த சிவந்த, அழகான, மென்மையான இதழ்கள்... அந்த இலக்கிய இதழ்களில் என் இதழ் பொருத்தி மாதக் கணக்காக அப்படியே கண்மூடி இருக்கவேண்டும் என்பது என் நீண்ட நாள் ஆசை.

"அவள் கண்கள் எனக்குக் 'கதை' சொல்லின. அவளால் என்னை என்றைக் குமே மறக்க முடியாதென்பது எனக்குத் தெரியும். ஆசையால் ஆசைகளை மனதிற்குள் பூட்டிவைத்து மௌனமாய் அழுவதில் பயனில்லை என்பதை சொல், அதோடு ஆற்றங்கரைக்குப் போனால்..."

"குதிச்சு தற்கொலை செஞ்சிக்கச் சொல்லவா?"

"ஏன் நண்பா ஆத்திரப்படுகிறாய்? என் காதலின் வேகத்தை புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறாயே?"

"ஆமா! ஒங்க காதல் போயிங் 707 விமானம். ரொம்ப வேகமா போவுது டேய்."

மொதல்ல வொன்னு தமிழை விட்டுட்டு நல்ல தமிழ்ல பேசடா..."

"சரி...நீ சீக்கிரம் போடா."

□□□

வேமன் காலேஜ் முடிந்து கூட்டம் கூட்டமாக மாணவிகள் வந்துகொண்டிருந்தார்கள். இந்தக் கூட்டத்தில் "தலைவியை" எங்கே கண்டுபிடிப்பது? இதற்கிடையில் பல தெரிந்த மாணவிகள் என்னைப் பார்த்து 'சந்தேகத்தோடு' சிரித்துவிட்டுப் போனார்கள். அசடு வழிய சிரித்து சமாளித்தேன். இடையிடையே பெரிய "டோஸ்கள்."

"ஹலோ! நரேஷ் என்னடா காலேஜ் விடுற நேரத்தில இங்க நிக்கிற?" இது என் பழைய நண்பன்.

**எம். சுரேஷ்**

"ஹி...ஹி... என்னோட தங்கச்சி இங்கதான் படிக்கிறா அதான் கூட்டிக் கிட்டுப் போக நிக்கிறேன்."

"பாத்துடா... தங்கச்சியை மட்டும் கூட்டிக்கிட்டுப்போ." அவன் கிண்டலாகக் கூறிக்கொண்டு இல்லாமல் போனான். இதற்கிடையில் எனக்குத் தெரிந்த ரஜனி டீச்சர் என்னை ஒரு சந்தேக நோக்கோடு பார்த்துவிட்டுப் போனது மனதிற்கு மிகுந்த சங்கடமாய் இருந்தது.

இன்னும் ஃபிகரைக் காணவில்லை! எந்த வேலைக்குப் போனாலும் இந்த 'மாமா' வேலைக்கு மட்டும் போகவே கூடாது. திரும்பிப் பார்த்தேன். 'திக்'

"இங்க என்ன தம்பி செய்யிறீங்க?" என் மாமா வேதாசலம் நின்று கொண்டிருந்தார். என்ன பொய் சொல்வதெனத் தெரியாமல் கடிகாரத்தைப் பார்த்தேன். நேரம் மாலை 5.30 மணியைத் தாண்டிக் கொண்டிருந்தது. கிட்டத்தட்ட 3 1/2 மணிநேரம் காலேஜ் வாசலில் நின்ற களைப்பை மறைத்து போலியாய் சிரித்து,

"ஹி...ஹி...ஹி... அது.. வந்து மாமா... இந்த காலேஜ்ல ஊனமுற்றோருக்காக நிதி சேக்கிறாங்களாம். அதான் நானும் என்னால முடிஞ்ச தொகையை கொடுக்க லாம்னு வந்தேன். ஆனா எங்க குடுக்கிற துன்னுதான் தெரியல்ல." பாக்கெட்டில் இருந்த 350/= பணத்தை அள்ளிக் காட்டினேன். (எப்படியும் தப்பிக்க வேண்டுமே) ஆனால்...

"என்ன தம்பி? இதுகூட தெரியாம இருக்கீங்களே..... அதோ அங்க வைச்சிருக் காங்களே அந்த உண்டியலுலதான் தம்பி பணத்தைப் போடணும். போய் போட்டுட்டு வாங்க."

மாமா கூறியதும் எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. ஐயோ என் 350/= ரூபா...இப்பிடி ஊனமுற்றோருக்கு இங்க நிதி சேக்கிறது தெரிஞ்சிருந்தா நான் அப்பிடி சொல்லியிருக்கவே மாட்டேனே, உள் மனம் அழுதது.

"தம்பி! போய் போடுங்க தம்பி."

"அது...அது..வந்து மாமா."

"என்ன தம்பி? வெக்கமா இருக்கா? இங்க தாங்க நானே போட்டுட்டு வாறேன்." கையில் வைத்திருந்த 350/= ரூபாயை பிடுங்கிக்கொண்டு சென்று உண்டியலில் போட்டுவிட்டு திரும்பி வந்தார். நான் 350/= ரூபாயை பறிகொடுத்த சோகத்தில் அசடு வழிந்தேன். (இது தேவையா?)

"ஹி...ஹி...ஹி..."

"தம்பி! இப்ப ஒங்க மனசுக்குத் திருப்திதானே?"

"ஹி...ஹி...ரொம்ப திருப்தியா இருக்கு மாமா..." அவன் சொன்னாலும் சொல்லாட்டியும்' நாளைக்கு விடிகிறதுக்குள்ள அவனை துறவறம் பூண வைக்கிறேன்.'

□□□

"ஆகா! என் தூதுவன் வந்துவிட்டான். நீ வரும்வரைதான் வழிமேல் விழிவைத்துக் காத்திருந்தேன். நண்பா என் காதல் தேவதையைக் கண்டாயா?"

"ஆமாம் கண்டேன்."

"ஆகா! மிக்க மகிழ்ச்சி, மிக்க மகிழ்ச்சி, அவள் எனக்குக் கூறச் சொல்லி ஏதாவது செப்பினாளா?"

"நிறையச் செப்பினாள், இடைக்கிடை துப்பினாள்."

"துப்பியதை மறந்து செப்பியதை மட்டும் சொல்."

"தாங்கள் சற்று எழுந்து ரூமுக்குள் வாருங்கள். கதவை மூடிவிட்டுச் சொல்கிறேன்."

"ஆகா! அதுவும் அருமையான யோசனைதான்."

அவன் உள்ளே சென்றதும் கதவு மூடப்படுகிறது.

"ஒங்க மூஞ்சிக்கெல்லாம் ஒரு லவ்வு அதுக்கு செந்தமிழ்ல டயலாக் வேற. இது தேவையா..." பளார், டிஷ்ஷ், பளார்...!

■

# ஒரு துரோகத்தின் விலை

**வாழையூர் ஸ்ரீ வரணி**

காத்திருந்தாள் வதனா!

சுரேஷ் இன்னும் வரவில்லை.

சில நாட்களாகவே இப்படித்தான். சொன்ன நேரத்திற்கு வருவதில்லை, வந்தாலும் சரியான பேச்சில்லை. வேண்டாவெறுப்பாக பேச்சுக்கள். சில சமயங்களில் வருவதே இல்லை. கடற்கரையில் காத்திருந்த வதனாவின் கண்ணில் நீர் முத்துக்களாய் உதிர்ந்து மணலுள் புதைந்து போயின. வேதனைகள் நெஞ்சை மேவிப் படர்ந்தன. 'எந்தவொரு காரணமும் யில்லாமல் சுரேஷ் ஏன் இப்படி இருக்கிறார்?' என யோசித்தவள் சிந்தனையில், காரணம் பிடிபடவில்லை.



காத்திருந்தாள், வரவில்லை சுரேஷ்.

ஏமாற்றத்தோடு எழுந்தாள். திரும்பி நடக்கத் தொடங்கியவளின் பார்வையில் தூரத்தே சுரேஷ் வருவது தெரிந்தது.

மீண்டும் அமர்ந்தாள்.

அருகே வந்தான் சுரேஷ்.

"என்ன வெகுநேரமா காத்திருக்கிறீரா?"

பேசாமலிருந்தாள்-பேசாமலிருந்தாள்.

"என்ன செய்ய வதனா, ஓஃபிசில இருந்து வெளிக்கிடயில தாரிணி, தன்னைக் கொஞ்சம் வீட்டில விடச் சொன்னாள். விட்டுட்டு வாறதுக்குள்ள கொஞ்சம் லேட்டாயிடுச்சி, சொறி" ஆச்சரியமாய் தலை நிமிர்த்திப் பார்த்தாள் வதனா!

சில நாட்களாகவே லேட்டாக வரும்போதெல்லாம் சுரேஷின் பேச்சில் தாரிணிதான் நிரம்பி அடிபட்டாள். ஒவ்வொரு செயலிலும் தாரிணியைக் காரணமாக்கி, அவளோடு போனேன், இருந்தேன் எனும் பேச்சுக்களே அதிகம். அவன் எண்ணம் புரியாது சுரேஷைப் பார்த்தாள் வதனா.

"சரி லேட்டாயிடுச்சி வதனா எழும்பும் போவம்"

'வந்தவுடன் போகவா? அப்போ நீ பேச வரவில்லையா? என்னை அழைத்துப் போகவே வந்தாயா என் காதலா?' மனசுக்குள் நினைத்தாள் வதனா.

நாட்கள் ஓடின.

இப்போதெல்லாம் சுரேஷ்-வதனாவின் சந்திப்பு அருகியே விட்டது. ஏன் இல்லையென்று கூட கூறலாம்.

பொறுத்துப் பார்த்தாள் வதனா. என்ன மனிதன் இவன்? இவ்வளவு காலமும் நேசமும், பாசமும் அன்பும் அனைத்துவிட்டு.......

இப்போது திடீரென என்ன நடந்தது? துணைமாட்டாது சுரேஷைச் சந்திக்கச் சென்றாள் வதனா. அலுவலகத்தில் அவன் விடுமுறை என்றார்கள். அதிர்ந்தாள் வதனா. தாரிணியுடனா...? பிக்னிக்கா...?

நெஞ்சில் நெருப்பு மூள, தீயாய் தகித்தது மேனி. மெல்ல மெல்ல சுரேஷின் விலகலுக்கு காரணம் பிடிபட்டது, வதனாவிற்கு! அதுகூட உறுதியானது சில நாட்களில்.

ஹோட்டலொன்றில், தனிமையில் ஓரமாய் ஒரு மேசையில் அமர்ந்திருந்த வதனாவிற்கு சுரேஷும் தாரிணியும் கைகோர்த்து உள்ளே வந்து அவளைக் காணாது அப்பாலிருந்த மேசையில் அமர்ந்தது முழுதாய்- துல்லியமாய் தெரிந்தது.

கண்ணில் நீர் கசிந்தது.

'சுரேஷ் நீயா இப்படி?... எப்படி எப்படியெல்லாம் என்னிடம் அன்பு வைத்தாய் ஏன்? ஏன் சுரேஷ் இப்படி?... ஓ... கடைசியில் நீயும் வழமையான ஆண்களின் பட்டியலில் தானா?' அவள் நெஞ்சம் மௌனமாய் அழுதது. அவள் அழுகையை மறந்துபோகச் செய்தது அவர்கள் பேச்சு.

"தாரிணி, ஐஸ்கிறீம் சாப்பிடலாமா?" சுரேஷ்கேட்க, அவள் தலையாட்டி ஆமோதித்து பண்ணினாள். இடைநேரத்தில் கேட்டாள் தாரிணி.

"ஏன் சுரேஷ், உங்களுக்கு வதனா என்றொரு லவ்வர் இருக்காங்களா?"

அதிர்ந்தாள்.

"இல்லையே, யார் சொன்னாங்க தாரிணி? வதனா எனக்கு சும்மா பழக்கமே தவிர வேறெந்த உறவுமில்லை. கூடவே நான் காதலிக்க அவளுக்கு என்ன தகுதியிருக்கு?" சுரேஷ் சொல்லச் சொல்ல நொறுங்கிப் போனாள் வதனா. உதட்டு ஓரம் லேசாய் ஒரு முறுவல் தோன்றியது. அவர்களறியாமல் விலகினாள்.

*****

அதிர்ந்துதான் போனான் சுரேஷ்.

"தாரிணியா இப்படிச் செய்தாள்? எப்படி, எப்படி? என்னிடம் எவ்வளவு காலமாகப் பழகி அன்பு வைத்து, கை கோர்த்து நடந்து- எப்படி நடந்தது இது?" வெறுப்பாய் கையிலிருந்த திருமண அழைப்பிதழை வெறித்தான் சுரேஷ்.

'ஜீவன்-தாரிணி' என்றிருந்த திருமண அழைப்பிதழை திரட்டிய மொத்தக் கோபத்தில் நினைவில் வதனா சிரித்தாள்.

(சுரேஷை இன்னும் தண்டிக்க விரும்புவோர்கள், பின்னர் சுரேஷ் வதனாவைத் தேடிப் போனதையும், அவள் ஏற்கனவே மண வாழ்க்கையில் அடியெடுத்திருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்ததையும் வேண்டுமானால் சேர்த்துக் கொள்ளுங்கள்-திருப்தியில்லையா?)

# ரயிலுக்கு நேரமாச்சு

**செக்கன் கதை**

**-கவிப்பிரியா நிஷா-**

"வாங்க பாட்டர் வாங்க."

"என்ன 'பொண்ணுமணி' சௌக்கியமா?"

"ஏதோ இருக்கேன். ஆமா என்ன 'கிழக்கு வீதி' பக்கமா வந்திருக்கீங்க?"

"வீட்ல விசேஷங்க."

"என்ன விசேஷம்?"


"விடிஞ்சா கல்யாணம்."

"யாருக்கு?"

"நம்ம 'அண்ணாமலை'க்குத்தான்."

அட உங்க மகனுக்கா...ஆமா பொண்ணு யாரு?"

"பெரிய கவுண்டர் பொண்ணு.' பேரு 'செவ்வந்தி."



"ஆங்... 'சின்ன கவுண்டர்' அண்ணன் மகளா...பொண்ணோட அப்பா எப்படி?"

"சகலகலா சம்பந்தி.' ரொம்ப நல்லவரு."

"ஆமா உங்க 'தங்க மகன்' இன்னும் ஊர்சுற்றிக்கொண்டுதான் இருக்கானா?"

"இல்லீங்க அவனுக்கு 'வேலை கிடைச்சிடுச்சு."

"அப்படியா?"

"ஆமா 'எங்க வீட்டுப் பிள்ளை'யும் சம்பாதிக்க ஆரம்பிச்சிட்டான். இப்போ அவனும் 'உழைப்பாளி' ஆகிட்டான்."

"ரொம்ப சந்தோஷம். தம்பி எங்க வேலை பார்க்கிறான்?"

"ஏர்போர்ட்ல."

கல்யாணத்திற்கு அப்புறம் பொண்ணோட வசிப்பிடம் 'பொறந்த வீடா புகுந்த வீடா?"

"புகுந்த வீடு'தான்."

"மாமியார் வீடு' பொண்ணுக்கு ஒத்து வருமா?"

நிச்சயமா ஒத்து வரும்."

"அது எப்படி 'தெய்வவாக்கு' மாதிரி சொல்றீங்க."

"பொம்பளைங்க சமாச்சாரம்' ஒருவருக் கொருவர் விட்டுக்கொடுத்தா சரியாயிடும்."

"அதுசரி உங்க மகன் 'அம்மா பிள்ளை' தானே?

"இதிலென்ன சந்தேகம். அவ 'பெற்றெடுத்த பிள்ளை' அவ பிள்ளைதான்."

"அப்போ கல்யாணத்திற்கு பிறகு 'மனைவி சொல்லே மந்திரம்'னு அவன் நெலச்சிட்டா?"

"கவலைப்படமாட்டோம் முன்னா 'பொண்டாட்டி சொன்னா கேடுக்கணும்'னு நாங்களோ அவனுக்கு சொல்லிட்டோம்."

"சிறிஞ்சதுபோ. ஆமா கல்யாண 'வீடு' எங்க எடுத்து இருக்கிறீங்க?"

"அண்ணா நகர் முதல்தெரு' வீடு!"

"நம்ம 'பேண்ட் மாஸ்டர்' வீடும் அங்கதானே இருக்கு."

"ஆமாமா...அவரோட வீட்டுக்கு 'அடுத்த வீடு'தான் கல்யாணவீடு...."

'கிழக்குச் சீமையிலே' இருக்கிற 'தர்மதுரை'க்கு திருமண அழைப்பிதழ் கொடுக்கணும் கல்யாணத்திற்கு கண்டிப்பா வந்திடுங்க. அடடே...'ரயிலுக்கு நேரமாச்சு.' நான் வரட்டுமா? ம்...போயிட்டு வாங்க!" 'கல்யாண பரிசு' வாங்கிட்டு கண்டிப்பா கல்யாணத்திற்கு வாறேன். மணமக்களுக்கு இப்போதே என்னுடைய 'நல்வாழ்த்துக்கள்.'

இவ்வாரம் (03.04.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வி.யில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும். அழகு தமிழில் தருவது: இராஜகுமாரன்

# மகாபாரதம்

அங்கம் 23



காலத்தின் குரல்: கல்வி எனும் மனதுக்கு தனியான வர்ணமுமில்லை, தனிச் சுவையுமில்லை. அமிர்தத்துடன் கலந்தால் அமிர்தமாகும். அதேபோல் நஞ்சுடன் கலந்தால் நஞ்சாகவும் மாறிவிடும். அஸ்தினாபுர குருகுலத்தில் இவ்வுண்மையினைக் காணலாம்.

துரோணாச்சாரியார் துரியோதனனுக்கும் பீமனுக்கும் கதாயுதப் பயிற்சியினை ஒரே தன்மையில்தான் போதிக்கிறார். இருப்பினும் இருவர் கைகளிலும் சுழலும் கதம் வெவ்வேறு கோணத்தில் அல்லவா சுழலுகின்றது!

-காட்சி தொடக்கம்-

துரோணாச்சாரியாரின் குருகுலம்.

துரோ: கதாயுதப் பிரயோகத்திற்கு மிகவும் அவதானம் அவசியம். இந்த ஆயுதத்தை இடுப்புக்குக் கீழ் பிரயோகிப்பது சட்டப்படி தவிர்க்கப்பட்டுள்ளது. இக்கட்டுப்பாட்டை மீறியவன் சுத்த வீரனாகக் கருதப்பட மாட்டான். துரியோதனா...! பீமா! எங்கே பயிற்சி செய்யுங்கள் பார்க்கலாம்.

இருவரும் கதாயுதங்களைச் சுழற்றி பயிற்சி செய்கின்றனர்.

யுதிஷ்: குருதேவா! கதாயுதப் போரில் துரியோதனன் நிகரில்லாதவனாக விளங்குவான் என்று கருதுகிறேன்.

துரோ: சந்தேகமில்லாமல் இப்போர்க்கலையில் துரியோதனன் சிறந்து விளங்குவான்.

***

ஏகலைவன் தனது வீட்டில் பயிற்சி பெறுகிறான். நாய் ஒன்று குரைக்கிறது.

ஏகலைவன்: அஸ்தினாபுரத்து நாயே! வாயை மூடமாட்டாயா? இதோ உன் வாயை அடைக்கிறேன்.

ஏகலைவன் பாணம் விடுகிறான். வாயில் அம்பு பாய்ந்த நிலையில் துரோணரின் குருகுலத்துக்கு அந்த நாய் வருகிறது.

அர்ச்சுனன்: குருதேவா...! இதுபோன்று நான் என்றுமே கண்டதில்லையே!

துரோ: என்னுடன் வாருங்கள்...!

ஏகலைவன் பயிற்சி செய்யும் இடத்தை துரோணரும் சீடர்களும் சென்றடைகின்றனர்.

துரோ: வில் வீரனே...! நீ யார்?

ஏகலை: குருதேவரே! ஏகலைவனாகிய எனது பணிவான வணக்கத்தை ஏற்றருளுங்கள்.

அர்ச்: நீ எவ்வாறு எங்கள் குருவின் சீடனானாய்?

ஏகலை: எனது குருதேவரின் மாணாக்கர்களான எனது சகோதரர்களே! உங்களுக்கும் எனது வணக்கம்!

துரோ: அர்ச்சுனனின் கேள்விக்கு இன்னும் பதில் இல்லையே!

ஏகலை: நிச்சயமாக தாங்களே என் குருநாதர். தங்களிடமே கலைகளைக் கற்றேன். என்னுடன் வாருங்கள்.

தனது வீட்டுக்கு எல்லோரையும் ஏகலைவன் அழைத்துச் செல்கிறான். அங்கே துரோணாச்சாரியாரின் சிலை இருக்கிறது.

ஏகலை: தாங்கள் இவர்களுக்குப் பயிற்சி அளிக்கும்போது மறைவிலிருந்து பார்ப்பேன். தங்களை மானசீகக் குருவாக வரித்து தங்கள் சிலையிடம் ஆணைபெற்று கலைகளைப் படித்தேன் குருதேவா...!

துரோ: நீ யார் என்பதை முதலில் கூறு..

ஏகலை: மகத நாட்டரசன் ஜராசந்தனிடம் வீரனாக இருந்தவர் என் தந்தை.

துரியோ: அப்போ எனது நண்பனாக இருக்கச் சம்மதமா?

ஏகலை: அஸ்தினாபுரிக்கும் மகத நாட்டுக்கும் நல்லுறவு இருந்தால் மட்டுமே நாம் நண்பர்களாக முடியும்.

துரோ: நீ ஒரு சக்தி வாய்ந்த வில் வீரனாகி விட்டாய் ஏகலைவா! என்னை குருவாக ஏற்று வில் வித்தை பயின்ற நீ எனக்கு குருதட்சணை தர வேண்டாமா?

ஏகலை: தங்கள் கோரிக்கை எதுவோ அதனைத் தட்டாமல் தருகிறேன் குருதேவா...!

துரோ: எனது குருதட்சணையாக உனது வலதுகைப் பெருவிரலைத் தருவாயா..?

ஏகலை: ஆம்! நிச்சயமாகத் தருகிறேன்.

ஏகலைவன் தனது வலது பெருவிரலை வெட்டி துரோணரிடம் தருகிறான்.

காலத்தின் குரல்: அர்ச்சுனனை உலகிலேயே தலைசிறந்த வில்லாளனாக்குவேன் என வாக்களித்த துரோணர் ஏகலைவனின் விரலை குருதட்சணையாகப் பெற்று வாக்கைக் காப்பாற்றினார். ஏகலைவனின் கையிலிருந்து பெருகிய இரத்தம் குருச்சேத்திரப் போரில் சிந்தவிருக்கும் இரத்தத்தின் ஒரு பகுதியே! ஏகலைவன் அர்ச்சுனனுக்கு ஒரு சவாலாவதைத் தவிர்க்கலாம். ஆனால் குந்தியின் மூத்த மகன் கர்ணன் பரசுராமரிடம் வில்வித்தை கற்பது துரோணருக்கு தெரியாது போதும். பயிற்சிக் களத்தில் கர்ணன் விடும் பாணங்களின் ஓசை எனக்கும் கேட்கிறது.

***

கர்ணனின் பயிற்சிக் களத்தில் வில்வித்தையில் பயிற்சி நடைபெறுகிறது. பரசுராமர் பயிற்சி அளித்துவிட்டு கர்ணனை ஓய்வெடுக்க அனுப்புகிறார்.

கால.குரல்: (தொடர்கிறது) சத்திரிய குலம் அனைத்தையும் அழிக்கச் சபதம் பூண்டவர் பரசுராமர். உலகை வென்று சூரியனின் தந்தையான பிரஜாபதியிடம் ஒப்படைத்தவர். சூரியவம்சத்திலுதித்த இராம பிரானுக்கு தனது விஷ்ணு தனுசு என்ற வில்லை ஒப்படைத்தவரும் பரசுராமர்தான். பிரஜாபதியிடம் கற்ற ஒரே சத்திரியர் கங்கை புத்திரரான தேவவிரதன் என்னும் பீஷ்மர் மட்டுமே.

***

பரசுராமர்: கர்ணா! ஒரு வில் வீரனின் உயிர் அவனுடைய அம்பறாத்தூணியில் தான் இருக்கும். அந்திக்கும் அட்டுழியத்துக்கும் ஆதரவாக கணைகளைப் பாவித்து வில் வித்தைக்குக் களங்கம் சேர்க்கலாகாது. இதனை மறந்தால் அம்புகள் அவற்றின் சக்தியை இழந்துவிடும். அவனுடைய அரியாற்றலையும் இழக்கவேண்டி நேரிடும். கங்கா புத்திரர் தேவவிரதனைத் தவிர உன் போன்ற வீரன் எவருமே எனக்கு இன்றுவரை சீடனாக அமையவில்லை. கலையின் பெருமையை நீ பாதுகாக்கவில்லையானால் அப்போதே உன் அரியாற்றலை நான் உன்னிடமிருந்து கவர்ந்து விடுவேன். அதுவே குருதட்சணையாகவும் ஆகும். நீ போய் வரலாம்.

பின்னணிப் பாடல்:

குருவின் பெருமைக் கெழில் சேர்ப்பவனே
பெரும் பேறுடை முதல் மாணவனாவான்
அருளும் அறிவும் அவனுடை அணியாய்
கருவாய் உறைந்து கொலுவேற்றிடுமே!

-காட்சி மாற்றம்-

துரோணரின் குருகுலம்.

அஸ்வத்தாமன்: அப்பா! நான் உங்கள் மகன். இருப்பினும் என்னிடம் நீங்கள் பாசம் காட்டுவதில்லை. அர்ச்சுனன் மீது உங்கள் முழுக்கவனமும். இது எனக்குக் கவலை தருகிறது.

துரோ: நீ எனது மகனானாலும் குருகுலத்தில் நீயும் ஒரு மாணவனே! எனது வீட்டில் உனக்கு முதலிடமுண்டு. இங்கு சிறந்த மாணவனுக்கே முதலிடம் தரப்படுகிறது. அஸ்வத்தாமா! அர்ச்சுனன் மூலமே நான் நாராயணனைத் தரிசிக்கிறேன்.

அஸ்வ: பரீட்சை நடத்தப்படாமல் சிறந்த வீரனை எவ்வாறு அடையாளம் காணமுடியும்?

துரோ: அப்படியா? உனது திருப்திக்காக பரீட்சையே வைக்கிறேன்.

***

மாணவர்களுக்கு துரோணர் பரீட்சை வைக்கிறார்.

துரோ: மாணவர்களே! அதோ அந்த மரத்தின் மீது பறவை வடிவில் ஒரு பொறி இருக்கிறது! இதுவே உங்கள் குறி. யுதிஷ்டிரா..! அதோ அங்கே என்ன தெரிகிறது?

யுதிஷ: வானம்... பூமி...

துரோ: இல்லை... துரியோதனா..!

துரியோ: அங்கே இலைகளுக்குள்ளே ஒரு குருவி.

துரோ: இல்லை...அஸ்வத்தாமா? நீ என்ன காண்கிறாய்?

அஸ்வ: உங்கள் பாதம், மரம்... இலை களினூடே ஒரு பறவை.

துரோ: இல்லை! நீ போகலாம். அர்ச்சுனா! கவனமாகப் பார்! என்ன காண்கிறாய்?

அர்ச்: குருவியின் தலை.

துரோ: இப்பொழுது நன்றாகப் பார்!

அர்ச்: குருவியின் கண் மட்டுமே தெரிகிறது குருவே.

துரோ: மிகவும் சரி. சிறந்த வில்லாளனுக்கு தனது குறியைத் தவிர வேறு எதுவுமே தெரியக்கூடாது.

அஸ்வ: என்னை மன்னியுங்கள் குருதேவா!

துரோ: மகனே! உன்னால்தான் எனது வம்சம் தழைக்க முடியும். ஆனால் ஒரு மரத்தைக் கறையான் அரிப்பது போல பொறாமை மனிதனுடைய நல்மனத்தை அழித்துவிடும். நீ என் மகன்தான். ஆனால் என் சிறந்த மாணாக்கன் அர்ச்சுனனே!

பின்னணிப் பாடல்

குருவின் பெருமைக் கெழில் சேர்ப்பவனாய்
பெரு மதிப்பின் முதல் மாணவனாகி
அருள் நிறை கருணைக் கடவுமானான்
கிருஷ்ணன் என்பான்-குருகுல மதனில்.

-காட்சி மாற்றம்-

சாந்திப முனிவரின் குருகுலம்.

சாந்தி: கிருஷ்ணனை அழைத்து வாருங்கள்.

கிருஷ்ணன் அந்த குருவை வணங்குகிறான்.

சாந்தி: கிருஷ்ணா! கல்வி கற்கும் பணி முடிந்தும் குரு மாதாவின் விருப்பத்துக்காகவே உங்கள் இருவரையும் இங்கு தாமதிக்க வைத்தேன். நாளை அதிகாலை குருமாதாவின் கண்ணில் படாமல் நீங்கள் மதுராபுரி நோக்கிச் சென்று விடுங்கள்.

கிருஷ்: குருமாதா உணவுடன் காத்திருப்பாரே! அவரிடம் போய் விட்டு புறப்படுகிறோமே குருதேவா! தங்களுக்குரிய குருதட்சணை அளிக்காமல் - நாங்கள் போவது சரியல்லவே!

சாந்தி: கிருஷ்ணா! லீலாவினோதனே! என்னுடனேயே விளையாடுகிறாயா?

கிருஷ்: விளையாட்டிலும் கடமை ஒன்று இருக்கிறதே! குருதட்சணை வழங்குவது மாணாக்கரின் கடமை தானே!

சாந்தி: அவ்வாறானால் எதை விரும்புகிறாயோ அதனையே கொடு.

கிருஷ்: குருமாதாவைத் திருப்திப் படுத்தி மகிழ்வுறுப்பிய பின் செல்கிறேன் குருதேவா...! குருமாதா எனக்குக் காட்டிய அளவற்ற பாசம் ஒரு மகனுக்கு மட்டுமே தரக்கூடியது. அந்தப் பாசப் பிணைப்பினை அறுத்துவிட்டுச் செல்ல முடியவில்லை குரு பெருமானே! தங்கள் மகனைக் கண்டு பிடித்தேயாக வேண்டும்.

சாந்தி: எங்கள் மகன் பிரிந்து பல ஆண்டுகளாகி விட்டனவே! அவனை எங்கே தேடப் போகிறீர்கள்? நீங்கள் போவது அவனுக்குக் கவலையாகத் தானிருக்கும். காலம் அவனது கவலையை மறக்க வைத்துவிடும்.

கிருஷ்: தங்கள் மகன் எங்கிருக்கிறானோ அங்கே அவனை நான் கண்டு பிடிப்பேன்.

***

குருமாதாவிடம் கிருஷ்ணனும் பலராமனும் செல்கின்றனர்.

கிருஷ்: அம்மா! உணவு உட்கொள்ள வில்லையா?

குருமா: உன்னை நான் எங்கும் போகவிடப் போவதில்லை!

கிருஷ்: தாங்கள் என்மீது காட்டிய பாசத்துக்கு ஈடாக ஏதையும் தராமல் நான் தங்களை விட்டுப் பிரியேன் தாயே!

குருமா: உன்னிடம் பிரதி உபகாரம் கேட்டேனா? உன்னை அருகில் வைத்தே என் மகனின் பிரிவை மறந்தேன். நான் உன் மீது வைத்த பாசத்தை தேவகி, யசோதா ஆகியோரின் பாசத்துடன் ஒப்பிடமுடியாதுதான். அந்த நாராயணன் உலகை இரட்சிப்பவனாக இருக்கலாம். ஆனால் தாயின் அன்பை அறிய அவன் ஒரு தாயல்லவே!

சாந்தி: ஒரு குருமாதாவுக்குரிய வார்த்தைகள் அல்ல இவை. அவன் தருவது எதுவானாலும் ஏற்றுக்கொண்டு அவனை மதுராபுரி போக விட்டுவிடு.

குருமா: நான் தடுக்கவில்லை. ஆனால், நான் மனப்பூர்வமாக - மகிழ்ச்சியுடன் வழியனுப்புகிறேன் என்று கூறினால் அது தவறாகும் பிரபு!

பலராமன்: நேரமாகிவிட்டது அம்மா இன்றாவது உங்கள் கையால் இந்த மூத்த மகனுக்கு உணவு ஊட்டிவிட மாட்டீர்களா? நந்தகோன் கிராமத்திலோ மதுராவிலோ நான் பசியாற உணவு உண்டவனல்ல. ஏனெனில் நான் மூத்தவனாகப் பிறந்துவிட்டேன்.

கிருஷ்: அண்ணா! நீங்கள், எனக்கு அண்ணனாகப் பிறந்தாலென்ன தம்பியாகப் பிறந்தாலென்ன. நீங்கள் வருந்தத்தானாக வேண்டும்!

சாந்தி: ஒரு தாயின் பாசத்திலும் அன்பிலும் சகல பிள்ளைகளுக்கும் சமமான உரிமையுண்டு.

பலரா: அம்மா பசிக்கிறது. உணவளியுங்கள். உங்களுடைய மகனைத் தேடிப் புறப்படுகிறோம். முதல் கவளத்தை எனக்கூட்டுவீர்களானால் அதுவே எமக்கு வெற்றிக்கு அறிகுறியாகும்.

கிருஷ்: அதன் அர்த்தம் என்ன அண்ணா?

பலரா: எஞ்சியுள்ள கவளங்களைப் பாதுகாப்பதற்குத்தான்!

காலத்தின் குரல்: கிருஷ்ணனும் பலராமனும் புறப்படுகின்றனர். தான் நாராயணனின் அவதாரமானாலும் பெற்ற கல்விக்கு பிரதியுபகாரம் செய்யாமல் விடுவது அழகல்ல என்பதனால் கிருஷ்ணன் குருதட்சணை அளிக்கும் வழிதேடிச் செல்கிறான். தாயாத்திய அரக்கனை வெற்றிகண்டு அவனிடமுள்ள 'பஞ்சசைனியம்' என்ற சங்கைப் பெறுவது கிருஷ்ணனின் குறிக்கோள்களில் மற்றுமொரு பிரதானமான அம்சம். மகா பாரத மகாகாவியத்தின் முக்கியமான கட்டமாக விளங்கவிருக்கும் குருச்சேத்திரப் போரில் பெரும் பங்கினை பஞ்சசைனியம் சங்கு வகிக்கிறது. அதனைப் பெற்று கிருஷ்ணன் சாந்திப முனிவரின் ஆசிரமம் திரும்புகையில் குருமாதா ஓடிச்சென்று வரவேற்கிறார்.

கிருஷ்: அம்மா! தங்கள் மகனை அழைத்து வந்துவிட்டேன்.

சாந்.மகன்: அம்மா! தங்களை வணங்குகிறேன்.

குருமா: பிரிந்த மகனை மீண்டும் அடைந்ததில் ஆனந்திக்கிறேனோ..? அல்லது உன்னை இனிமேல் பிரியப்போவதால் துயரக் கடலில் மூழ்கடிக்கிறேனோ...?

கிருஷ்: அம்மா! எங்களுக்கு விடைதாருங்கள்!

பலரா: அம்மா! இவன் இவ்வளவில் எவருடனும் நெருக்கமாகப் பழகமாட்டான். ஆனால் பழகிவிட்டால் அவர்களிடமிருந்து சுலபமாக விலக முடியாது.

குருமா: சென்று வாருங்கள்! நீடூழி வாழ்வீர்களாக!

கிரு.பலரா: குருதேவா! எங்களுக்கு விடை கொடுங்கள்.

சாந்தி.மகன்: அப்பா...!

கிருஷ்: குருதேவா! இதோ..!

பலரா: குருதேவா! கிருஷ்ணன் தரும் இந்தத் தட்சணைப் பொருளை ஏற்றுக் கொள்ளுங்கள். இதனுள் என்ன இருக்கிறது என்பதனை நாங்கள் அறிய மாட்டோம்.

சாந்தி: இது பஞ்சசைனிய சங்கல்லவா?

கிருஷ்: குருமாதாவும் தாங்களும் இதனை ஏற்றருள வேண்டும்!

சாந்தி: கிருஷ்ணா! இது உன்னைத் தவிர வேறு எவருக்கும் உரித்தாகாது. உனக்காகவே இதுவரை காத்திருந்தது. இதனை நீ ஊதினால் புதிய யுகம் பிறக்கிறது என்பதே பொருள்.

கிருஷ்ணன் சங்கை ஊதுகிறான்.

பின்னணிப் பாடல்:

பாரினில் புதுயுகம் பொழுது புலர்ந்திட
பஞ்ச சைனியச் சங்கும் முழங்குதே
பஞ்ச பாதகப் பொல்லாங் கொழிந்தே
எங்கும் மங்களம் தங்கும் நாளிதே!

-காட்சி மாற்றம்-

அஸ்தினாபுரம்-அரண்மனை.

பீஷ்ம: வணக்கம் குருதேவா! அமருங்களேன்!

விதுர: வணக்கம் குருதேவா! அமருங்களேன்

துரோ: வாழ்க நீடூழி!

பீஷ்ம: தயவு செய்து இதில் அமருங்கள்.

துரோ: இது கங்கை மைந்தனுக்குரிய ஆசனம். வேறு எவரும் அதில் அமரலாகாது.

பீஷ்ம: அமருங்கள் குருதேவா! விதுரனிடம் இப்பொழுது தங்களைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தேன். குருகுலச் செய்திகள் ஏதாவதுண்டா?

துரோ: அரச குமாரர்கள் சகல கலைகளிலும் தேர்ச்சி பெற்று விட்டனர். அவர்களுடைய ஆற்றலை அஸ்தினாபுரியும் அறிய வேண்டுமல்லவா?

விதுர: தங்களைப் போன்ற பேரறிஞரிடம் பயின்ற மாணவர்களைப் பரிசோதித்துப் பார்ப்பது முறையாகாது. அவர்கள் பேராற்றல்களைப் பெற்றிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

துரோ: விதுரா! அமைச்சர் என்ற நிலையில் என்னுடன் பேசவேண்டாம்.

விதுர: மன்னியுங்கள் குருதேவரே!

பீஷ்ம: அப்படியா! அவர்கள் கற்ற கலைகளை அரங்கேற்ற ஏற்பாடு செய்யலாம் அல்லவா?

விதுர: அரசர் பெருமான் தங்களுக்கு குருதட்சணையாக ஒரு இலட்சம் பொற் காசுகளையும் ஏராளமான ஆபரணங்களையும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளார்.

துரோ: குருதட்சணை வழங்கப்படுவதல்ல; குரு விரும்பிக்கேட்டுப் பெற்றுக் கொள்வது. காலம் வரும்போது நானே கேட்டுப் பெற்றுக்கொள்வேன். அதுவரை வேண்டாம்! கொடுக்க முடியாத எவற்றையும் கேட்கமாட்டேன். இளவரசர்களின் ஆற்றலை வெளிப்படுத்துவதற்கேற்ற அரங்கினை அரசிடம் கூறி ஆயத்தம் செய்யுங்கள்.

-காட்சி மாற்றம்-

திருதராட்டிரன் அரண்மனை.

சகுனி: மகாராஜாவுக்கு வெற்றியுண்டாகட்டும்!

திருத: என்ன உமது காலடி ஓசை கேட்க வில்லையே?

சகுனி: சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் மாறும் காலடி ஓசைகளை மறந்துவிடுங்கள் மகாராஜா. உங்கள் மகன் துரியோதனனின் அபிலாசைகளில் ஓசைக்குச் சற்றுச் செவி சாயுங்கள்.

திருத: பாண்டவர்களின் காலடி ஓசைகள் கேட்கத் துவங்கியதால் துரியோதனனின் காலடி ஓசை மங்கி மறைந்து விடுகிறதே! யுதிஷ்டிரனே அரச வம்சத்தின் மூத்தவன். அத்துடன் அரியணை ஏறும் தகுதியும் பெற்றவன். இப்பொழுது தான் பெரியப்பா வந்தார். அவர்களுடைய கல்வி முடிந்துவிட்டதால் அரங்கேற்றம் வைக்க ஏற்பாடு செய்யலாம் என்று துரோணாச்சாரியார் கூறியதாகச் சொன்னார்.

சகுனி: துரோணாச்சாரியார் பீஷ்மரிடம் ஏன் இதனைக் கூறவேண்டும்? நீங்கள் தானே அவரை குருவாக நியமித்தீர்கள்? சரி அதை விடுங்கள். ஆனால் அரியணையின் அடுத்த வாரிசை நிர்ணயிக்க வேண்டிய பொறுப்பு தங்கள் உரிமை என்பதை மறக்க வேண்டாம். அரங்கில் துரியோதனன் ஆற்றல் வெளிப்படும். அதன்பின் அவனையே இளவரசனாக்குங்கள்.

துரியோ: பாண்டவர்களுக்கு அத்தகைய அநீதியை பட்டவர்த்தனமாக அளிக்க என்னால் முடியாது.

சகுனி: அரசர்கள் அநீதியாக நடக்க வேண்டுமென்பதில்லை. அவசியமேற்பட்டால் அதனையும் வெளிப்படையாகச் செய்ய மாட்டார்கள். அதேவேளை உங்கள் மகனுக்கு நீங்களே அநீதி வழங்கலாகாது. தலையெழுத்தை யார் அறிவார்? ஆண்டவன் எண்ணம் எதுவோ..?

திருத: ஆண்டவனா...?

சகுனி: ஆமாம்! துரியோதனனே அரியணை ஏற வேண்டிய விதியில்லாவிட்டால் அவனேன் அஸ்தினாபுரத்து அரசனின் மகனாகப் படைக்கப்பட்டான்? அடுத்த வாரிசினை நிர்ணயிக்கும் அளவுக்கு உங்களுடைய நிலைக்கு துரோணர் உயர்ந்துவிட்டாரா? நீங்களே அரங்க நிர்வாணப் பொறுப்புக்கான கட்டளையினை இடுங்கள் மகாராஜா!

காலத்தின் குரல்: மகாபாரதக் கதை உருவாக்கப்பட்டு பல்லாயிரம் ஆண்டுகளின் பின்னரே முறையான வரலாற்றுக் குறிப்புகள் எழுதப்பட்டன. ஆனால் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்கள் பொன், மணி, பட்டாடையின்றி மரவுரியும் தோலாடைகளும் தரித்து வாழ்ந்தனர் என்று கூறிவிட முடியாது. குருச்சேத்திரப் போரைக் கண்டவன் யான். சமகாலத்தில் காணும் சூழ்நிலைகளை அவதானித்தே கதைகள் எழுதப்படுகின்றன.

இதோ இன்று என்முன்னே பல்லாயிரக் கணக்கான பலதரப்பட்ட மக்கள் அரங்கைச் சுற்றிலும் அமர்ந்துள்ளனர். மாமன்னர் திருதராட்டிரனர் வரவிருக்கும் வாயிலிலே கண்புதைத்த வண்ணம் அத்தனை பேரும் காத்திருக்கின்றனர்.

- ஒரு வீரன் ஊதுகுழலூதுகிறான்.
- திருதராட்டிரன் ஏறும் இரதம் அரங்குள் வருகிறது.
- விதுரரின் துணையுடன் மன்னர் தமது இருக்கையில் அமர்கிறார்.
- மக்களின் வாழ்த்தொலி முழங்குகிறது.
- காந்தாரியும் குந்தியும் மற்றுமொரு இரதத்தில் வந்திறங்குகின்றனர்.
- பீஷ்மருக்கு சகலரும் மரியாதை செலுத்திய பின்னர் ஆசனங்களில் அமர்கின்றனர்.

குந்தி: அக்கா அமருங்கள்.

காந்தா: குந்தி! அரங்கில் நடைபெறும் சம்பவங்களை எனது கண்களைப் போல் நீயே எனக்கு எடுத்துக்கூறவேண்டும்.

குந்தி: அப்படியே செய்கிறேன் அக்கா! அரங்கு நிறைந்து மக்கள் வெள்ளம். மாமன்னர் அரியணையில் வீற்றிருக்கிறார். அவருக்கு வலதுபுறம் பீஷ்மர், விதுரர் அங்கும் இங்கும் ஓடிச்சென்று கட்டளைகளைப் பிறப்பிக்கிறார்.

- கிருபாச்சாரியார் இரதத்தில் வருகிறார். வாழ்த்தொலி தொடர்கிறது.

காந்தா: துரோணாச்சாரியாரும் மாணவர்களும் இன்னும் வரவில்லையா?

- குழலொலி கேட்க, துரோணாச்சாரியார் மகன் அஸ்வத்தாமனுடன் வருகிறார்.

குந்தி: அதோ துரோணாச்சாரியாரும் மகன் அஸ்வத்தாமனும் முன்வர அரச குமாரர்களும் வருகின்றனர்.

- யுதிஷ்டிரன் வருகிறான்.
- இளவரசர் யுதிஷ்டிரன் வாழ்க என்று மக்கள் வாழ்த்துகின்றனர்.
- திருதராட்டிரனின் முன் நின்று யுதிஷ்டிரன் வணங்குகிறான்.

விதுரர்: மகாராஜா! இளவரசர் யுதிஷ்டிரர் வணக்கம் செலுத்துகிறார்.

திருத: வாழ்க என் மகனே...! நீடூழி வாழ்க!

- துரியோதனன் வருகிறான்.
- மக்கள் வாழ்த்தொலி
- மன்னர் முன் மண்டியிட்டு வணங்குகிறான்.

திருத: நீடூழி வாழ்க என் மகனே!

குந்தி: அக்கா உங்கள் கண்கட்டை அவிழ்த்து பூரணப் பொலிவுடன் திகழும் உங்கள் மகன் துரியோதனனை ஒரு முறை பாருங்களேன்!

- பீமன் அரங்கில் வருகிறான்.
- மக்கள் வாழ்த்தொலி முழங்குகிறது.
- தொடர்ந்து அர்ச்சுனனும் பிரவேசிக்கிறான்.
- வாழ்த்தொலி தொடர்கிறது.

பின்னணி:

குருச்சேத்திரத்தின் முதலொலி முழங்குது
பேரொலியாகும் நாளை யம்முரசொலி
அன்று நிகழ்ந்தவை அனைத்தும் தெரிந்தோம்
இன்றே அறிந்தோம் அறிவின் தெளிவுரை
புதுயுக மதுவிப் குதயமாகுது
துதிப்போம் வாழ்த்தி வரவேற்பளிப்போம்.

(தொடர்ந்து வரும்)

எம்.ரீ.வீ. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமம் பெற்று மகாபாரதத் தொடர் வசனம் வெளியிடப்படுகிறது.

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.



அருள் ஜுவலர்ஸ்
இல. 3, செட்டியார் தெரு,
கொழும்பு–11.
தொ.பேசி: 436331


## இதயமில்லாத பயங்கரவாதம்

தென் ஆபிரிக்காவில் தேர்தல் நெருங்கிவிட்டது.

வெள்ளையரும்-கறுப்பினத்தவரும் அங்கங்கே மோதுகிறார்கள்.

இரு தரப்பிலும் உள்ள தீவிரவாதிகளின் கரங்களில் ஆயுதங்கள்.

ஆயுதத்தை தூக்கும் நேரத்தில் இதயத்தை இறக்கி கீழே வைத்துவிட்டார்கள்.

"நாமே ஆபிரிக்கானர்" என்றும் இயக்கம் ஒன்று இருக்கிறது. கறுப்பின மக்களை வெறுத்து ஒழிப்பதே அதன் கொள்கை.

அந்த இயக்கத்தை சேர்ந்த மூன்று வெறியர்கள் குடியிருப்பு ஒன்றுக்குள் புகுந்தனர். கறுப்பின வாலிபன் ஒருவனை பலியெடுத்தனர்.

பலியெடுத்துவிட்டு திருப்தியோடு தம் காரில் திரும்பும்போது பொலிஸ் தடுத்தது. அவர்கள் எதிர்க்க முனை பொலிஸ் சுட்டது. இருவர் மடிந்துபோக ஒருவன் மட்டும் உயிர்பிச்சை கேட்டு கைநீட்டினான்.

பொது மக்களும் செய்தியாளர்களும் தொலைக்காட்சி படப்பிடிப்பாளர்களும் சம்பவ இடத்தில் கூடியிருந்தனர்.

அத்தனை காட்சிகளும் செய்தியாளர்களால் கிளிக்கிளிக்

அந்த நேரத்தில்தான் அது நடந்தது. உயிர் பிச்சை கேட்டவனை நோக்கி கூட்டத்தில் இருந்து டுமீல்டுமீல். சுட்டது ஒரு கறுப்பின வாலிபன். பழிக்குப் பழி தொடர்ந்தால் மோதல் முடியாது.

தென்னாபிரிக்க அரசியல் வானை அச்சுறுத்தும் விஷயம் இந்த மோதல்கள்.

என்னதான் சட்டங்கள், மாற்றங்கள் வந்தாலும் மனதில் உள்ள இனவாதம் நிறவாதம் போகாவிட்டால் இரத்தம் சிந்துவது தவிர்க்க முடியாத விபரீதம்தான்.

கறுப்பின மக்களின் மீது சவாரி செய்த வெள்ளை நிறவெறிக் கூட்டம் தன் ஆதிக்கத்தை கைவிட மனம் வராது.





நன்றி–டைம்ஸ்

## இப்படியும் ஒரு சாதனை




தினமுரசு வாரமலர்

அமெரிக்காவைச் சேர்ந்தவர் புரூஸ் கிரீவியர். சாதனை படைக்க கின்னஸில் இடம் பிடிக்க ஆசை. ஆசைப்பட்டுக்கொண்டு மட்டும் இருந்தால் எப்படி? எனவே, கூடைப் பந்துகளை தனது கைவிரல்கள், தலை, தோள் போன்ற பல இடங்களில் ஒரே நேரத்தில் சுழலவைத்து வெற்றி பெற்றார். 18 கூடைப்பந்துகளை அவ்வாறு சுழல வைத்து சாதனையை படைத்துவிட்டார். இன்று அவர் கின்னஸ் வீரர்.

## மூடியபடி ஒரு மாபெரும் பாலம்




படத்திலே உள்ள பாலத்திற்கு உலக சாதனை வரலாற்றில் இடம் கிடைத்துவிட்டது.

காரணம் பத்திரமாக அழகான கட்டடத்தால் மிக அதிக நீளத்திற்கு மூடப்பட்ட பாலம் உலகில் இது மட்டும்தான். 1899ல் கட்டி முடிக்கப்பட்ட காத்திரமான இப்பாலத்தின் நீளம் 390.8 மீட்டர் (1282 அடி) இது இருப்பது கனடா நியூ பேர்ன்விக் மாநிலம்.

கனடாவில்தான் இப்போது நம்மவர் நிறையப்பேர் இருக்கிறார்களே. பார்த்தீர்களா? இந்தப் பாலத்தை என்று கேட்டறிந்து கொள்ளுங்கள்.

## பனியில் சறுக்கும் சாதனைப் பாவை



நோர்வே நாட்டில் பனி உறைகாலம் இம்முறை பொற்காலமாகி விட்டது. சகல நாடுகளையும் விட அங்கு குளிர் அதிகம். என்றாலும் குளிரே வா என்று அவர்கள் வரவேற்றதில் காரணம் உண்டு. எழுபது உலக நாடுகளின் 2700 வீரர்கள் குளிர்கால ஒலிம்பிக்கில் பங்கு கொண்டுள்ளனர்.

பனிக்கால விளையாட்டில் ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் பங்குகொண்டு வெட வெட குளிரில் சாதனை படைப்பது அரிய காட்சி. அதில் ஒரு காட்சியே படத்தில் உள்ளது பனியில் சறுக்கும் பாவையின்.

## திராட்சைப்பழ புடிங்

தயாரிப்பதற்கான நேரம்: 15 முதல் 20 நிமிடம். குளிரவதற்கு 4 மணி நேரம்.

நால்வருக்கானது

தேவையானவை

கோன் ஃபிளவர்– 3 மே.கரண்டி
சீனி– 4 மே.கரண்டி
பால்– 2 கோப்பை
முட்டை (மஞ்சட்கரு)–2
வெண்ணை அல்லது மார்ஜரின்– 2 மே.கரண்டி
அப்பிள் பழச்சாறு– 1/4 கோப்பை
திராட்சைப்பழம் (சிவப்பு– விதையற்றது)–1 1/2 கோப்பை
உப்பு– 1/8 தே.கரண்டி
வனிலா– 1 தே.கரண்டி.

செய்முறை: ஒரு பாத்திரத்தில் கோன் ஃபிளவர், சீனி, உப்பு ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்து பாலையும் அப்பிள் சாற்றையும் சிறிது சிறிதாக ஊற்றிக் கலக்கவும்.



அளவான சூட்டில் அடுப்பில் கலவைப் பாத்திரத்தை ஏற்றி கொதி நிலைவரை தொடர்ந்து கிளறவும். கொதித்து ஒரு நிமிடமானதும் அடுப்பிலிருந்து இறக்கிவிடவும். முட்டை மஞ்சட்கருவை வேறொரு பாத்திரத்திலிட்டு நன்றாக அடித்து அதனை கொதித்த கலவையுள்ள பாத்திரத்தில் ஊற்றி நன்றாகக் கிளறவும். பின் மீண்டும் கலவையை அடுப்பி லேற்றி அரை நிமிடமளவு தொடர்ந்து கிளறவும். அடுப்பிலிருந்து மீண்டும் இறக்கி வெண்ணை அல்லது மாஜரினை கலவையுள் விட்டு வெண்ணை முழுவதும் உருகும் வரை கிளறவும்.

இந்தக் கலவை ஓரளவு ஆறிய பின்னர் நான்கு பாத்திரங்களில் சரி அளவாக விட்டு திராட்சைப் பழங்களையும் அவற்றுள் போடவும். இதனை 4 மணி நேரம் குளிரூட்டி (பிரிட்ஜ்)யில் வைத்திருந்து பின்னர் எடுத்துப் பரிமாறலாம்.

## கை கொடுக்கும் கனிவான அழைப்பு!



பெற்றெடுத்தவளை கைவிடும் குணம் படைத்தில் உள்ள சிம்பன்சி குரங்குக்கே பிடிக்காத குணம் கீழே இருப்பது தாய். மேலே போய்விட்ட போதும் பிறந்த-வளர்ந்த இடத்தை மறவாதிருப்பது முக்கியம். கை நீட்டம்மா கை நீட்டு. மேலே வாம்மா கை நீட்டு என்று தாயை கனிவோடு அழைக்கும் குட்டி சிம்பன்சி சில மனிதருக்கு சிறப்பான முன்னுதாரணம்.




தினமுரசு வாரமலர் ... [illegible]